# TAMIL
# FOURTH READER

BY

E. MARSDEN, I

*Indian Educational Service* (

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LI
TIRUVANMIYUR :: MADRAS 41

# நான்காம்
# வாசக புஸ்தகம்

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRAR
TIRUVANMIYUR :: MADRAS 4

MACMILLAN & CO., LIMITED

MADRAS, BOMBAY, CALCUTTA AND LONDON

1916

Price 5 Annas]

[விலை, ௫ அணா

NEW AND REVISED EDITION]

[S. P. C. K. PRESS, MADRAS,

*Rights Reserved*

PRINTED AT THE

S. P. C. K. PRESS, VEPERY, MADRAS

1916

# பொருள் அட்டவணை.

## வாசக பாடம்.

| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | சிங்கம்—The Lion | 1 |
| 2. | சிங்கமும், நாயும்.—The Story of a Lion and a Dog. | 4 |
| 3. | தென்னைமரம்.—The Cocoanut Tree | 7 |
| 4. | புலி.—The Tiger | 12 |
| 5. | புலி வேட்டை.—The Tiger Hunt | 15 |
| 6. | மீன்.—Fishes | 18 |
| 7. | ஒட்டகம்.—The Camel | 21 |
| 8. | இரண்டு வர்த்தகர்களும் ஒட்டகமும்.—Merchants and their Camel | 24 |
| 9. | பகையை வெல்லல்.—The Conquest of the Enemy—A Story | 27 |
| 10. | தேகாப்பியாசம்.—Physical Exercise | 30 |
| 11. | கற்பலகை.—The Slate | 33 |
| 12. | கோதுமை.—Wheat | 36 |
| 13. | நளன்—The Story of Nala | 39 |
| 14. | நமது உடை.—Our Dress—Cotton and Wool | 43 |
| 15. | நிலக்கடலை.—The Ground-nut | 47 |
| 16. | தேயிலையும், காபியும்.—Tea and Coffee | 50 |
| 17. | வித்தையாடிகள்.—Jugglers—A Story | 57 |
| | சர்க்கரை.—Sugar | 63 |
| | தானியக்கடை.—The Grain Market | 67 |
| | பாம்பு.—The Cobra | 73 |

பாடம். பக்கம்.

21. தண்ணீர்.—Water .. .... .... .... .... 77

22. நட்பின் பெருமை.—The Story of Damon and Pythius .... .... .... .... .... 80

23. திருவள்ளுவர்.—[redacted] .... .... .... 83

24. ஹம்பி—விஜயநகரம்.—Humpi .... .... .... 85


25. தவளை.—The Frog .... .... .... .... 88

26. துருவன் என்னும் பாலபக்தன்.—The Story of Druva.. 90

27. இடியும், மின்னலும்—Thunder and Lightning .... 93

28. செய்யுட்பாடம்.—Poetry .... .... .... .... 96

# நான்காம் வாசக புஸ்தகம்.



## 1. சிங்கம்.

நான்கு கால்களையுடைய பிராணிகளுக்கு மிருகங்கள் என்று பெயர். சில மிருகங்கள் காடுகளில் திரிந்துகொண்டும், வேறு சில மிருகங்கள் ஜனங்களோடு பழகிக்கொண்டும் இருக்கின்றன. எல்லா மிருகங்களுக்கும் தலைமையானது சிங்கம்; அதனால் அதை மிருகேந்திரன் அல்லது மிருகராஜன் என்று சொல்லுவார்கள். மற்ற மிருகங்களைக்காட்டிலும் அது மிகுந்த பலமும் தைரியமும் உடையது; பெருந்தன்மையான குணமும் அதற்கு உண்டு; வீணாக மற்ற ஜந்துக்களுக்குத் துன்பத்தை உண்டாக்காது. அவற்றைக்கண்டு அது பயப்படுவதுமில்லை.

வெகு காலத்துக்கு முன் சிங்கங்கள் பல இடங்களிலும் வசித்துக்கொண்டிருந்தன. இப்போது இந்தியாவுக்கு மேற்கே சமுத்திர மத்தியில் ஆபிரிகா கண்டத்தின் நடுவேயுள்ள காடுகளில் சிங்கங்கள் விசேஷமாக இருக்கின்றன; வட இந்துஸ்தானத்திலும் சில சிங்கங்கள் உள்ளன

வென்று தெரிகிறது. காடுகளில் குட்டையான செடிகள் தழைத்திருக்கும் இடங்களிலேதான் அவைகள் பெரும் பாலும் இருக்கும்.

சிங்கம் சாதாரணமாக எட்டு அல்லது ஒன்பது அடி நீளமும் மூன்றரை அடி உயரமும் வளருகிறது. சில பெரிய சிங்கங்கள் நான்கு அல்லது ஐந்து அடி உயரம் இருக்கும். காடுகளில் உள்ள மணலைப்போல் சிங்கத்தின் சரீரம் பழுப்பு நிறமாக இருக்கிறது. ஆண் சிங்கத்துக்குமட்டும் பிடரியில் கறுப்பு மயிர் அடர்த்தியாக உண்டு. அதனால் அதற்கு 'கேசரி' என்ற பெயர் வழங்கிவருகிறது. உருவத்தில் ஆணைக்காட்டிலும் பெண் சிங்கம் சிறியது.

சிங்கத்திற்கு நீண்ட வால் உண்டு. அதன் நுனியில் மயிர் மிகவும் நெருக்கமாய் வளர்ந்து தொங்கும்; அது தன் வாலி னால் பலமாக வீசினால் மிகுந்த பலசாலியும் அந்த அடியைத் தாங்கமுடியாமல் விழுந்துவிடுவான்.

சிங்கம் பூனை இனத்தில் அடங்கும்; பூனையைப்போல் அதற்கு நீளமான மீசை மயிர்கள் உண்டு; அவற்றால் இருட்டு வேளையில் அது வழியை நன்றாக அறிந்துகொள்ளும். சதைப் பற்றுள்ள அதன் கால்களில் மிகவும் கூர்மையாக வும் அழுத்தமாகவும் நகங்கள் வளைந்து வளர்ந்திருக்கின்றன. சாதாரணமாக அவை ஒன்றேகால் அங்குல நீளம் இருக் கும்; பூனையைப்போல் சிங்கத்திற்கு அவற்றைக் காலுக்குள் சுருக்கிக்கொள்ளும் சக்தி உண்டு. அவற்றின் உதவியினால் சிங்கம் எதையும் கத்திபோற் பிளந்து கிழிக்கின்றது. அதன் உள்ளங்கால் பஞ்சுபோல் மெத்தென இருப்பதால் அது நடந்து போகும்போது அதன் காலடி ஓசை ஒருவருக்கும் கேளாது. பகல் வேளைகளில் அதன் கண்கள் ஒடுங்கி மந்தி யில் நீண்டு ஒரு பிளவுபோல் காணப்படும். இராத்திரியில் அவை விசாலமுற்று மின்னலைப்போல் பிரகாசித்துக்கொண்டி ருக்கும். பூனையைப்போல் இரவில் எதையும் சிங்கமானது நன்றாகப் பார்க்கும் வன்மையுடையது. அதன் நாக்கு வாளைப்போல் கருக்குள்ளது. அதனால், சிங்கம் எலும்பில் ஒட்டிக்கொண்டிருக்கும் மாமிசத்தையும் விடாமல் நக்கித் தின்றுவிடும்.

சிங்கம் மாமிசபட்சிணி; அதாவது மாமிசங்களைத் தின்னுமே அல்லாமல் எவ்வளவு பசியோடு இருந்தாலும் புல், வைக்கோல் முதலியவற்றைத் தின்னாது. மான்கள், காட்டுப் பசு முதலியவைகள் சிங்கத்துக்கு இரையாகும். உள்ளங் கையால் அறைந்து குதிரையின் இடுப்பை ஒடித்து அதன் தலையைப் பிளந்துவிடும். யானையின் மத்தகத்திலுள்ள ரத்தத்தைக் குடிப்பதில் அதற்கு அதிக விருப்பம் உண்டு. சிறிய மிருகங்களாகிய எருது, பசு முதலியவைகளை அது வாயில் கௌவிக்கொண்டு சிறிதும் வருத்தமில்லாமல் வேகமாகத் தாண்டிச்செல்லும். பன்னிரண்டு அல்லது பதினைந்து அடி தூரத்தில் உள்ள மிருகங்களின் மேலும் அது வேகமாகப் பாய்ந்து விழுந்து அவற்றைக் கொன்றுவிடும். இரைதேடிச் செல்லும்போது ஒன்றும் அகப்படாவிட்டால் அது தன் முகத்தைத் தரையில் வைத்துக்கொண்டு இடி முழக்கம்போல் மிகவும் பயங்கரமான கர்ச்சனையைச் செய்யும்; காட்டில் ஒளிந்துகொண்டிருக்கும் மிருகங்கள் எல்லாம் அந்த முழக்கத்தைக்கேட்டு வெளியே கிளம்பி எல்லாப் பக்கங்களிலும் ஓடும். அப்பொழுது சிங்கம் தனக்கு இஷ்டமான பிராணியைப் பிடித்துக்கொள்ளும். தான் பிடித்துக்கொண்ட இரையை பிடித்த இடத்திலேயே அது தின்பது வழக்கம். அவ்வாறு செய்வதற்கு ஏதேனும் தடை உண்டாகுமென்று தெரிந்தால், புதர்கள் நிறைந்த இடத்திற்கு அதைக் கொண்டு போய் அங்கே தின்னும்.

சிங்கத்தை எதிர்த்துக் கொல்லக்கூடிய வேறு மிருகங்கள் இல்லை. அதைக் கண்டு எல்லா மிருகங்களும் பயப்படும்; ஆனாலும், அது குரூரமான மிருகமன்று. பசி உள்ளபோது மட்டும் அது மற்ற மிருகங்களை உபத்திரவப்படுத்துமே யல்லாமல் மற்ற வேளைகளில் மிக்க சாந்தமாக இருக்கும்; சிங்கத்தை ஜனங்கள் வளர்த்துப் பழக்குவது உண்டு. அப்போது அது தன்னை வளர்ப்பவனிடம் மிக்க அன்பு பாராட்டி நாயைப்போல் அவனோடு திரிந்துசெல்லும். அற்பப் பிராணிகள் செய்யும் பிழையைப் பொறுத்துக்கொள்ளும் மேலான குணம் அதற்கு உண்டு. பிறர் செய்யும் உபகாரத்தை ஒருபோதும் அது மறவாது.

இலக்கணம்.—கால்: இது என்னசொல்? பெயர்ச்சொல்; எதனால் பெயர்ச்சொல்? கால் என்ற ஒரு பொருளின் பெயரைத் தெரிவிப்பதால் பெயர்ச்சொல். சிங்கத்தின் நாக்கு வாளைப்போல் கருக்குள்ளது: இந்த வாக்கியத்திலுள்ள பெயர்ச்சொற்கள் யாவை? சிங்கம், நாக்கு, வாள், கருக்கு.

குறிப்பு.—தலைமையானது-முதன்மையானது; அடர்த்தியாய்-நெருக்கமாய்; பலசாலி-பலமுள்ளவன்; சுருக்கி-இழுத்து; வன்மை-சக்தி; வாள்-ரம்பம்; மத்தகம்-தலை; இரை-ஆகாரம்; குரூரமான-கொடிய; உபத்திரவம்-துன்பம்; பிழை-குற்றம்.

## 2. சிங்கமும் நாயும்.

இங்கிலாந்தின் பிரதான நகரமாகிய லண்டனில் இருக்கும் கோட்டை ஒன்றில் சில வருஷங்களுக்கு முன்னே ஒரு மிருகாசயம் உண்டு. அதில் பற்பல இடங்களிலிருந்தும் சிங்கம் முதலிய பல அரிய மிருகங்கள் கொணர்ந்து வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு மிருகத்துக்கும் தனித்தனியான இடம் அதில் இருந்தது. அதிலுள்ள சிங்கத்தைப் பார்ப்பதற்கு நாலணை கொடுக்கவேண்டுமென்று விதியிருந்தது. அவ்வாறு பணங்கொடுக்க முடியாதவர்கள் பூனைக்குட்டியையேனும் நாய்க்குட்டியையேனும் அதற்கு இரையாகக் கொண்டு போய்க் கொடுத்துப் பார்ப்பார்கள்.

மேலேசொன்ன மிருகாசயத்துக்கு ஜனங்கள் போய் அடிக்கடி சிங்கத்தைப் பார்ப்பதுண்டு. ஒரு காலத்தில் ஏழை மனிதனொருவன் அதைப் பார்க்க ஆசைகொண்டு தன் கையில் துட்டு ஒன்றும் இல்லாமையால் தெருவில் ஓடிக்கொண்டிருந்த ஒரு நாய்க்குட்டியுடன் அங்கே சென்றான். பிறகு சிங்கம் இருந்த கூட்டுக்குள் அதை விட்டுவிட்டுச் சிறிதுநேரம் வெளியே இருந்து பார்த்துவிட்டு அப்பால் தன் வீட்டுக்குப் போனான்.

கூட்டுக்குள் நுழைந்தவுடனே நாய்க்குட்டி சிங்கத்தைப் பார்த்து நடுநடுங்கிப் போய்விட்டது; பிறகு கீழே விழுந்து தன்னை ஒன்றும் செய்யாமல் மன்னித்துவிடும்படி பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்வதுபோல் பாவனைசெய்து கொஞ்சமும்

அசையாமல் காலைப் பரப்பிக்கொண்டு படுத்தது. அப்போது சிங்கம் நாய்க்குட்டியின் அருகில்வந்து அதை அசைத்து மோந்துபார்த்து மிகவும் இரக்கங்கொண்டு அதற்கு ஒரு தீங்கும் செய்யாமல் சும்மா இருந்துவிட்டது.

கொஞ்சநேரம் சென்றபின் ஒரு வேலைக்காரன் அங்கே வந்து சிங்கத்தின் கூட்டுக்குள் வழக்கம்போல் தீனியைப் போட்டான். சிங்கம் அதை முதலில் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கவில்லை; நாய்க்குட்டியும் தானுமாக அதைத் தின்ன வேண்டுமென்று எண்ணியிருந்ததுபோல் தோற்றியது. சிங்கம் தன்னை ஒன்றும் செய்யாமல் விட்டதனால் நாய்க்குட்டிக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தைரியம் பிறந்தது. அதனால், தீனி கூட்டுக்குள் வந்து விழுந்ததும் நாய்க்குட்டி பரபரப்புடன் தன் பசியைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு அதனிடம் ஓடிற்று. பிறகு சிங்கமும் அங்கேவர இரண்டும் சிநேகங்கொண்டு அந்தத் தீனியைத் தின்றன. அப்பால் அந்த இரண்டு மிருகங்களுக்கும் சிநேகம் வரவர விருத்தியாயிற்று.

நாளாக நாளாக நாய்க்குட்டி சிங்கத்தைக் கண்டு கொஞ்சமும் பயப்படாமல் அதனோடு விளையாட ஆரம்பித்தது. சில சமயங்களில் சிங்கம் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது நாய்க்குட்டி அதன் முதுகின்மேல் தைரியமாகப் படுத்துக்கொள்ளும்; அதன் விளையாட்டுக்களையெல்லாம் மிருகேந்திரன் சந்தோஷமாக அனுபவித்துக்கொண்டிருந்தது.

இவ்வாறிருக்க, அந்த நாய்க்குட்டியின் சொந்தக்காரரான ஒரு கனவான் தம்முடைய நாயைத் தேடிக்கொண்டு பல இடங்களுக்கும் போய் விசாரித்து இந்த விஷயங்களையெல்லாம் கேள்வியுற்று அங்கே வந்து பார்த்தார். கூட்டுக்குள் இருக்கும் நாய் தம்முடையதுதான் என்று நிச்சயித்துக்கொண்டு அதைத் திரும்பக் கொடுத்துவிடும்படி மிருகாசயத்தின் காவற்காரனைக் கேட்டார். அவன் "பிரபுவே, நான் என்ன செய்யலாம்! தாங்களே கவனித்துப்பாருங்கள். இந்த இரண்டு மிருகங்களும் எவ்வளவு ஒற்றுமையோடு பழகிக்கொண்டிருக்கின்றன. சிங்கத்தினிடமிருந்து நாய்க்குட்டியை எவ்வாறு பிரிப்பேன்? தங்களுக்கு அது சாத்தியமாகத் தோற்றினால் தாங்களே நாய்க்குட்டியை அழைத்துக்கொண்டு

போகலாம்." என்று வணக்கமாக உரைத்தான். பிறகு கனவான் நாய்க்குட்டியைக் கூப்பிட்டார்; அவரிடம் அது வரவில்லை; சிங்கத்தினிடம் விளையாடிக்கொண்டிருந்தது. ஆதலால் அவர் சிங்கத்தினிடமிருந்து அதைப் பிரிக்க மனமில்லாமல் அவ்விடத்திலேயே விட்டுவிட்டுத் தம்மிடம்போய்ச் சேர்ந்தார்.

ஆச்சரியமான இந்த விஷயம் ஊரெங்கும் பரவிற்று. ஒவ்வொருநாளும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் அங்கே வந்து வேடிக்கை பார்ப்பார்கள். ஒருநாள் ஒரு பணக்காரர் சிங்கமும் நாய்க்குட்டியும் சேர்ந்து ஆகாரம் செய்வதைப் பார்க்க ஆசைகொண்டு அவற்றிற்கு வேண்டிய தீனியை ஒரு தட்டு நிறையக் கொண்டுவந்து கூட்டுக்குள் போடச்செய்தார். ஆகாரம் கூட்டுக்குள் விழுந்ததும் மிகவும் பரபரப்புடன் எல்லாவற்றையும் தன் காலடியில் சேர்த்துவைத்துக்கொண்டு நாய்க்குட்டியானது சிங்கத்தை நோக்கிக் குரைத்துக்கொண்டே தின்ன ஆரம்பித்தது. சில சமயங்களில் சிங்கத்தின் மேலும் பாய்ந்து குதித்தது. நாய்க்குட்டியினிடம் தான் ஏதோ பயந்துகொண்டிருப்பதுபோல் தீனி இருந்த இடத்துக்கே சிங்கம் போகவில்லை. சிறிது நேரத்துக்குப் பிறகு இரண்டும் சேர்ந்து மிகவும் குதூகலமாக இரையைத் தின்றன. பிறகு சிங்கம் படுத்துக்கொண்டு தூங்கிற்று. அப்போது நாய்க்குட்டி சிங்கத்தின்மேல் விழுந்து அதன் தலையைத் தன் நகங்களால் கீறியும் காதுகளைக் கடித்தும் அதைச் சிறிது நேரமும் தூங்கவிடவில்லை. அதைக்கண்டு அந்தப் பிரபு மிகவும் ஆச்சரியமடைந்தார்.

சில வருஷங்களுக்குப் பிறகு ஒருநாள் நாய்க்குட்டி திடீரென்று இறந்துபோயிற்று. ஆனால் அது இறந்துபோகவில்லையென்றும் தூங்கிக்கொண்டிருந்ததென்றும் சிங்கம் நினைத்து அதை இப்படியும் அப்படியும் அசைத்துப் பார்த்தது. முடிவில் அது செத்துப்போயிற்றென்றே நிச்சயித்துக்கொண்டு மிகுந்த துக்கத்தை அடைந்தது. இறந்துபோன நாய்க்குட்டியைக் கூட்டிலிருந்து வெளியே எடுக்க ஒருவருக்கும் சிங்கம் இடங்கொடுக்கவில்லை. வேறு பல நாய்களைக் கூட்டுக்குள்ளே போட்டுப் பார்த்தார்கள். எல்லாவற்றையும் சிங்கம் கொன்றுவிட்டது. தன்னுடன் சிநேகமாயிருந்த நாய்க்குட்

டிடைய நினைந்து நினைந்து ஆறுநாள்வரையில் ஆகாரமும் நித்திரையுமில்லாமல் கத்திக்கொண்டும் கூட்டுக்குள்ளேயே அங்குமிங்கும் அலைந்துகொண்டும், வருத்தத்தோடு இருந்தது. கடைசியில் அதுவும் மெலிந்து இறந்துபோயிற்று. வழக்கமாக அவ்விடத்துக்கு வேடிக்கை பார்க்கச்செல்லும் ஜனங்களெல்லாரும் அதனால் மிக்க வருத்தமடைந்தார்கள்.

இலக்கணம்.—பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்? ஆறுவகைப்படும். அவை யாவை? பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர். மேலேயுள்ள பாடத்திலிருந்து ஆறுக்கும் உதாரணம் காட்டுக. சிங்கம்-பொருட்பெயர்; நகரம்-இடப்பெயர்; வருஷம்-காலப்பெயர்; கால்-சினைப்பெயர்; சிநேகம்-குணப்பெயர்; கேள்வி-தொழிற்பெயர்.

குறிப்பு.—பிரதான நகரம்-முக்கியமான பட்டணம்; அரிய அருமையான; தீனி-ஆகாரம்; விருத்தியாயிற்று - அதிகமாயிற்று; மிருகேந்திரன்-சிங்கம்; திருப்தி-சந்தோஷம்.

## 3. தென்னை மரம்.

ஜனங்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்கிற மரங்களுள் தென்னை மரம் ஒன்றாகும். ஐம்பது முதல் எண்பது அடி உயரம் வரையில் அது வளருகிறது. சில மரங்களைப்போல் அதற்குக் கிளை கிடையாது; ஆனால் கிளைகளுக்குப் பதிலாக மரத்தின் நுனியில் மட்டைகள் நெருங்கியிருக்கின்றன. சாதாரணமாக அவை பன்னிரண்டடி நீளம் இருக்கும். மரத்தோடு சேர்ந்திருக்கும் அடி மட்டைகளின் இடையிடையே தேங்காய்கள் குலைகுலையாய்க் காய்த்துத் தொங்குகின்றன. ஒவ்வொரு குலையிலும் காய்கள் பத்துக்குக் குறையாமலிருக்கும்.

தென்னை மரம் பெரும்பாலும் கடற்கரைகளில் செழிப்பாக வளருகிறது. சிறு மணலும் உப்பு ஜலமும் அந்த மரத்தை நன்றாக வளரச்செய்யும். மலைகளும் குன்றுகளும் நிறைந்த இடங்களில் தென்னை மரம் நன்றாக வளராது. இந்தியாவில் கடலோரமாயுள்ள அநேக இடங்களில் தென்னம்



தோப்புகள் மிகுதியாக உண்டு. தோட்டக்காரர்கள் நன்றாக முற்றின நெற்றுக்களை எடுத்துவந்து தென்னம் பிள்ளைகளுக்காகச் சேகரித்து வைப்பார்கள். இளமரமாகவும் வயதானமரமாகவும் இராமல் நடுத்தரமாயுள்ள மரங்களின் நெற்றுக்களே பிள்ளைகள் சார்த்துவதற்கு மிகவும் தகுதியானவை.


மணற்பாங்காயுள்ள பூமியில் சிறுசிறு குழிகள் தோண்டி அவற்றில் உப்பையும் சாம்பல் முதலிய எருக்களையும் போட்டு அந்தக் குழிகளில் நெற்றுக்களைப் புதைத்து ஜலம் விட்டுக்கொண்டு தோட்டக்காரர்கள் காப்பாற்றிவருவார்கள். சில மாதங்களானபிறகு நெற்றுக்களிலிருந்து முளைகள் கிளம்பும்; வரவர அவை வளர்ச்சியடையும். அப்போது அவைகளுக்குத் தென்னம் பிள்ளைகள் என்று பெயர். பிறகு தோட்டங்களில் ஒவ்வொரு கஜ ஆழத்தில் பல குழிகள் வெட்டுவார்கள். குழிகள் நெருக்கமாயிராமல் ஒன்றற்கொன்று ஐந்து அல்லது ஆறு கஜம் விலகியிருப்பது மரங்களின் வளர்ச்சிக்கு நலமென்று சொல்லுகிறார்கள். ஒவ்வொரு குழியிலும் மரத்திற்குத் தகுந்த உரத்தைக் கொடுக்கக்கூடிய எருக்களைப்போட்டு ஒவ்வொரு பிள்ளையாக மழைக்காலத்தில் நடுவார்கள். எவ்வளவு ஜாக்கிரதையாகத் தண்ணீர் ஊற்றிக்கொண்டும் எருக்களைப் போட்டுக்கொண்டும் அதைக் காப்பாற்றிவருகிறோமோ அவ்வளவு சீக்கிரத்தில் அது பலனைத்

தரும். மிகவும் செழிப்பாக வளரும் மரங்கள் ஐந்து வருஷங்களில் காய்க்கின்றன. நன்றாகப் பாதுகாக்காவிட்டால் அவை பத்து வருஷமானாலும் பலன் கொடுப்பதில்லை.

தென்னை மரத்தின் அடிமுதல் நுனிவரையில் இடை இடையே கோடுகள் காணப்படும். அவற்றை எண்ணிப் பார்த்து ஒரு தென்னையின் வயதை நாம் தெரிந்துகொள்ளலாம். மரம் வளரும்போது பட்டையும் வளருகிறது. ஆறு மாதங்களுக்குப் பிறகு அது பழுத்துக் கீழேவிழும். அப்போது அடிமட்டை மரத்தோடு ஒட்டிக்கொண்டிருந்த இடத்தில் கோடுபோன்ற அடையாளம் உண்டாகிறது. ஒவ்வொரு மரத்தின் உச்சியிலும் பன்னிரண்டு மட்டைகளுக்குக் குறையாமல் இருக்கும். ஒவ்வொரு மட்டையும் தூரப்பார்வைக்கு ஒரு பக்ஷியின் இறகைப்போல் இருக்கிறது.

மட்டைகளை இரண்டாகப் பிளந்து கீற்றுக்கள் (கீத்துக்கள்) முடைந்து அவற்றை வீடுகளின் மேற்கூரைகளுக்கும் கொட்டகைகளுக்கும் பந்தல்களுக்கும் தட்டிகளுக்கும் உபயோகிக்கிறார்கள். சிலர் அவற்றைக்கொண்டு கழுகுகள் முடைந்து சில பதார்த்தங்களை அவற்றின்மேல் உலர்த்துவதுண்டு. தென்னோலைகளினால் புஷ்பக்குடலைகள் பின்னுவார்கள். அவற்றின் ஈர்க்குகள் பெருக்குவதற்கு உபயோகமான துடைப்பங்கள் செய்வதற்கும், இலைகள் தைப்பதற்கும் பயன்படுகின்றன. உற்சவகாலங்களிலும் கலியாண காலங்களிலும் பந்தல்களில் கட்டப்படும் தோரணங்கள் தென்னையின் குருத்தோலைகளாற் செய்தவைகளே.


தென்னைமரங்கள் கோடைக்காலத்தில் பாளைவைக்கும். காய்கள் ஆவணி, புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் அதிகமாகக் கிடைக்கும். ஒவ்வொரு மரத்திலிருந்தும் வருஷத்தில் இருநூறு காய்களுக்குக் குறையாமல் கிடைக்கலாம். செழிப்பான மரங்கள் வருஷத்துக்கு மூன்று அல்லது நான்கு முறை காய்க்கும். ஒவ்வொரு தென்னையும் எழுபது வருஷம் வரையில்தான் காய்த்துக்கொண்டிருக்கும்; நூறு வருஷத்துக்கு அப்பால் பட்டுப்போம். மட்டையோடு கூடிய தேங்காய் மனிதனுடைய தலையளவு இருக்கும். மட்டையை உரித்தபிறகு தேங்காயை மூடிக்கொண்டிருப்பது ஓடு அல்



லது கொட்டாங்கச்சி. பிறகு தேங்காயை உடைத்தால் உள்ளே இளநீர் இருக்கும். அது மிகவும் ருசியானது. உண்மையாகச் சொல்லுமிடத்து ஓட்டோடு சம்பந்தப்பட்டிருக்கும் வெண்மையான பதார்த்தமே நம்முடைய ஆகாரத்துக்கு உபயோகமாகும் தேங்காய். தேங்காய் மட்டைகள் கயிறு திரிக்கவும் அடுப்பெரிக்கவும் உதவும்.

தேங்காய் சமையலுக்குப் பலவிதத்தில் உபயோகப்படுகிறது. அதை நன்றாக உலர்த்தி அதிலிருந்தும் எண்ணெய் எடுத்து அந்த எண்ணெயைப் பணியாரங்கள் செய்வதற்கும், தேய்த்துக்கொள்வதற்கும், விளக்கெரிப்பதற்கும், மெழுகுவர்த்தி செய்வதற்கும் உபயோகிக்கிறார்கள். அது மிகவும் வாசனையுள்ளது; சிலர் அதைத் தலையிலே தடவிக்கொள்வதுண்டு.

தேங்காய் நன்றாய் உலர்ந்துபோனால் உள்ளேயிருக்கும் பருப்புக்கும் ஓட்டுக்கும் உள்ள சம்பந்தம் நீங்கிவிடும். அந்



தப் பருப்புக்களைச் சிறு துண்டுகளாக நறுக்கிச் சில தினங்கள் வெயிலில் உலர்த்தி அப்பால் செக்கிலிட்டு ஆட்டினால் எண்ணெய் கிடைக்கும்.

செக்கடியில் இரண்டு மனிதர்கள் வேலை செய்வார்கள்; ஒருவன் மாட்டை ஓட்டிக்கொண்டிருப்பான்; மற்றொருவன் செக்கிலிருந்து எண்ணெயைப் பிழிந்து குடத்தில் ஊற்றுவான். செக்கில் எண்ணெய்க்கு அடியில் பிண்ணாக்கு தங்கி இருக்கும். அது மாடுகளுக்குத் தீனியாகவும் சில பயிர்களுக்கு எருவாகவும் உபயோகப்படுகிறது. செக்கில் எண்ணெய் எடுப்பவர்களுக்கு வாணியர்கள் என்று பெயர்.

தென்னை மரத்தில் உபயோகமாகாத உறுப்பு எதுவுமில்லை. அடிமரம் தொட்டி செய்வதற்கு உபயோகமாகிறது. மேல் மரத்தை ஏற்றத்துக்கும் விட்டத்துக்குமாக உபயோகிக்கிறார்கள். அடிமட்டைகள் அடுப்பெரிக்க உதவும். பாளைகளைக் கிழித்து வேலி கட்டவும் பந்தல் கொட்டகை முதலிய இடங்களில் கீற்று இடவும் கயிற்றைப்போல் உபயோகிக்கலாம். மற்ற உறுப்புக்களின் உபயோகம் முன்னமேயே சொல்லப்பட்டது.

தென்னை மரத்திலிருந்து ஒருவகையான கள் இறக்குகிறார்கள். தென்னஞ் சாற்றினால் ஒருவகையான வெல்லம் செய்வதுமுண்டு.

தென்னை, பனை, பாக்கு இந்த மூன்று மரங்களும் ஒரு வகையைச் சேர்ந்தவை.


**இலக்கணம்.**—திணை என்பது என்ன? பொருள்களின் சாதியை அது தெரிவிக்கும். அது எத்தனை வகைப்படும்? உயர்திணையென்றும் அஃறிணையென்றும் இரண்டுவகைப்படும். ஒருவன் மாட்டை ஓட்டிக்கொண்டிருப்பான்: இந்த வாக்கியத்தில் உயர்திணைப்பெயர் யாது? அஃறிணைப்பெயர் யாது? ஒருவன் உயர்திணை; மாடு-அஃறிணை; ஒரு மனிதனுடைய பெயரைக் காட்டுவதால் ஒருவன் என்பது உயர்திணை. மனிதர் தேவர் இந்த வகையில் அடங்காமையால் மாடு அஃறிணை.

**குறிப்பு.**—குலைகுலையாய் - கொத்துக்கொத்தாய்; பெரும்பாலும் - விசேஷமாக; நெற்று-பழுத்துக்காய்ந்த காய்; சேகரித்து-சேர்த்து; பிள்ளை-கன்று; தோண்டி-வெட்டி; உரம்-பலம்; பக்ஷி-பறவை; பணியாரம்-பட்சணம்; உறுப்பு-பாகம்; சாறு-ரசம்.

## 4. புலி.

**கா**ட்டில் வசிக்கும் மிருகங்களுள் புலி மிகவும் கொடிய ஜந்து. யானை, சிங்கம் இந்த இரண்டு விலங்குகளையும் தவிர மற்ற எல்லா மிருகங்களையும் புலி அடித்துக் கொல்லும். ரத்தத்தை உறிஞ்சுவதில் அதற்கு விசேஷமான பிரியமுண்டு. அதன் தோலில் வளைவான கோடுகள் இருப்பதால் அதற்கு 'கொடுவரி' என்னும் ஒரு பெயர் வழங்குகிறது.


புலியினத்தில் சிறுத்தை யென்றும் வேங்கை யென்றும் இரண்டு வகையுண்டு. வேங்கை எட்டு அல்லது ஒன்பது அடி நீளமும் மூன்றரை அடி உயரமும் வளரும். சிறுத்தை உயரத்திலும் நீளத்திலும் வேங்கையைக்காட்டிலும் சிறியது. புலி தைரியமும் பலமும் உள்ள மிருகம். இந்தியாவில் காடுகளும் குன்றுகளும் உள்ள இடங்களில் புலிகள் காணப்படுகின்றன.



சிங்கத்தைப் போலவே புலியும் பூனையினத்தைச் சேர்ந்தது. கூர்மையான நீண்ட நகங்களும் அவற்றைச் சுருக்கிக்கொள்ளும் சக்தியும் அதற்கு உண்டு. காடுகளில் காலடியோசை சிறிதும் கேளாமல் அது நடந்து செல்லும். அதன் உள்ளங்காலிலுள்ள சதை மெத்தைபோல இருக்கிறது. இருட்டுவேளைகளில் புலிக்குக் கண் நன்றாகத் தெரியும். பகலில் அது கண்ணை நன்றாகத் திறப்பதில்லை. பூனைக்கு இருப்பதுபோல் புலியின் கண்மத்தியில் ஒரு பிளவு தெரியும்.

புலியின் தேகம் பருமனாக இராததால் சிங்கத்தைக்காட்டிலும் அது சுறுசுறுப்பாக இருக்கிறது. ஆனால் சிங்கத்தைப்போன்ற கம்பீரகுணம் அதற்கு இல்லை. பிடரி மயிரும் இல்லை. புலியின் தேகம் மஞ்சளும் கறுப்பு நிறமும் கலந்தது. பூனையைப்போல் புலிக்கு மரம் ஏறத் தெரியாது.

காட்டிலே செடிகள் அடர்ந்த இடத்தில் தன் குகையிலே புலி பகல் முழுதும் படுத்திருந்து பொழுது போனவுடனே வெளிப்பட்டு இராத்திரியில் இரைதேடிக்கொண்டு காடெங்கும் திரியும். சிலவேளை இரையின்பொருட்டு இருபது முப்பது மைல் தூரமும் அது செல்வதுண்டு. இரவு வேளைகளில் தண்ணீர் குடிக்கும்பொருட்டுக் குட்டை



குளங்களுக்குப் பலவகை மிருகங்களும் வருமாகையால் அந்த இடங்களின் அருகே புலி பதுங்கி இருக்கும். அது முக்கியமாக மான்களையே பிடித்துத்தின்னும். அடிக்கடி ஆடு மாடுகளையும் அடித்துத் தின்பதுண்டு. சில புலிகள் ஐந்நூறு மாடுகளுக்குமேல் அடித்திருக்கின்றனவென்று சொல்லுவார்கள்.

பூனை எலியைத் தூக்கிக்கொண்டு செல்வதுபோல் புலி எருதை வாயிற் கௌவிக்கொண்டு போகும்.

பெரும்பாலும் புலிகள் மனிதனைக் கண்டால் அஞ்சி ஓடிப்போம். மாட்டு மந்தைகளிலிருந்து ஓர் எருதை அவை தூக்கிக்கொண்டு போகுமேயன்றி இடையனை எதிர்ப்பதில்லை. ஆயினும் ஒரு வேங்கை ஒருதடவை மனிதனைக் கொன்று அவன் ரத்தத்தைக் குடித்து ருசி கண்டுவிட்டால் பிறகு அதன் இயற்கை மாறிவிடுகிறது; ஆடுமாடுகளையும் மான்களையும் அது தொடுவதில்லை. ஊர்களுக்குட் சென்று மனிதர்களையே தூக்கிக்கொண்டு போவதில் கண்ணாயிருக்கும். அப்படிப்பட்ட பெரும் புலிகளைக் கொல்லுகிறவர்களுக்குத் துரைத்தனத்தார் ஏராளமான வெகுமதி அளித்து வருகிறார்கள்.

புலிகளைக் குட்டியாயிருக்கும்பொழுதே சிலர் பிடித்து வந்து பழக்குவதுண்டு. தன்னை வளர்ப்பவனிடம் புலி அடங்கி அவன் பின்னே நாயைப்போல் தொடர்ந்து செல்லும். அவன் மனைவிமக்களிடமும் அது அடங்கியிருக்கும்; ஆயினும் வேங்கையைப் பிடித்து வளர்ப்பது மிகவும் அபாய

காமானது. பல வருஷகாலம் பழகிவந்தாலும் புலி திடீரென்று ஒருநாள் மூர்க்கங்கொண்டு தன்னை வளர்ப்பவனையே அறைந்து கொன்றுவிடும். ஆனதுபற்றியே புலியோடு பழகக் கூடாதென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

பதுங்கியிருந்து பாய்வதில் புலி மிகவும் பெயர்பெற்றது. புலியின் தோல் அழகாகவும், மிருதுவாகவும் இருக்கும். அதை அநேகர் ஆசனங்களாக உபயோகித்துக்கொண்டு ஜபம் செய்வார்கள். புலியின் நகங்கள் அநேக இடங்களில் ஆபரணமாக உபயோகப்படுகின்றன.

**இலக்கணம்.**—பால் என்பது திணையின் பிரிவு; ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என அது ஐந்து வகைப்படும். முதல் மூன்றும் உயர்திணையிலும் பின்னிரண்டும் அஃறிணையிலும் அடங்கும். இந்த ஐந்துபால்களுக்கும் மேலேயுள்ள பாடத்திலிருந்து உதாரணம் சொல்லுக. மனிதன்-ஆண்பால்; மனைவி-பெண்பால்; மனிதர்-பலர்பால்; செடி-ஒன்றன்பால்; செடிகள்-பலவின்பால்.

**குறிப்பு.**—ஜந்து-பிராணி; விலங்கு-மிருகம், குறுக்கே வளர்ந்திருப்பது; கொடுவரி-வளைந்தகோடு; மத்தி-நடு; கம்பீரகுணம்-பெருந்தன்மை; அஞ்சி-பயப்பட்டு; மந்தை-கூட்டம்; இயற்கை-சுபாவம்; வெகுமதி-இனும்; மூர்க்கம்-கோபம்; ஆபரணம்-நகை.

## 5. புலி வேட்டை.

**வே**ங்கைப்புலிகளை வேட்டையாடிப் பிடிக்கப் பல வழிகள் உண்டு. அயோத்தியில் ஒருவகையான முறையை அனுசரிக்கிறார்கள். எங்கேயாவது புலிகளின் அடிச்சுவடு இருப்பது தெரிந்தால் பல பெரிய இலைகளில் வச்சிரம் போல் ஒட்டிக்கொள்ளத்தக்க ஒருவகை மெழுகைத் தடவி அவ்விலைகளைப் புலி வரக்கூடிய வழியில் வேடர்கள் வைப்பார்கள். பிறகு அவ்வழியாக வருகின்ற புலி ஓர் இலையில் அடிவைத்தவுடனே இலை அதன் பாதத்தில் ஒட்டிக்கொள்ளும். அப்பால் அதைப் போக்கிக்கொள்ள முயன்று அது காலை முகத்தில் தேய்த்துக்கொள்வதோடு தரையில் விழுந்து புரளுகின்றது. அவ்வாறு புரளுகையிற் பல இலை



கள் அதன் உடலில் ஒட்டிக்கொள்ளும். முகமெல்லாம் இலைகளால் மறைந்துபோம். கண் திறக்கக்கூடாமல் இமை இரண்டும் சேர்ந்துகொள்ளுகின்றன. அப்போது அது மிக்க சினங்கொண்டு பயங்கரமாகக் கர்ச்சிக்கின்றது. ஆனாலும் அதனால் யாதொன்றும் செய்யச் சாத்தியப்படுவதில்லை. அப்படிப்பட்ட சமயத்தில் வேடர்கள் அவ்விடம் வந்து ஈட்டிகளால் அதைக் குத்திக் கொல்லுவார்கள்.

தென் இந்தியாவிலே புலிகளைப் பிடித்துக் கொல்லுகிற விதம் வேறு. நடுக்காட்டில் புலி சஞ்சரிக்குமிடத்தில் மாட்டையேனும் ஆட்டையேனும் ஒரு மரத்தின் அடியில் கட்டிவிட்டு அதற்கு அருகிலுள்ள வேறொரு மரத்தின்மேல் ஒரு மனிதன் துப்பாக்கியும் கையுமாக ஒளிந்துகொண்டு உட்கார்ந்திருப்பான். பொழுதுபோய்ச் சிறிது நேரம் ஆனவுடன் சமீபத்திலுள்ள புல்தரையிற் சலசலவென்று புலி வரும் சத்தம் கேட்கும். மரத்திற் கட்டியிருக்கும் ஆடோ அல்லது மாடோ அப்போது மிகவும் பயந்து கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடிப்போக வருந்திப் பாடுபடும். அதற்குள் மரத்திலிருக்கும் மனிதன் புலி சற்றுத் தூரத்தில் வருகையிலேயே அதைக்கண்டு உடனே சுடுவான். அவன் குறிதவறாமல் அடிக்குந் திறமையுள்ளவனாயின் அவ்விலங்கு வந்து தன் ஆட்டையேனும் மாட்டையேனும் தாக்குவதற்கு

முன்னமேயே அதைச் சுட்டுவிடுவான். சிலவேளைகளில் வேங்கையானது இருள் மூடி நெடுநேரமாகுமளவும் அவ் விடத்திற்கு வருவதில்லை. நேரங்கழித்து வருமானால் அது வருவது அம்மனிதன் கண்களுக்குப் புலப்படாது.


அப்போர்ப்பட்ட சமயங்களில் வேங்கை அவனுக்குத் தெரியாமலே வந்து மாத்தில் கட்டியிருக்கும் மிருகத்தை அடித்துவிடும். ஆயினும் அடித்த ஆட்டின் மாமிசம் முழு வதையும் அது தின்றுவிடுவதில்லை. பசி தணியும்வரையில் தின்று தண்ணீர் குடித்துவிட்டு அருகிலுள்ள காட்டிலே போய்ப் படுத்து மறுநாட் பகல்முழுவதும் தூங்கும். பாக்கி யுள்ள மாமிசத்தைத் தின்ன அன்றிரவில் அது திரும்பவும் அவ்விடம் வருவதுண்டு. அச்செய்தி தெரிந்து வேடன் அங்கே ஒளிந்திருந்து புலி அவ்விடம் வந்தவுடனே அதைச் சுட்டுவிடுவான்.

வட இந்தியாவிலே அரசர்களும் பிரபுக்களும் புலி களையும் யானைகளையும் வேட்டையாடுவதுண்டு. ஆங்கிலே யர்களுக்கு இவ்விதமான விளையாட்டில் விருப்பம் அதி கம். இருநூறு முந்நூறு மனிதர்கள் பல யானைகளை ஓட் டிக்கொண்டு வாத்திய கோஷங்களுடனும், வாணவேடிக்கை களுடனும் வனத்திற்கு வேட்டையாடப் போவார்கள். அவர்கள் செல்லும் சத்தம் காதில் விழுந்ததும் அங்குள்ள புலி அப்புறம் ஓடிப்போய்விடும். அவ்வாறு ஓடும்பொழுது அதனெதிரே பல யானைகளுடன் பல மனிதர்கள் அதனை மடக்குவார்கள். அதுகண்டு அப்புலி முதலில் பின்னே பாய்ந்து பிறகு யானைகளினிடையே நுழைந்துபோக முய லும். அத்தருணத்தில் யானைகளின் மேலுள்ள வேடர் கள் அதைச் சுடுவார்கள். ஆயினும் சில சமயங்களில் யானை கள் வெருண்டு திரும்பிக் காடுகளில் ஓடிப்போகும். அப்பொ ழுது புலி ஒருசமயம் அவற்றின்மேற் பாய்ந்து வேடர் களை அடித்துவிடுவது முண்டு.

**இலக்கணம்.**—எண், ஒருமை பன்மை என்று இரண்டு வகைப் படும். ஒன்றைக்குறிப்பது ஒருமை; ஒன்றிற்கு மேற்பட்ட வைகளைத் தெரிவிப்பது பன்மை. ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் இம்மூன்றும் ஒருமை; பலர்பால், பலவின்

பால் இந்த இரண்டும் பன்மை. வட இந்தியாவிலே அரசர்களும் பிரபுக்களும் புலிகளையும் யானைகளையும் வேட்டையாடுவதுண்டு: இந்த வாக்கியத்தில் ஒருமைப் பெயர்கள் இன்னவை யென்றும் பன்மைப் பெயர்கள் இன்னவை யென்றும் தெரிவிக்க.

குறிப்பு.—முறை-வழி; அடி-பாதம்; சுவடு-அடையாளம்; சினம்-கோபம்; சஞ்சரிக்கும் - திரியும்; பாடுபடும் - கஷ்டப்படும்; குறி-இலக்கு; திறமை-சாமர்த்தியம்; விருப்பம் - பிரியம்; கோஷம்-சத்தம்; வனம்-காடு.



## 6. மீன்.

மீன்கள் நீரிலேயே வாழும் ஜந்துக்கள். ஜலத்திலேயே இருப்பதற்குத் தகுதியாக அவற்றின் அவயவங்கள் அமைந்திருக்கின்றன. அவற்றின் தேகம் வட்டமாயும், ஜலத்தில் வருத்தமில்லாமல் நீந்துவதற்கு ஏற்றபடி பருமன் இல்லாமலும் உள்ளது. மீனின் சரீரம் சேணியர்கள் நூல் சுற்ற உபயோகிக்கும் கதிரைப்போல் இருப்பதால் ஜலத்தைக் கிழித்துக்கொண்டு அது சுலபமாகச் செல்லுகின்றது. நமக்குக் கைகால்கள் இருப்பதுபோல் மீன்களுக்கு வாலும் இறகும் உள்ளன. அவற்றின் உதவியினால் மீன்கள் தண்ணீரில் நீந்துகின்றன. துடுப்பானது படகுகளுக்கு எவ்வாறு உபயோகமாக உள்ளதோ அவ்வாறே வாலும் இறகும் மீன்களுக்கு உபயோகமாக இருக்கின்றன.


மீன்களின் தேக அமைப்பானது இஷ்டமான இடத்தில் ஜலத்துக்குள் அவை இருக்கவும், வேண்டியபடி சஞ்சரிக்கவும், தண்ணீரின்மேல் மிதந்து செல்லவும் அனுகூலமாக இருக்கிறது. மீனின் முதுகு மிகவும் கனமானது. ஆதலால் இறகுகள் இல்லாவிட்டால் மீன்களின் முதுகு அடிப்பக்கமாக இருக்கவேண்டி வரும். ஒவ்வொரு மீனுக்கும் கால்கள் முதுகெலும்புக்குக் கீழேயிருக்கின்றன. மீன்கள் ஜலத்தில் சுலபமாக முழுகுவதும், மேலே மிதந்து செல்வதும் இதனாலேதான். நீந்தினாலும், முழுகினாலும், மிதந்தாலும் தம் இஷ்டப்படி காற்றை உட்கொள்ளுவதற்கும், வெளிவிடுவதற்கும் மீன்களுக்குச் சக்தியுண்டு. ஓடுகள் வீட்டின் கூரையை மூடிக்கொண்டிருப்பதுபோல் ஓடுபோன்ற ஒரு பதார்த்தம் மீன்களின் தேகத்தை மூடிக்கொண்டிருக்கிறது.

மீன்களில் பலவகையுண்டு. சில எருமையளவு பருமனுள்ளனவாகவும், வேறு சில சுண்டுவிரலளவாகவும் இருக்கும். பெரிய மீன்கள் கடலிலும் மகாசமுத்திரங்களிலும், ஏரிகளிலும், பெரிய ஆறுகளிலும் காணப்படும். சிறு மீன்கள் குட்டைகளிலும், குளங்களிலும், வாய்க்கால்களிலும் இருக்கும். நமக்கு இருப்பதுபோல் மீன்களுக்கு, சுவாசப்பை இல்லை. ஆனால் அதற்குப் பதிலாக அவற்றின் தலைக்கு அடுத்தாற்போல் ஒருவகை உறுப்பு உள்ளது. காற்றானது வாய்வழியாக உடலுக்குள் புகுந்து ரத்தத்தைச் சுத்தப்படுத்தி அந்த உறுப்புவழியாக வெளியே வருகிறது. மீனின் ரத்தம் குளிர்ச்சியானது.

மீன்கள் முட்டையிடுமே அல்லாமல் குஞ்சு போடுவதில்லை. அவைகள் பெரும்பாலும் லக்ஷக்கணக்காக முட்டையிடும்; சில கோடிக்கணக்காக முட்டை இடுவதுமுண்டு. காலக்கிரமத்தில் முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிப்படுகின்றன. எப்போதாவது நாம் ஒரு குளத்தைப் போய்ப் பார்த்தால் கூட்டம் கூட்டமான மீன்கள் ஒருபக்கமாக ஓடிக்கொண்டிருப்பது தெரியும். அவை கணக்கில் அடங்கமாட்டா. அவை எல்லாம் ஒரே மீனின் குஞ்சுகளாக இருக்கலாம்.

முட்டைகளினின்றும் வெளிப்பட்டது முதற்கொண்டே குஞ்சுகளுக்கு நீந்தவும், இஷ்டமான இடத்துக்குப் போக

வும், வேண்டிய உணவைத்தேடி உட்கொள்ளவும் சக்தியுண்டு. மச்சங்களின் இறகுகள் அழுத்தமாயிருப்பதால் அவை ஜலத்துக்குமேல் வெகு உயரம்வரையில் கிளம்பிக் குதிக்கும். சில மீன்கள் வாலினால் படகுகளை அடித்துக் கவிழ்த்து அவற்றிலுள்ள ஜனங்களுக்கு உயிர்ச்சேதத்தை விளைவிக்கின்றன. சுறுவென்பது மிகவும் பயங்கரமான மீன். அதன் கொம்பு வாளைப்போல் கருக்குள்ளது. எப்போதாவது ஒரு படகின் அடிப்பக்கத்தை அது தன் கொம்பினால் குத்திவிட்



டால், ஜலம் படகுக்குள் புகுந்துகொண்டு அதைக் கவிழ்த்துவிடும். அதனாலேதான் கடல்யாத்திரை செய்பவர்கள் சுறுமீனிடம் பயப்படுகிறார்கள். மீன்கள் ஒருநிமிஷமும் ஜலத்தைவிட்டு வெளியேவந்து உயிரோடு இருக்கமாட்டா. அவற்றிற்கு வேண்டிய உணவு ஜலத்தில் இருக்கிறது.

மீன் சில ஜனங்களுக்கும், சில பட்சிகளுக்கும், சில மிருகங்களுக்கும் ஆகாரமாக உபயோகப்படுகிறது. செம்படவர்கள் தூண்டில் முள்ளினாலும், வலையை விரித்தும் மீன்களைப் பிடிப்பார்கள்.

சிலர் கடலில் வெகுதூரம் சென்று மீன்களைப் பிடித்து வருவதுண்டு. செம்படவர்கள் கட்டை மரங்களில் சாயங்

காலம் ஏறி வெகுமைல் தூரம் இரவு முழுவதும் சஞ்சரித்து ஏராளமான மீன்களுடன் மறுநாட் காலையில் வருவார்கள்.

மாமிசம் சாப்பிடும் ஜனங்களுக்கு மீன் முக்கியமானது. மீனின் கொழுப்பிலிருந்து ஒருவகை எண்ணெயெடுத்து அதனால் வைத்தியர்கள் பல மருந்துகள் செய்கிறார்கள். மெழுகுவர்த்திகள் செய்வதற்கும் மீனுடைய கொழுப்பு பயன்படுகிறது.

இலக்கணம்.—தன்மை, முன்னிலை, படர்க்கை என்று இடம் மூன்று வகைப்படும். பேசுவோன்-தன்மையிடம்; யாரைப் பார்த்துப் பேசுகிறோமோ அவர் முன்னிலையிடம்; பேசப்படுபவன் அல்லது பேசப்படும் பொருள் படர்க்கையிடத்தில் அடங்கும். நமக்கு-தன்மையிடம்; ஜனங்கள்-படர்க்கையிடம்; நீங்கள்-முன்னிலையிடம். மீன்கள், ஜந்துக்கள், தேகம், சேணியர்கள், நூல், உதவி, படகு, ஓடுகள், வைத்தியர்கள்: இவற்றுள் ஒவ்வொன்றும் இன்னவகையான பெயரென்றும் ஒவ்வொன்றின் திணை பால் இடங்கள் இன்னவையென்றும் தெரிவிக்க.

குறிப்பு.—வாழும்-வசிக்கும்; சேணியர்-துணி நெய்பவர்; காலக்கிரமத்தில்-நாளடைவில்; மச்சம்-மீன்; செம்படவர்கள்-மீன்பிடிப்பவர்கள்; ஏராளமான-அதிகமான; பயன்படுகிறது-பிரயோசனப்படுகிறது.

## 7. ஒட்டகம்.

பலவகை மிருகங்களுக்குள் பார்வைக்கு மிகவும் விநோதமாகவுள்ளது ஒட்டகம். அது நீண்ட கால்களையும் கழுத்தையும் உடைய உயரமான மிருகம். அதன் நிறம் பழுப்பாக உள்ளது. அதன் முதுகு ஒரே சமனாக இராமல் சில இடங்களில் உயர்ந்தும் வேறு சில இடங்களில் தாழ்ந்தும் மேடுபள்ளமாக இருக்கும். கழுத்துக்கு அருகில் அது ஏழு அல்லது எட்டு அடி உயரமானது. கழுத்தை இஷ்டமானபடி நீட்டவும் சுருக்கவும் அதற்கு வன்மையுண்டு. அதன் கால்களில் குளம்புகள் உண்டு. அது நடக்கும்போது கால்களை நிலத்தில் பாவலாகவே வைத்துச் செல்லும். அதனாலேதான் மணல் வெளிகளில் அது சிறிதும் வருத்தமின்றி நடக்கிறது.

மாடுகளைப்போல் ஒட்டகம் அசைபோடும்; அதற்குக் கொம்பில்லை. வேப்பிலை தின்பதில் அதற்கு விருப்பம் அதிகம். பாலைவனங்களில் பிரயாணம் செய்வதற்கு ஒட்டகம் மிக்க உதவியாக இருப்பதால் அதற்கு 'பாலைவனக்கப்பல்' என்ற ஒரு பெயர் வழங்கிவருகிறது. புலி, சிங்கம் இவைகளைப்போல் ஒட்டகம் துஷ்டமிருகமன்று. அரேபியா தேசத்து மணல் வெளிகளிலேதான் ஒட்டகங்கள் விசேஷமாக உண்டு. அரேபியர்களுக்கு அவைகள் மிக்க உபயோகமானவை.



அரேபியா தேசத்துப் பாலைவனங்களில் நெருப்பைப்போல் மிகவும் கடுமையாக வெயில் எரிக்கும்போது ஒட்டகத்தைத்தவிர வேறு எந்தப் பிராணியும் அங்கே நடவாது. அதனாலேதான் அங்கேயுள்ள ஜனங்கள் ஒட்டகங்களின்மேல் ஏறிக்கொண்டு பிரயாணம் செய்கிறார்கள். பாரமுள்ள சுமைகளை ஒட்டகங்கள் வருத்தமில்லாமல் சுமந்து செல்லும். எஜமானன் சொல்லுகிறபடி அது கேட்கும்; மிகவும் பொறுமையுள்ளது. ஒரு மணிக்கு மூன்று மைலுக்குக் குறையாமல் அது நடந்து செல்லும். ஓரேதடவையில் எந்த இடத்திலும்

நிற்காமல் ஐம்பது அல்லது அறுபதுமைல் நடந்து போகக் கூடிய சக்தி அதற்கு உண்டு. பசுவின் பாலுக்குப் பதிலாக ஒட்டகத்தின் பாலை அரேபியர்கள் உபயோகிக்கிறார்கள். அதன் மயிர்கள் கம்பளம் நெய்ய உதவும்.

ஒட்டகத்தின் முதுகில் உயரமான திமில் ஒன்று உண்டு. அது முழுவதும் கொழுப்பே. ஒட்டகம் பலநாள் தீனி இல்லாமல் இருந்தால் திமில் நாளுக்குநாள் சிறுத்து வற்றிப் போகும். தீனி இல்லாத சமயங்களில் திமிலின் கொழுப்பே ஒட்டகத்திற்கு உணவாகுமென்று தெரிகிறது.

பலநாள்வரையில் தண்ணீர் குடியாமலே ஒட்டகம் பிரயாணம் செய்யும். ஆறு தினங்களுக்கு வேண்டிய தண்ணீரை ஒரே தடவையில் குடித்து வயிற்றிலுள்ள ஒருவிதமான பையில் அது சேர்த்து வைத்துக்கொள்ளும். தாகம் உண்டாகும்போது அந்த ஜலம் தாகத்தைத் தீர்க்கிறது.

இந்தியாவிலும் எகிப்து தேசத்திலும் சில ஒட்டகங்கள் இருக்கின்றன. சிலஜாதி ஒட்டகங்களுக்கு முதுகில் இரண்டு திமில்கள் உண்டு. நீர் வறண்ட இடங்களிலும் பாலைவனங்களிலும் ஒட்டகங்கள் வசிக்குமேயல்லாமல் நீர்வளமுள்ள இடங்களில் இருந்தால் சீக்கிரத்தில் அவை இறந்துபோம்.

கோவில்களில் திருவிழா நிகழும்போதும், கலியாணவீடுகளில் ஊர்கோலம் நடக்கும்போதும், ஒட்டகங்களை அலங்கரித்து அவற்றின்மேல் நகரா அடித்துக்கொண்டு போவார்கள்.

**இலக்கணம்.**—கால்கள், அது, பார்வை, முதுகு, வேப்பிலை, அவைகள், எஜமானன், சுமைகள், மூன்று, தடவை, சக்தி: இவற்றுள் ஒருமைப் பெயர்களையும், பன்மைப் பெயர்களையும் தனித் தனியே பிரித்து எழுதுக. ஒரு வாக்கியத்தில் பெயர்ச்சொல்லுக்கும் மற்ற வார்த்தைகளுக்குமுள்ள சம்பந்தத்தை வித்தியாசப்படுத்துவது வேற்றுமை. அது எட்டுவகைப்படும். 'ஒட்டகம் வசிக்கும்' என்ற வாக்கியத்தில் 'ஒட்டகம்' என்பதற்கும் 'வசிக்கும்' என்பதற்கும் உள்ள சம்பந்தம் என்னவென்றால் வசித்தலாகிய தொழிலை ஒட்டகம் செய்வதுதான்.

**குறிப்பு**—விநோதமான - வேடிக்கையான; பாலைவனம் - மணற்காடு; பாரமுள்ள - கனமான; வற்றி - குறைந்து; நிகழும்-நடக்கும்; நகரா - தோலினாற்செய்த ஒருவகை வாத்தியம்.

## 8. இரண்டு வர்த்தகர்களும் ஒட்டகமும்.

பல வருஷங்களுக்கு முன் இரண்டு வியாபாரிகள் தங்கள் பொருள்களை ஓர் ஒட்டகத்தின்மீது ஏற்றிக்கொண்டு வியாபாரத்தின் நிமித்தம் பல பட்டணங்களுக்கும் போனார்கள். சிலதினங்களில் தங்கள் சாமான்களையெல்லாம் விற்றுவிட்டு அந்த ஒட்டகையின்மேல் ஏறிக்கொண்டு அவர்கள் தங்கள் ஊருக்குத் திரும்பினார்கள். வழியிலே வெயில் தாங்காமல் மிகவும் களைப்படைந்து ஒரு பெரிய ஆலமரத்தின் நிழலில் களைப்பாற எண்ணி மிருகத்தை ஆலம்விழுதொன்றில் கட்டிவிட்டு அவர்கள் இருவரும் படுத்தார்கள். பிரயாணத்தின் களைப்பினால் படுத்ததும் தூங்கிவிட்டார்கள்.

பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் எங்கிருந்தோ ஒரு புலி கர்ச்சனை செய்தது. புலியின் சத்தம் காதில் விழுந்ததும் ஒட்டகம் திகிலடைந்து மரத்தில் கட்டியிருந்த கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடிப்போய்விட்டது. வர்த்தகர்கள் அயர்ந்து தூங்கிவிட்டு ஒரு ஜாமத்திற்குப்பிறகு எழுந்து பார்த்தார்கள். கட்டியிருந்த இடத்தில் ஒட்டகத்தைக் காணவில்லை. உடனே எல்லாப் பக்கங்களிலும் அதைத் தேட ஆரம்பித்தார்கள். அந்த மிருகத்தின் காற்சுவடுகளின் அடையாளத்தைக்கொண்டு சிறிதுதூரம் போனார்கள்; அதற்கப்பால் சுவடுகள் அவர்களுக்குத் தெரியவில்லை.

அவர்கள் அவ்வாறு தேடிச் செல்லும்போது அவ்வழியே ஒரு பரதேசி வந்தான். ஒருவேளை தங்கள் ஒட்டகத்தைப் பற்றி அவனுக்கு ஏதேனும் தெரிந்திருக்கலாமோ என்று எண்ணி வர்த்தகர்கள் அவனிடம் சென்று "ஐயா, பரதேசியாரே! நீர் எங்கிருந்து வருகிறீர்? எங்களுடன் வந்த ஒட்டகம் எங்கேயோ தவறிப் போய்விட்டது. நீர் அதைக் கண்டதுண்டோ?" என்று கேட்டார்கள். பிறகு பரதேசி "அந்த மிருகத்தின்மேல் ஒருபக்கத்தில் கோதுமை மூட்டையையும், மற்றொரு பக்கத்தில் தேன் ஜாடிகளையும் நீங்கள் ஏற்றியிருந்ததுண்டோ?" என்று கேட்டான்.

வியாபாரிகள் ஆச்சரியமடைந்து "ஏற்றியிருந்ததுண்டு" என்றார்கள்.

பரதேசி: "அந்த மிருகத்துக்கு ஒருகண் குருடோ? அதன் ஒற்றைக்கால் நொண்டியோ? அதற்கு மேல்வாய்ப் பற்கள் இல்லையோ?" என்று வினவினான்.

அப்போது வணிகர்கள் முன்னிலும் அதிக ஆச்சரியம் அடைந்து தங்கள் மிருகம் தங்களுக்குக் கிடைத்துவிட்டதாகவே எண்ணி "அந்தமிருகம் எந்தவழியாய்ப் போயிற்று? சொல்லும்" என்று பரதேசியைக் கேட்டார்கள். அந்த மிருகத்தையே தான் பார்க்கவில்லையென்றும் அதைப்பற்றி ஒன்றுமே தனக்குத் தெரியாதென்றும் அவன் சொல்லிவிட்டான். உடனே அவர்களுக்கு அவனிடம் சந்தேகம் பிறந்துவிட்டது. அவனே அந்த மிருகத்தைத் திருடி ஒளித்து வைத்திருக்கலாமென்று எண்ணி அதைத் தங்களிடம் கொடுத்துவிடும்படி அவனை அவர்கள் பயமுறுத்திக் கேட்டார்கள். அவன் அதற்குச் சிறிதும் பயப்படவில்லை. அவனை அடித்தும் பார்த்தார்கள். அதையும் அவன் லக்ஷியம் செய்யவில்லை.

பிறகு அவர்கள் கிராமாதிகாரியிடம் அவனை இழுத்துச் சென்று நடந்த விஷயங்களையெல்லாம் சொல்லி முறையிட்டார்கள். அவன் பரதேசியை நோக்கி "நீர் பரதேசியாக இருக்கிறீரே! ஏன் இப்பேர்ப்பட்ட காரியத்தைச் செய்ய வேண்டும்? அவர்கள் உம்மேல் குற்றம் சொல்லுகிறார்களே! நீர் என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டான்.

அப்போது பரதேசி "முன் சொன்னதிலிருந்து மாறாக நான் இப்போது என்ன சொல்லப் போகிறேன்? அந்த மிருகத்தையே கண்டதில்லையென்று அவர்களிடம் முன்பு சொன்னேன். இப்போதும் அப்படியே சொல்லுகிறேன்" என்றான்.

அவன் வார்த்தைகளைக்கேட்ட வியாபாரிகள் கடுங்கோபங்கொண்டு "ஏன் ஐயா, இப்படிப் பாசாங்கு செய்கிறீர்? பரதேசி வேஷத்துடன் திருடும்படி யார் உமக்குச் சொல்லிக்கொடுத்தார்?" என்று அவனைப் பலவாறு நிந்திக்க ஆரம்பித்தார்கள். கிராமாதிகாரி அவர்களை அடக்கிவிட்டுப் பரதேசியை நோக்கி "நீர் சொல்வதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நீர் அந்த மிருகத்தைப் பார்த்திராவிட்டால் அதைப் பற்றிய விவரங்களெல்லாம் உமக்கு எவ்வாறு தெரியவந்தன?" என்று கேட்டான்.

அப்போது பரதேசி பின்வருமாறு பதில் உரைத்தான்:— "வழியின் ஒரு பக்கத்தில் எறும்புகள் சாரிசாரியாகப் போய்க்கொண்டிருந்தன. மற்றொருபக்கத்தில் ஈக்கள் மொய்த்துக்கொண்டிருந்தன. அந்த மிருகத்தின் முதுகில் ஒரு பக்கத்தில் கோதுமையையும் மற்றொருபக்கத்தில் தேன் ஜாடியையும் ஏற்றியிருக்க வேண்டுமென்றும், அவை வழியில் சிந்திப்போயிருக்கலாமென்றும், அதனாலேதான் எறும்புகளும் ஈக்களும் மிகுதியாக உள்ளனவென்றும் எண்ணி நான் அவ்வாறு சொன்னேன். சாலையில் ஒரு பக்கத்து மரங்களின் இலைகள்மட்டும் தின்னப்பட்டிருந்ததால் அதற்கு ஒரு கண் குருடாக இருக்கலாமென்று எண்ணினேன். இலைகளின் சில பாகம்மட்டும் கடிக்கப்பட்டும், மத்தியபாகம் கடிக்கப்படாமலும் இருந்ததால் அந்த மிருகத்துக்கு மேல்வாய்ப் பல் இராதென்று நினைத்தேன். சாலையில் நன்றாகக் கவனித்துப் பார்த்தபோது மூன்று கால்களின் சுவடுமட்டும் தெரிந்தன. அதனால் அதற்கு ஒருகால் நொண்டியாயிருக்க வேண்டுமென்று நிச்சயித்தேன். நான் எந்த இடத்துக்குப் போனாலும் ஒவ்வொன்றையும் நன்றாகக் கவனிப்பது வழக்கம். இப்போதும் சத்தியமாகச் சொல்லுகிறேன். நான் அந்த மிருகத்தைப் பார்த்ததேயில்லை."

அவ்வாறு பரதேசி சொன்ன வார்த்தைகளைக் கேட்டு வியாபாரிகள் ஒன்றுந் தோன்றாமல் திகைத்து ஸ்தம்பம் போல் நின்றார்கள். கிராமாதிகாரி பரதேசியினுடைய மதிநுட்பத்தை மிகவும் வியந்து பாராட்டினான். தன்வீட்டிலேயே சிலதினங்கள் அவனை வைத்திருந்து உபசரித்து அனுப்பினான். வர்த்தகர்கள் தாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று பரதேசியைக் கேட்டுக்கொண்டதல்லாமல், "நாங்கள் ஜாக்கிரதையாக இராமல் அயர்ந்து தூங்கினோம். அதற்கு ஏற்றபலனை அனுபவித்தோம்" என்று சொல்லி அந்தக் கிராமாதிகாரியினிடமும், பரதேசியினிடமும் விடை பெற்றுக்கொண்டு ஊர்போய்ச் சேர்ந்தார்கள்.

**இலக்கணம்.**—தன்மை, முன்னிலை, படர்க்கை இந்த மூன்று இடத்துப்பெயர்களுக்கும் மேலுள்ள பாடத்திலிருந்து உதாரணம் காட்டுக. நான், நாங்கள் – தன்மை; நீர் – முன்னிலை; அவன், அவர்கள் – படர்க்கை. கிராமாதிகாரி பரதேசியினுடைய மதி

நுட்பத்தை மிகவும் வியந்து பாராட்டினான்: இந்த வாக்கியத்தில் உள்ள பெயர்ச்சொற்கள் என்ன என்ன வேற்றுமையில் வந்திருக்கின்றன? முதல் வேற்றுமைக்கு எழுவாய், கர்த்தா, வினைமுதல் என்றும் பெயருண்டு. இரண்டாம் வேற்றுமையின் உருபு என்ன? ஐ. ஒரு வாக்கியத்தில் செயப்படுபொருளாக வருவது இரண்டாம் வேற்றுமை. வருஷங்களுக்கு, பொருள்களை, தினங்களில், நிழலில், பரதேசியாரே: இவை என்ன என்ன வேற்றுமையில் வந்தன?

குறிப்பு.—பொருள்—சாமான்; ஜாமம்—ஏழரை நாழிகை; தவறி—கெட்டு; வணிகர் — வியாபாரிகள்; கிராமாதிகாரி — கிராமத்தலைவன்; நிந்திக்க—இகழ; எவ்வாறு—எப்படி; ஸ்தம்பம்—தூண்; மதிநுட்பம்—புத்திகூர்மை; விடை—உத்தரவு.

## 9. பகைமையை வெல்லல்.

ஆதிகாலத்தில் பிரமதத்தன் என்னுமோர் அரசன் காசிராஜ்யத்தை ஆண்டுவந்தான். அவன் மிகுந்த பராக்கிரமசாலி. பலவகைச் செல்வங்களும் அவனிடம் ஏராளமாக இருந்தன. கணக்கிடமுடியாத சேனைகள் அவனுக்கு உண்டு. பகையரசர்கள் தன் தேசத்துக்கு வந்து படையெடுக்கக்கூடுமென்ற பயமே அவனுக்கில்லை.

அவனுடைய காலத்தில் கோசலம் என்ற நாட்டிற்கு விஜயசேனன் என்பவன் அதிபதியாக இருந்தான். கோசலம் மிகவும் சிறிய தேசம். தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை முதலிய நால்வகைச் சேனைகளும் அவனிடம் சொற்பமாயுண்டு.

ஒருமுறை பிரமதத்தன் விஜயசேனனை ஒரு யுத்தத்தில் வென்று அவன் ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டு அவனைக் காட்டுக்குத் துரத்திவிட்டான். பிறகு விஜயசேனன் காட்டில் அலைந்து திரிந்து கடைசியில் ஒரு குகையில் வசித்து வந்தான். அவன் பட்ட கஷ்டங்கள் அளவற்றன. அங்கே அவனுக்கு விஜயபூஷணன் என்ற ஒரு புத்திரன் பிறந்தான்.

விஜயபூஷணன் தக்க பிராயமடைந்ததும், பிரமதத்தனால் தன் பிதாவுக்கு அவ்வளவு கஷ்டங்கள் உண்டாயின

வென்று தெரிந்துகொண்டான். அது முதலாக அவன் பிரமதத்தனைப் பழிவாங்க வேண்டுமென்று பலவிதமான யோசனைகள் செய்துகொண்டு சமயத்தை எதிர்பார்த்திருந்தான்.

விஜயசேனன் வரவர விருத்தாப்பியத்தை அடைந்து மிகவும் மெலிந்துபோனான். அந்தியகாலத்தில் அவன் விஜயபூஷணனை அருகில் அழைத்து, "இப்பொழுதோ இன்னும் அரை நாழிகையிலோ என் பிராணனை விடப் போகிறேன். உனக்குக் கொடுப்பதற்கு என்னிடம் ஆஸ்தி ஒன்றுமில்லை. ஆனால் எனக்குள்ள பொறுமையை நீ எடுத்துக்கொள். என்ன ஆபத்து வந்தாலும் பொறுமையுடன் இருந்தால் பகையை வென்றுவிடலாம். ஆதலால் பொறுமையையே நீ சிறந்த ஐசுவரியமாக வைத்துக்கொள்ளு. உனக்கு வேறொன்றும் நான் சொல்லவேண்டியதில்லை" என்று சொல்லி அந்தக் குகையிலேயே உயிரைவிட்டான்.

பிறகு விஜயபூஷணன் தந்தைக்குச் செய்யவேண்டிய உத்தரக்கிரியைகளையெல்லாம் செய்து முடித்து, பிரமதத்தனை ராஜ்யத்தினின்றும் நீக்க உபாயந்தேடிக்கொண்டு காசிக்குச் சென்றான். அவ்விடத்தில் ஏதேனும் ஒரு வேலையில் அமர்ந்திருக்க எண்ணி அரசனுடைய குதிரைக்காரனாக முதலில் இருந்தான். அவன் விஜயசேனன் புத்திரனென்று ஒருவருக்குந் தெரியாது. தன் வேலையில் அவன் மிகவும் சமர்த்தனென்று பெயர் பெற்றான்.

ஒருநாள் அவன் தன் வேலைகளெல்லாம் ஆனபிறகு குதிரைக் கொட்டகையில் படுத்துக்கொண்டு மிகவும் இனிமையாகப் பாடினான். அப்போது அருகிலிருந்த ஜனங்களெல்லாரும் வந்து அவன் பாட்டைக் கேட்டார்கள். தற்செயலாய் அப்போது அந்த வழியாகப்போன பிரமதத்தனும் அவன் பாட்டைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து அவனைத் தன் சாரதியாக நியமித்தான். அந்த வேலையைத்தான் விஜயபூஷணனும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

சில தினங்களுக்குப் பிறகு பிரமதத்தன் ஒருநாள் வேட்டையாடுவதற்காகப் புறப்பட்டான். அப்போது அவன் வண்டியில் ஏறிக்கொள்ள விஜயபூஷணன் வண்டியை ஓட்

டினான். வேட்டையாடிவிட்டுக் கொஞ்சதூரம் போன பிறகு விஜயபூஷணன் நடுக்காட்டில் சரியான வழியை விட்டு விலகி வேறொருவழியாக வண்டியைச் செலுத்திக் கொண்டுபோனான். அரசனையும் விஜயபூஷணனையும் தவிர அந்த இடத்தில் வேறொருவருமில்லை. அரசனுடன் வந்த வேலைக்காரர்களெல்லாரும் சரியான மார்க்கத்தில் போய்க் கொண்டிருந்தார்கள்.

வேட்டையினால் பிரமதத்தன் மிகவும் களைத்துப்போய் நன்றாக அயர்ந்து தூங்கினான். அப்போது அவனைக் கொல்லும்பொருட்டு விஜயபூஷணன் தன் உடைவாளை எடுத்துக்கொண்டு அவன் அருகே சென்று "என்னுடைய தந்தைபட்ட துன்பங்களுக்கெல்லாம் இவன்தானே காரணம். என் தந்தையைக் காட்டுக்குத் துரத்தி அவருக்கு மகா பாதகங்களைச் செய்தவனல்லவா இவன்? ராஜபோகத்தில் இருந்த என் தந்தையை ஒரு குகையிலிருந்து ஓர் அநாதையைப்போல் பிராணனை விடும்படி செய்த மகா பாவியல்லவா இவன்? இந்த மகா பாதகனை நான் கொலைசெய்தால்தான் என்ன தோஷம்?" என்று சொல்லிக் கொண்டே அவன் கழுத்தில் கத்தியை வீசப்போனான்; ஆனாலும் கத்தியை வீசாமல் திடீரென்று நின்று "என்ன மதியீனம்! தந்தை இறக்கும் சமயத்தில் சொன்ன புத்திமதியை மறந்து விட்டோமே! பொறுமையுடனிருந்தல்லவா பகையை வெல்லவேண்டுமென்று அவர் சொன்னார். அவர் சொன்ன வார்த்தைகளை அனுசரவு செய்ய இருந்தோமே! தந்தையின் வார்த்தைப்படி நடப்பதைக்காட்டிலும் மேலான தருமம் வேறொன்று உண்டோ? அவருடைய வார்த்தைப்படி பொறுமையாயிருந்தே பகையை வெல்லவேண்டும்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு வாளை உறையில் போட்டுவிட்டு அவன் நிதானமாக இருந்தான்.

தூங்கிக்கொண்டிருந்த பிரமதத்தன் நடந்த எல்லா விஷயங்களையும் சொப்பனத்தில் கண்டான்; ஆதலால் அவன் தூங்கியெழுந்ததும் விஜயபூஷணனை அழைத்து "ஏதேனும் இவ்விடத்தில் விசேஷம் நடந்ததோ?" என்று விசாரித்தான். அப்போது விஜயபூஷணன் ஒன்றையும் பாக்கிவிடாமல்

நடந்த விஷயங்களையெல்லாம் நடந்தபடியே அரசனிடம் தெரிவித்தான். பிறகு தான் செய்த அக்கிரமங்களையெல்லாம் நினைந்து பிரமதத்தன் மிக்க நாணமடைந்து தன்னைக் கொல்லாமல் காப்பாற்றிய தருமசீலனான விஜயபூஷணனிடம் உள்ள குணத்தைக் கண்டு மெச்சி அவனிடம் கோசலநாட்டைத் திருப்பிக்கொடுத்து, அதனை ஆண்டுவரும்படிக்கும், தான் செய்த அநியாயத்துக்காகத் தன்னை மன்னிக்கும்படிக்கும் கேட்டுக்கொண்டான்.

இவ்வாறு பொறுமையையே தனமாகக்கொண்ட விஜயபூஷணன் தன் தேசத்தையடைந்து ராஜ்யபரிபாலனஞ் செய்துவந்தான்.

**இலக்கணம்.**—வாக்கியம் என்றால் என்ன? ஒரு முடிவான விஷயத்தைச் சில சொற்கள் சேர்ந்து தெரிவித்தால் அது வாக்கியமாகும். 'புத்திரன் பிறந்தான்' என்பது ஒரு முடிவான விஷயத்தை விளக்குவதால் வாக்கியமாம். பிறத்தலாகிய தொழிலுக்குக் கருத்தா புத்திரன். ஆதலால் இவ்வாக்கியத்தில் புத்திரன் என்பது எழுவாய். பிறத்தல் என்னும் எழுவாயின் தொழிலை விளக்குவது 'பிறந்தான்' என்னும் சொல். அதற்கு 'பயனிலை' என்று பெயர். ஒரு வாக்கியத்தில் மிகவும் அவசியமான உறுப்புக்கள் எழுவாயும் பயனிலையுமாம்.

**குறிப்பு.**—பராக்கிரமசாலி – பலம் மிகுந்தவன்; அதிபதி – அரசன்; படை – சேனை; யுத்தம் – சண்டை; பிராயம் – வயது; சமயம்—காலம்; விருத்தாப்பியம் – கிழத்தனம்; அந்தியகாலம் – கடைசிக் காலம்; அழைத்து—கூப்பிட்டு; ஐசுவரியம்—தனம்; சாரதி-வண்டியோட்டுபவன்; வாள்—கத்தி; உறை—கூடு.

## 10. தேகாப்பியாசம்.

'சுவரை வைத்துக்கொண்டல்லவா சித்திரம் எழுதவேண்டும்' என்னும் பழமொழி நமக்குள் வழங்கி வருகிறது. அதுபோல் நம்முடைய சரீரம் நன்றாக இருந்தால்தான் நாம் எந்த வேலையையும் எளிதில் செய்துமுடிக்கலாம். தேகம் திடமாக இருப்பதற்கு ஏதேனும் ஒருவகையான சரீரப் பயிற்சி செய்துவருதல் மிகவும் அவசியமானது. அநேகர்,


சரீரப்பயிற்சியையே ஒரு வேலையாக நினைக்காமல் வேறு வேலைகளைச் செய்துவருகிறார்கள். நம் சரீரம் திடமாக இருந்தால் அன்றி நாம் ஒரு வேலையையும் செவ்வையாகச் செய்ய முடியாது. 'தேகம் மெலிந்துபோய் நாளடைவில் எழுந்திருக்கக்கூடச் சக்தி இல்லாமற்போய்விடும். ஆகலால் தினந்தோறும் தவறாமல் ஏதேனும் ஒருவிதமான தேகாப்பியாசம் செய்வதை ஒவ்வொருவரும் கடமையாகக் கொள்ளவேண்டும்.

காலைநேரம் தேகாப்பியாசத்துக்கு ஏற்றகாலம். படுக்கையைவிட்டு எழுந்தவுடன் ஒவ்வொருவரும் ஒரு நாழிகையாவது தேகாப்பியாசத்தில் செலவிட்டு அப்பால் வேறு வேலைகளைக் கவனிப்பது நல்லது. இம்மாதிரி தவறாமல் செய்துவந்தால் ரத்தஓட்டம் நன்றாக ஏற்படுகிறது. நல்ல ரத்தம் நாம்புகளுக்கெல்லாம் பாவி, எல்லா அவயவங்களுக்கும் பலத்தைக் கொடுக்கிறது. சரீரப்பயிற்சி செய்யும்போது நாம் பலமாக மூச்சு விடுகிறோம். அதனால் சுத்தமான காற்று விசேஷமாகச் சரீரத்துக்குள் புகுந்து ரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறது; தேகத்திலுள்ள அசுத்தங்களும் வெளிப்படுகின்றன.

ஜனங்கள் ஆகாரத்தைமட்டும் மிகுதியாக உட்கொண்டு ஒருவிதமான சரீரப்பயிற்சியும் செய்யாவிட்டால் அவர்களுக்கு ஜீரணசக்தி குறைந்துபோகிறது; அதனால் ஜீரணசக்தியை உண்டாக்க வேறு வழியைத் தேடும்படி ஏற்படுகிறது. சில செல்வவான்கள் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு தேகாப்பியாசம் செய்யாமல் பசிக்காக மருந்து சாப்பிடுகிறார்கள். அதனால் பசி ஏற்பட்டாலும் வேறு பல நோய்களுக்கு இடம் உண்டாய்விடுகிறது.

பகல் முழுவதும் வேலைபார்க்கும் ஜனங்கள் சிறிது நேரமாவது ஏதேனும் ஒரு விளையாட்டில் பொழுதுபோக்கவேண்டும். கதவுகளை மூடிக்கொண்டு இருட்டறைகளில் சிலர் தேகாப்பியாசம் செய்வதுண்டு. அதனால் கெடுதி உண்டாகுமேயன்றி ஒருவிதமான நன்மையும் உண்டாகாது. திறந்த வெளிகளில் விளையாடினால் மிகவும் நல்லது. சாயங்காலக் காற்று சரீரத்துக்கு விசேஷமான அனுகூலத்தைத் தரும்; ஆகலால்,

சாயங்காலத்தில் சிநேகிதர்களுடன் ஒருமணிநேரம் விளையாடினால் மற்ற வேளைகளில் இரண்டுமணிநேரம் விளையாடுவதைக்காட்டிலும் அதிகமான பயன் உண்டாகும்.




பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளில் சிலர் சாயங்காலத்தில் கால்பந்து அடிக்கிறார்கள்; வேறு சிலர் கஸரத்து பழகுகிறார்கள். எது செய்தாலும் தேகத்துக்குப் பலம் உண்டாகும். கால் பந்தடிப்பதால் ரத்தஓட்டம் சரீரம் முழுவதும் பரவி ஒவ்வொரு உறுப்புக்கும் சக்தியைக் கொடுக்கிறது; கால் பந்தடிப்பவர்கள் காலையில் படுக்கையைவிட்டு எழுந்ததும் மனவூக்கத்துடன் இருப்பார்கள்.

இந்தியாவில் சிலர் கரளாகட்டை போடுகிறார்கள்; வேறு சிலர் தண்டா எடுக்கிறார்கள்; மற்றும் சிலர் சேர்ந்துகொண்டு குஸ்தி பழகுகிறார்கள்; பின்னும் சிலர் தினந்தோறும் காலையில் தவறாமல் சில மைல்தூரம் நடந்துபோய் வருவதுண்டு. தண்டா எடுத்தலினாலேயே ராமமூர்த்தியென்பவர் மிக்க புகழ்பெற்று 'இந்திய ஸாண்டோ' என்ற பெயருடன் விளங்கி வருகிறார். 'ராமமூர்த்தி' என்ற பதமே இப்போது 'பலசாலி' என்ற பொருளில் வழங்கிவருகிறது.

**இலக்கணம்.**—சக்தி போய்விடும்; நாம் மூச்சுவிடுகிறோம்; அசுத்தங்கள் வெளிப்படுகின்றன; நன்மை உண்டாகாது; இவ்வாக்கியங்களிலுள்ள எழுவாய் பயனிலைகளை எழுதுக. பயனிலை விசேஷமாக வினைமுற்றாக இருக்கும்; சில சமயங்களில், பெயர்ச்சொல்லும் பயனிலையாக வருவதுண்டு; அப்போது அதற்கு 'பெயர்ப் பயனிலை' என்று பெயர். 'காலை நேரம் ஏற்றகாலம்' என்னும் வாக்கியத்தில் 'நேரம்' என்னும் எழுவாய்க்கு 'காலம்' என்னும் பெயர்ச்சொல் பயனிலையாக வந்திருக்கிறது.

குறிப்பு.—சரீரம்-உடம்பு; பயிற்சி-அப்பியாசம்; கடமை-முக்கியமான காரியம்; செல்வவான்கள்-பணக்காரர்கள்; நோய்-வியாதி; அனுகூலம்-நன்மை; கஸரத்து-Drill; உறுப்பு-அவயவம்; புகழ்-பிரசித்தி; பயன்-பிரயோசனம்; பதம்-வார்த்தை.



## 11. கற்பலகை.

கற்பலகை இன்னதென்பது பள்ளிக்கூடத்திற் படிக்கும் சிறுவர்களுக்கெல்லாம் நன்றாய்த் தெரியும்; கணக்குப் போடவும் எழுதவும் அது பயன்படுகிறது. கற்பலகை இன்னபொருளென்பதையும் இன்ன இடத்திலிருந்து அது வருகிறதென்பதையும் படிப்போம்.

கற்பலகை ஒருவகையான கல்லிலிருந்து செய்யப்படுவது. அது கனிகளினின்றும் வெட்டி எடுக்கப்படுகின்றது. சில இடங்களிலே மலைப்பக்கங்களிலிருந்து பிளந்தெடுக்கப்படுவதும் உண்டு; இப்பலகைக் கற்களுக்கும் மற்றக் கற்களுக்கும் மிகுந்த பேதமுண்டு; பலகைக் கற்களை ஒரே சமமாயும் ஒரே கனமாயும் உள்ள மிகவும் மெல்லிய பலகைகளாகப் பிளந்தெடுக்கலாம்; மற்றக் கற்களை அவ்வாறு பிளந்தெடுக்க முடியாது; அவை துண்டுதுண்டாய் உடைந்துபோம்; மேலே

படத்திற் காட்டியிருப்பது பலகைக் கற்களின் குன்றேயாம். இவ்விதமான குன்றுகள் இங்கிலாந்தில் அநேகம் இருக்கின்றன.

கல்வேலைக்காரன் ஒரு பெரிய கல்லைத் தன் முழங்கால்கள் இரண்டிற்கும் இடையில் வைத்துக்கொண்டு அதிற் கல்லுளியை வைத்துச் சம்மட்டியால் அடித்து அதனைத் தட்டையான மெல்லிய பல பலகைகளாகப் பிளந்துவிடுவான். அந்தக் கற்களை நிலத்திலிருந்து பெயர்த்தெடுத்தவுடன் ஈரமாயிருக்கையிலேதான் இவ்வாறு பலகை பலகையாகப் பிளக்க முடியும். பூமியினின்றும் பெயர்த்தெடுத்தபின் சிறிதுநேரம் அதை வெயிலிற் போட்டுவைத்து அப்பால் பிளக்கப்போனால் அது சரியாகப் பிளவுறாது.

அவ்வாறு பெயர்க்கும்பொழுதே அப்பலகை எழுதுவதற்கு ஏற்றவண்ணம் மழமழவென்று இராது; பிறகு அதை முதலில் யந்திரக்கல்லினாலும் மறுபடி மணலினாலும் தேய்த்து மிருதுவாக்கவேண்டும்.

இப்பலகைக் கற்களுக்கு முக்கியமான உபயோகம் இரண்டு உண்டு: முதலாவது, அது வீடுகளுக்குக் கூரைவேயப் பயன்படுகின்றது; இங்கிலாந்தில் இப்பலகைக் கற்கள் விசேஷமாகவும் விலை எளிதாகவும் சில இடங்களில் கிடைக்கும்; பெரும்பாலும் அந்த இடங்களிலெல்லாம் வீடுகளின் மேற்கூரைகளுக்கு இவைகளையே வாங்கி உபயோகிக்கின்றனர். ஓடுகள்போல் இக்கற்களை ஒரே உருவமாயும் ஒரே அளவாயும் வெட்டி ஒன்றின்மேல் ஒன்றாய் ஒழுங்காகப் பாப்புவார்கள். சில கற்களில் ஊறுவதுபோல் இந்தப் பலகைகளில் ஒருபோதும் தண்ணீர் ஊறுவதில்லை.

இரண்டாவது, கற்பலகை எழுதுவதற்கு உபயோகப்படும். மெல்லிய சிறு கற்பலகைகள் கீழே கைதவறி வீழ்ந்து உடையாமலும், கையிற் பிடித்துக்கொண்டுபோக எளிதாகவும் இருப்பதற்கு அனுகூலமாக நாற்புறமும் மரச்சட்டம் போட்டு உபயோகிக்கிறார்கள்.

இவ்வகையான பலகைகளின்மேல் இக்கற்களாலேயே செய்யப்பட்ட மெல்லிய 'பலப்பம்' என்கிற எழுதுகோலினால்

எழுதுவார்கள். அது நீண்டும் உருண்டும் இருக்கும். கறுப்பு நிறமான பலகையின்மேல் எழுதினால் வெண்மை நிறமான எழுத்துக்கள் அமைகின்றன. எழுதுவதற்கு இப்பலகைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டதற்கு இரண்டு காரணமுண்டு: முதலாவது, பேனாவினால் காகிதத்தில் எழுதுவதைக்காட்டிலும் அதிக விரைவாகவும் சுலபமாகவும் பலகையின்மேல் எழுதக்கூடும்; இரண்டாவது, எழுதின காரியம் முடிந்துபோனால், உடனே அழித்துவிட்டு அதையே பின்னும் பலமுறை எழுதுவதற்கு உபயோகித்துக்கொள்ளலாம்.

பலகையின்மேல் எழுத எழுத எழுதுகோல் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்துகொண்டேவரும்; எழுதும்போது அதில் சிறிதளவு பலகையில் ஒட்டிக்கொள்வதனால் அவ்வாறு அது தேய்ந்துபோகின்றது. பலகையில் தெரிகிற எழுத்து பலப்பத்தின் தூளேயாம்.

தென்னிந்தியாவிலும் கற்பலகைக் குன்றுகள் சிலவுண்டு. முக்கியமாய் அவை கடப்பை, கர்நூல் ஜில்லாக்களில் இருக்கின்றன. கடப்பைக் கற்கள் என்று நமது நாட்டில் வருபவைகள் அக்குன்றுகளின் கற்களே. அவ்விடங்களில் அக்கற்கள் வீட்டு மேற்கூரைகளுக்கும் உபயோகிக்கப்படுகின்றன.

**இலக்கணம்.**—வினைச் சொல்லாவது என்ன? ஒரு பொருளின் தொழிலை உணர்த்துவது வினைச்சொல். கற்பலகை பயன் படுகிறது: இதில் கற்பலகையின் தொழிலாகிய 'பயன்படுதல்' என்பதை 'பயன்படுகிறது' என்னும் வினைச்சொல் தெரிவிக்கிறது. படிப்போம், உடைந்துபோம், இருக்கின்றன, கிடைக்கும்: இவை எவ்வாறு வினைச்சொல்லாகும்? வினைச்சொல் காலத்தைக் காட்டும். ஒரு காரியம், நடந்தது, நடக்கிறது, நடக்கும் என்னும் மூன்று விதங்களையும் வினைச்சொல் காட்டும். இம்மூன்று காலங்களுக்கும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம் என்று பெயர். படிக்கும், படிப்போம், எடுக்கப்படுகிறது, பிளந்துவிடுவான்: இவை என்ன காலத்தைக் காட்டுகின்றன?

**குறிப்பு.**—கனி-சுரங்கம்; பேதம்-வித்தியாசம்; குன்று-சிறியமலை; பிளவுறுது-பிளவுபடாது; தூள்-பொடி.



## 12. கோதுமை.

பழையகாலத்து முக்கியமான தானியங்களுள் கோதுமை ஒன்று. உலகத்தில் ஜனங்கள் அதை ஆகாரத்திற்கு உபயோகிப்பார்கள். இங்கிலாந்திலும், அமெரிகாவிலும், ஆஸ்திரேலியாவிலும் உள்ள ஆங்கிலேயர்களுக்கு அது முக்கியமான ஆகாரப்பொருள்; ஐரோப்பாவில் பல இடங்களிலும் கோதுமையை உணவாக உபயோகித்துவருகிறார்கள்.

இங்கிலாந்தில் சில ஏழை ஜனங்கள் ஆகாரத்துக்கு வேறு வழியில்லாமல் கோதுமை ரொட்டியினாலேயே பசியைத் தணித்துக்கொள்ளுவார்கள். ஆதலால் 'ரொட்டி' என்பது இங்கிலாந்தில் 'ஆகாரம்' என்ற அர்த்தத்தில் உபயோகப்படுகிறது. ரொட்டிக்கு வழியில்லை யென்றால் ஆகாரத்துக்கு வழியில்லை என்பது பொருள். சோற்றுக்கு வழியில்லை என்பதும் அதே அர்த்தத்தில்தான் வழங்குகிறது.

இந்தியாவில் கோதுமையானது பஞ்சாபிலும், வடமேற்கு மாகாணத்திலும், ஐக்கிய மாகாணங்களிலும், ராஜபுதனத்திலும், கூர்ஜாத்திலும், சிந்துதேசத்திலும், நைஸாம் ராஜ்யத்திலும், வங்காளத்திலும் மிகுதியாக விளைகிறது. கோது

மைதான் இந்த இடங்களில் உள்ளவர்களுக்கு முக்கியமான ஆகாரப்பொருள். சென்னை ராஜதானியில் கோதுமை அதிகமாக உண்டாகாவிட்டாலும் ஆகாரத்துக்காகச் சிலரும் பட்சணங்களுக்காகப் பலரும் அதை உபயோகிப்பதுண்டு.

ஒரு கோதுமையை உடைத்தால் நடுவில் பசைபோன்ற பொடி இருக்கும்; அதுதான் ரவா என்பது. அது ரத்தத்தைச் சுத்தப்படுத்தித் தேகத்துக்கு பலத்தைக் கொடுக்கும். எங்கே பனி அதிகமாகப் பெய்கிறதோ அங்கேதான் கோதுமை ஏராளமாக விளையும். ஆனாலும், கோதுமைப்பயிருக்கு ஆரம்பத்தில் மழை அவசியமானது; இல்லாவிட்டால் பயிர் நன்றாக வளராது. அது புஷ்பித்துப் பலனைக் கொடுப்பதற்குப் பனி அவசியமானது. செழிப்பான பூமியிலேதான் கோதுமை உண்டாகும். நிலத்தை நன்றாக உழுது நல்ல எருக்களை அதில் போடவேண்டும். பச்சைப் பயறு முதலியன உண்டாகும் இடங்களில் அங்குள்ள ஜலத்தின் உதவியால் கோதுமையும் விளைகிறது.

இந்துஸ்தானத்தில் விளையும் கோதுமையில் பலவகையுண்டு. வெள்ளைக் கோதுமையும், சிவப்புக் கோதுமையும் முக்கியமானவை. சில கோதுமைகள் மிருதுவாகவும், சில கெட்டியாகவும் இருக்கும். மிருதுவாக உள்ள வகையே சுலபமாக விளையும்; ரவா உடைப்பதற்கு அதுவே அதிக உபயோகமானது. இந்தியாவில் விளையும் கோதுமையில் பாதி நன்செய் நிலத்திலும் பாதி புன்செய் நிலத்திலும் உண்டாகின்றன. எரு அதிகமாக இல்லாமலே சில இடங்களில் கோதுமை விசேஷமாக விளைகிறது. ஒரே நிலத்தில் இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறைதான் கோதுமை உண்டாகும். கோதுமை விளையாதபோது அந்த இடத்தில் கம்பு, இஞ்சி முதலியவற்றைப் பயிரிடுவார்கள்.

கோதுமையை முதல்நாள் இரவில் கொஞ்சம் தண்ணீர் தெளித்து ஊறவைத்து மறுநாட்காலையில் எந்திரத்தில் அரைத்தால் அது சீக்கிரத்தில் நொய்யாகவும் மாவாகவும் பிரியும். அரைக்கும்பொழுது பெருந்துளியாக விழுவது நொய். அதுதான் கோதுமையில் சாரமான பாகம்; ஆதலால் மாவைக்காட்டிலும் நொய்க்கு விலை அதிகம். கெட்டி

யான கோதுமையிலிருந்து எடுக்கும் நொய் மிகவும் சிலாக்கியமானது. நொய்யினால் பலவிதமான பணியாரங்கள் செய்கிறார்கள்.

வட இந்தியாவிலுள்ள ஜனங்கள் கோதுமைமாவை அடையாகத் தட்டிப் புசிக்கிறார்கள். அங்கேயுள்ள மகம்மதியர்களுக்கு அதுவே முக்கியமான உணவு. சிலர் கோதுமைமாவினால் பூரி செய்து அதனோடு சர்க்கரையும், நெய்யும் கலந்து தின்பார்கள். ஐரோப்பியர்கள் அந்த மாவினால் ரொட்டி செய்து உபயோகிக்கிறார்கள். இந்தியாவில் பெரும்பாலும் கோதுமை ரொட்டி மகம்மதியர்களால் செய்து விற்கப்படுகிறது.

இந்தியர்கள் அரிசியையும் கம்பையும் கேழ்வரகையும் சோறாகச் சமைத்துச் சாப்பிடுவதுபோல் ஐரோப்பியர்கள் ஒவ்வொரு போஜனகாலத்திலும் கோதுமை ரொட்டியை உபயோகிப்பார்கள்.

**இலக்கணம்.**—*வினைச்சொல்லானது வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் என மூன்று வகைப்படும். ஒரு வினைச்சொல்லானது தன் எழுவாயின், திணை, பால், இடங்களைக் காட்டுமாயின் அது வினைமுற்றாகும். அவ்வாறு காட்டாதது எச்சமாகும். பெயரெச்சம் பெயரைக்கொண்டு முடியும்; வினையெச்சமானது, வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் இந்த மூன்றனுள் ஏதேனும் ஒன்றைக்கொண்டு முடியும். கோதுமையை உடைத்தால் நடுவில் பசைபோன்ற பொடி இருக்கும்: இவ்வாக்கியத்தில் வினைமுற்றுக்கும், வினையெச்சத்துக்கும் பெயரெச்சத்துக்கும் உதாரணம் காட்டுக. உடைத்தால்-வினையெச்சம்; இருக்கும் என்ற வினைமுற்றைக்கொண்டு முடிந்தது. போன்ற-பெயரெச்சம்; பொடி என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது. இருக்கும்-வினைமுற்று. பொடி என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக வந்தது.*

**குறிப்பு.**—*விளைகிறது-உண்டாகிறது; ஆரம்பத்தில்-முதலில்; சிலாக்கியமானது-சிறந்தது; போஜனம்-சாப்பாடு.*

# 13. நளன்.

வெகுகாலத்துக்கு முன்னே நிஷததேசம் என்று பெயருள்ள ஒரு நாடு பிரபலமாக இருந்தது. அதனை, வீரசேனன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். மாவிந்த நகரம் என்பது அவனுடைய ராஜதானி; அவனுடைய புத்திரனுக்கு நளன் என்று பெயர். வீரசேனனுக்குப் பிறகு நளன் பட்டத்துக்கு வந்து ராஜ்யத்தை மிகவும் நன்றாக அரசாட்சி செய்தான். எல்லா நற்குணங்களுக்கும் அவன் இருப்பிடம்; அவன் சிறந்த கொடையாளி ஆனால் சூதாட்டத்தில் அவனுக்கு அதிக விருப்பம் உண்டு.

அவனுடைய காலத்தில் வீமராசன் என்பவன் குண்டினபுரம் என்னும் நகரத்தில் அரசனாக இருந்தான். அவனுடைய பெண்ணுக்கு தமயந்தி என்று பெயர். அவள் சிறந்த அழகுடையவள். அவளை விவாகம்செய்துகொள்ளுவதில் நளன் விருப்பங்கொண்டான். தமயந்தியும் அவனுடைய குணங்களைப்பற்றி விசேஷமாகக் கேட்டு அவனையே கலியாணம் செய்துகொள்ள விரும்பினாள்.

அந்தக்காலத்தில் ஒரு ராஜகன்னிகைக்கு விவாகம் என்றால், விவாகதினத்துக்கு முன்பு பல இடங்களிலிருந்தும் இளவரசர்கள் பலர் அழைக்கப்பட்டு ஒரு மண்டபத்தில் வந்து கூடுவார்கள். கலியாணம் ஆகவேண்டிய கன்னிகை, கையில் ஒரு பூமாலையை எடுத்துக்கொண்டு, சபைக்கு வந்து, அங்கு வந்திருப்போர்களுடைய குணங்களையும் அழகையும் தெரிந்துகொண்டு, தனக்கு இஷ்டமானவனுக்கு அந்த மாலையைப் போடுவாள். பிறகு அந்த இரண்டுபேர்களுக்கும் விதிப்படி விவாகம் நடக்கும்; இவ்வழக்கத்திற்கு 'சுயம்வரம்' என்று பெயர்.

வீமராசன் தமயந்திக்கு ஒரு தினத்தில் சுயம்வரம் நடக்கப்போவதாக, பல இடங்களுக்கும் தூதர்களை அனுப்பித் தெரிவித்தான். குறிப்பிட்ட தினத்தில், இந்திரன், வருணன், யமன், அக்கினி முதலிய தேவர்களும், நளன் முதலிய அரச குமாரர்களும் சபாமண்டபத்தில் வந்திருந்தார்கள். தமயந்தி ஒருவரையும் கவனியாமல் நளனுக்கே

மாலை சூட்டினாள். இருவருக்கும் சிறப்பாக விவாகம் நடந்தது. அவளைத் தானடையவேண்டுமென்று மிக்க ஆசை கொண்டிருந்த கலிபுருஷன் கொஞ்சம் தாமதித்து வந்தான். அவன் வருவதற்குள் விவாகம் முடிந்துவிட்டது. அதனால் அவன் மிகுந்த விருத்தமடைந்து, நளனிடத்தில் பொறாமை கொண்டு அவனுக்கு ஏதேனும் துன்பத்தை உண்டாக்க வேண்டுமென்று அதுமுதல் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.

விவாகம் முடிந்தபின்பு நளன் தமயந்தியுடன் மாவிந்த நகரத்துக்கு வந்து சிலகாலம் அவளுடன் சுகமாக வசித்து வந்தான். அவர்களுக்கு ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும் பிறந்தார்கள்.

கலிபுருஷன் நிஷததேசத்துக்கு வந்து நளனைப் பிடிக்கப் பன்னிரண்டு வருஷகாலம் காத்திருந்தான். அவனிடத்தில் ஒருவிதமான குற்றத்தையும் காணாமையால் மிகவும் வருந்தினான். பின்பு ஒருநாள் நளன் காலலம்பியபொழுது பாதத்தின் ஒருபக்கத்தில் ஜலம் படவில்லை. நளனிடத்தில் ஏற்பட்ட அந்தக் குற்றத்தைக்கண்ட கலிபுருஷன் அவனைத் தொடர்ந்துகொண்டான்.

நளனுடைய சிற்றப்பன் மகனான புஷ்கரன் என்பவன் ஒரு சிற்றரசனாக இருந்தான். கலிபுருஷன் அவனிடம் சென்று நளனோடு சூதாடும்படி அவனைத் தூண்டினான். உடனே புஷ்கரன் சூதாட்டத்திற்கு நளனை அழைத்தான். அந்த ஆட்டத்தில் நளனுக்கு விசேஷமான பிரியம் இருந்ததால் அதற்கு ஒப்புக்கொண்டு ஆட ஆரம்பித்தான். மந்திரிகள் எவ்வளவோ சொல்லித்தடுத்தும் அவர்கள் வார்த்தையை நளன் கேட்கவில்லை. கலிபுருஷன் புஷ்கரனுக்கு வேண்டிய உதவி செய்தமையால் சூதாட்டத்தில் அவன் ஜயம் அடைந்தான்.

நளன் தன்னுடைய செல்வங்களையும் ராஜ்யத்தையும் தோற்று மனைவி மக்களுடன் நகரத்தை விட்டுப்போக நேர்ந்தது. தன் குழந்தைகளை வீமராசனிடம் அனுப்பி மனைவியுடன் காட்டுக்குச் சென்றான். அவனும் மனைவியும் உடுத்திக்கொண்டிருந்த வஸ்திரங்களைத்தவிர அவர்களிடம் வேறு ஒன்றும் இல்லை.

அவர்கள் காட்டில் போய்க்கொண்டிருக்கையில் கலிபுருஷன் ஓர் அன்னபட்சி வடிவமாக அவர்களுக்கு முன்னே வந்து தோன்றினன்; அந்தப் புட்சியைப் பிடித்துக் கொடுக்கும்படி தமயந்தி நளனை வேண்டினாள். அப்போது ஒரே வஸ்திரத்தைத் தானும் தமயந்தியுமாக உடுத்திக்கொண்டு மற்றொரு வஸ்திரத்தை அந்தப் பறவையின்மேல் வீசி யெறிந்து பிடிக்கப்போனன். அவன் பிடிப்பதற்குள் அது வஸ்திரத்துடன் பறந்து போய்விட்டது.

பிறகு அவர்கள் இருவரும் மிகுந்த வருத்தத்துடன் நடந்துசென்று இருட்டிப்போனதும் ஒரு பாழ் மண்டபத்தில் படுத்துக்கொண்டார்கள். தமயந்தி தூங்கின சமயத்தில் அவளைத் தனியே விட்டுவிட்டு நளன் பிரிந்துபோக எண்ணினன். அந்த வேளையில் கலிபுருஷன் ஒரு கத்தியாக வந்து தோன்றினன். அதைக்கொண்டு இருவருக்கும் பொதுவாயிருந்த வஸ்திரத்தைக் கிழித்து மனைவியை மண்டபத்தில் விட்டு விட்டு நளன் காட்டில் நடந்து சென்றான்.

பிறகு தமயந்தி திடீரென்று விழித்துக்கொண்டாள். பக்கத்தில் நளனைக் காணமல் பலவாறு புலம்பினள். நளனைத் தேடிக்கொண்டு சென்று வழியில் பல கஷ்டங்களை யனுபவித்துக் கடைசியில் தன் தகப்பனுடைய ஊர் போய்ச் சேர்ந்தாள். எப்போதும் அவள் நளனுடைய ஞாபகமாகவே இருந்தாள்.

நளன் காட்டில் போய்க்கொண்டிருக்கும்போது வழியிலே ஒரு பெரிய பாம்பு நெருப்பில் அகப்பட்டு வருந்திக் கொண்டிருந்தது. அதைப்பார்த்த நளன் அதனிடம் இரக்கங் கொண்டு நெருப்பினின்று அதை வெளியே எடுத்துவிட்டுக் காப்பாற்றினன். உடனே பாம்பு அவனைக் கடித்தது. அதனல் அவன் விகாரமான வடிவத்தை அடைந்தான். 'உபகாரஞ் செய்ததற்கு அபகாரம் செய்யலாமா?' என்று நளன் கேட்க, பாம்பு இரண்டு வஸ்திரங்களை அவனுக்குக் கொடுத்து அவற்றை உடுத்திக்கொண்டால் பழைய வடிவத்தை அடையலாமென்று சொல்லிற்று.

பிறகு அந்த வஸ்திரங்கள் இரண்டுடன் நளன் அயோத்தி நகரம் சென்று அங்கே அயோத்தி மன்னனுடைய தேர்ப்பாகனக இருந்துவந்தான்.

தமயந்தி விரும்பியபடி அவள் தகப்பன் நளன் இருக்கும் இடத்தை அறிந்துவரும்படி பல இடங்களுக்கும் தூதர்களை அனுப்பினான். அவர்களில் ஒருவன் அயோத்தியில் இருக்கும் தேர்ப்பாகனே நளனாக இருக்கலாமென்று தமயந்தியினிடம் வந்து தெரிவித்தான். அவனை வரவழைப்பதற்காக வீமராசன் ஓர் உபாயம் செய்தான். ஒரு தூதனை அயோத்தி அரசனிடம் அனுப்பி, தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் நடக்கப்போகிறதென்று தெரிவிக்கச்சொன்னான்.

தூதன் அயோத்தி மன்னனிடம் போய் அவ்வாறே தெரிவித்தான். அதைக்கேட்டதும் அந்த மன்னன் தேர்மேல் ஏறிக்கொண்டு குண்டினபுரத்தை நோக்கிப் புறப்பட்டான். தேர்ப்பாகனான நளன் தேரை ஓட்டினான். பிறகு இரண்டு பேர்களும் குண்டின புரத்தை அடைந்தார்கள். சில அடையாளங்களால் தேர்ப்பாகனே நளன் என்று தமயந்தி அறிந்து கொண்டாள். நளனும் பாம்புகொடுத்த வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு தன்னுடைய இயற்கை வடிவத்தை அடைந்தான். பிறகு தமயந்தியையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு நளன் மாவிந்த நகரம் போனான்; அங்கே புஷ்கரனோடு சூதாடி பழையபடி தன் ராஜ்யத்தை அடைந்து வெகுகாலம் சுகமாக வாழ்ந்துவந்தான்.

**இலக்கணம்.**—அதனை வீரசேனன் என்னும் அரசன் ஆண்டுவந்தான்: இதில் ஒவ்வொரு வார்த்தையும் இன்ன இன்ன சொல் என்பதைத் தெரிவிக்க. ஒரு வாக்கியத்தில் எழுவாய் ஒருமையாக இருந்தால் பயனிலை ஒருமையாகவும், எழுவாய் பன்மையாக இருந்தால் பயனிலை பன்மையாகவும் இருக்கவேண்டும். அரசன் ஆண்டுவந்தார்: இதில் என்ன பிழை? அரசன் என்பது ஒருமை. வந்தார் என்பது பன்மை. ஆகையால் வந்தான் என்பதுதான் சரியானது. அவள் அழகுடையவர்; நளன் விருப்பங்கொண்டார்; பலர் கூடுவான்: இவற்றிலுள்ள பிழைகளைத் தெரிவிக்க.

**குறிப்பு.**—பிரபலமாக - பிரசித்தியாக; விவாகம் - கலியாணம்; கன்னிகை-பெண்; தாமதித்து-நேரம் பொறுத்து; அன்னம்-ஹம்ஸம்; புலம்பினாள்-அழுதாள்; உபகாரம்-உதவி; சுகமாக-சௌக்கியமாக.



# 14. நமது உடை.

நாம் உடுத்துக்கொள்ளும் உடைகள் பருத்தி நூலினாலும், ஆட்டுரோமத்தினாலும், நாரினாலும், பட்டினாலும் நெய்யப்படுகின்றன. பெரும்பாலும் ஜனங்கள் பருத்திநூல் வஸ்திரங்களையே உபயோகிக்கிறார்கள். நாரினாலும், பட்டினாலும் நெய்த வஸ்திரங்களின் விலை அதிகமாயிருக்கும்.

பருத்தி ஒருவகையான செடியிலிருந்து உண்டாகிறது. இந்தியாவிலும், எகிப்திலும், அமெரிகாவிலும், ஆஸ்திரேலியாவிலும் பருத்திச் செடிகள் சாதாரணமாய்ப் பயிராகின்றன. அமெரிகாவில் உண்டாகும் பருத்தியே மிகவும் சிறந்தது. அந்த நூல் மிகவும் மேலான வஸ்திரங்களை நெய்ய உதவுகிறது. இந்தியாவிலும், எகிப்திலும் பயிராகும் பருத்தியின் நூலினால் கெட்டித்துணிகள் நெய்யலாம்.

பருத்திச் செடியில் இரண்டுவித முண்டு. சில செடிகள் நான்கு அல்லது ஐந்தடி உயரம் நேராக வளர்ந்து பார்ப்பதற்கு ஒரு புதர்போல் கவிந்திருக்கும். உலகத்தில் வஸ்திரங்கள் நெய்ய உபயோகப்படும் நூல் முழுவதும் இந்த வகையான செடியின் பஞ்சிலிருந்தே நூற்கப்படுகிறது. வேறொரு வகையானது மரமாக உள்ளது. அது சீன தேசத்திலும், இந்தியாவிலும் இருபதடி உயரம்வரையில் வளரும். இதன்



காய்களில் பஞ்சு இருக்கிறது. கொட்டையிலிருந்து பஞ்சை வேறாகப் பிரித்து எடுப்பதற்கு இந்தியாவில், மூங்கில் குச்சிகளால் செய்த ஒரு கருவியையும், சீன தேசத்தில் ஒருவகை யந்திரத்தையும் உபயோகிக்கிறார்கள். பஞ்சு நூல் நூற்க உதவுகிறது. பருத்திக்கொட்டை மாட்டின் தீனிக்கு உபயோகமாகிறது. அதிலிருந்து ஒருவிதமான எண்ணெயும் எடுப்பதுண்டு. .

கொட்டை யெடுத்த பஞ்சின் சிலபாகத்தை இந்தியாவிலேயே நூற்று வஸ்திரங்கள் நெய்து மற்றப்பாகத்தை அயல் நாடுகளுக்கு எற்றுமதி செய்து அனுப்புகிறார்கள். இங்கிலாந்தைப்போல் இந்தியாவில் வஸ்திரங்கள் விசேஷமாக நெய்யப்படுவதில்லை. இந்தியர்கள் உபயோகிக்கும் வஸ்திரங்கள் பெரும்பாலும் இங்கிலாந்திலிருந்து வருபவைகளே. அவ்விடத்தில் துணிகள் நெய்வதற்குப் பல யந்திரசாலைகள் உள்ளன. ஆதலால் அவர்கள் சுலபமாக வஸ்திரங்கள் நெய்து இந்தியாவுக்கு அனுப்புகிறார்கள்.

இங்கிலாந்தில் பருத்தி விளைவதில்லை. ஆதலால் ஆங்கிலேயர்கள் அயலிடங்களிலிருந்து பஞ்சை வருவித்து அதைக் கொண்டு நால்நூற்றும் வஸ்திரம் நெய்தும் பிறநாடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

உஷ்ணதேசங்களில் வசிக்கும் ஜனங்கள் பருத்திவஸ்திரங்களையே விசேஷமாக உபயோகிக்கிறார்கள். குளிர்தேசத்து மனிதர்களும் அதை உபயோகிப்பதுண்டு. ஆனால் கம்பளி உடைகளே அவர்களுக்கு அதிகமான பிரயோசனமுள்ளவை. ஆட்டுமயிரினால் செய்த கம்பளிஉடைகள் உஷ்ணமாயிருக்கும்; தேகத்திலுள்ள உஷ்ணத்தை அவை வெளிவிடாமல் காக்கும். அதனாலேதான் சீதளதேசத்திலுள்ளவர்கள் கம்பளி உடைகளை உடுத்திக்கொள்ளுகிறார்கள். கம்பளி உடைகளுக்கு உபயோகமான ஆட்டுரோமம் ஆட்டின் முதுகிலே முளைக்கிறது. சில ஜாதி ஆடுகளின் ரோமம் நீளமாகவும், வேறு சிலவற்றின் ரோமம் குட்டையாகவும் இருக்கும். இந்தியாவில் உள்ள ஆடுகளைக்காட்டிலும் இங்கிலாந்து ஆஸ்திரேலியா முதலிய இடங்களிலுள்ள ஆடுகள் சிலாக்கியமானவை.



ஆஸ்திரேலியாவில் ஆடுகள் லக்ஷக்கணக்காகவுள்ளன. குளிர்காலத்தில் அவைகளுக்குக் குளிர் தாக்காமலிருக்கும் பொருட்டே மயிர் அவற்றின்மேல் அடர்த்தியாய் வளர்கிறது. அப்படியே விட்டுவைத்தால் கோடைக்காலம் வந்த

வுடன் மயிர் தானே உதிர்ந்துபோம். குளிர்காலம் நீங்கிய வுடன் ஆடுகளை நன்றாகக் குளிப்பாட்டிப் பிறகு ரோமத்தைக் கத்தரித்து எடுப்பார்கள்.

கத்தரித்தெடுத்தபிறகு மயிர்களை நன்றாகச் சுத்திசெய்து அவற்றிலுள்ள அழுக்கையும் நாற்றத்தையும் போக்கிவிட்டு அப்பால் வேண்டிய சாயங்களில் தோய்ப்பார்கள். ஒரு சாயத்திலும் தோய்க்காமல் இயற்கையான வெண்மை நிறத்திலேயே வைத்துக்கொள்ளுவதுமுண்டு. பிறகு யந்திர சகாயத்தினால் மயிரிலிருந்து சிக்கை எடுத்து நூற்றுப் பலவிதமான ஆடைகள் நெய்வார்கள். ஆட்டுரோமத்தினால் சட்டைகளுக்கு உபயோகமான பல கம்பளங்களும், சால்வைகளும், போர்வைகளும், காற்கவசம், கைக்கவசம் முதலியவைகளும், குல்லாக்களும், ரத்தின கம்பளங்களும் நெய்யப்படுகின்றன.

பட்டுநூலை ஒரு பூச்சி நமக்கு நூற்றுக் கொடுக்கிறது. அதனால் நெய்யப்படும் வஸ்திரங்கள் தினப்படி உபயோகிக்கக் கூடியவையல்ல; விசேஷ காலங்களில்மட்டும் உபயோகிக்கத்தக்கவை. பட்டுநூலோடு சரிகையையும் கலந்து வஸ்திரங்கள் நெய்வதுண்டு, அவற்றிற்கு, 'பீதாம்பரம்' என்று பெயர். அவை மிகவும் விலையுயர்ந்தன.

சில செடிகளின் நாரிலிருந்தும் வஸ்திரங்கள் நெய்கிறார்கள். அவற்றிற்கு நார்மடிகள் என்று பெயர். பட்டு வஸ்திரங்களைப்போலவே அவைகளும் விலைபெற்றவை.

ஒட்டகை மயிரிலிருந்தும் சில தேசங்களில் துணி நெய்துகொள்ளுகிறார்கள்.

**இலக்கணம்.**—எழுவாயும் பயனிலையும் திணை, பால், இடம் இவற்றில் ஒத்திருக்கும். உடைகள் நெய்யப்படுகின்றன: இவ்வாக்கியத்தில், உடைகள்—அஃறிணை, பலவின்பால், படர்க்கையிடம்; நெய்யப்படுகின்றன-அஃறிணை, பலவின்பால், படர்க்கையிடம். ஜனங்கள் உபயோகிக்கின்றன; விலை அதிகமாயிருக்கிறார்: இவற்றிலுள்ள பிழைகளைத் திருத்துக.

**குறிப்பு.**—உடை-வஸ்திரம்; ரோமம்-மயிர்; பிறநாடுகள்-வேறு தேசங்கள்; தினப்படி-தினந்தோறும்.

## 15. நிலக்கடலை.

நமது தேசத்தில் எண்ணெயானது பலவகை விதைகளிலிருந்தும், கொட்டைகளிலிருந்தும், பட்டைகளிலிருந்தும் எடுக்கப்படுகிறது. நிலக்கடலை யென்பது ஒருவகையான விதை. அதற்கு வேர்க்கடலை யென்றும், மணிலாக் கொட்டை யென்றும், கடலைக் கொட்டை யென்றும் வேறு பெயர்கள் உண்டு. வெகுகாலமாக இந்துஸ்தானத்தில் நிலக்கடலை பயிரிடப்பட்டு வருகிறது. இப்போது ஐரோப்பாவிலும் அதைப் பயிரிட ஆரம்பித்திருக்கிறார்கள். ஐரோப்பியர்கள் முன்பு ஒலிவை (Olive) எண்ணெயை உபயோகித்து வந்தார்கள்; பதினெட்டாம் நூற்றாண்டில் ஸ்பெயின் தேசத்தார்கள் தென் அமெரிகாவிலிருந்து நிலக்கடலையைக் கொண்டுவந்து தங்கள் தேசத்தில் பயிரிட ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகு ஐரோப்பாவில் ஒலிவை எண்ணெயின் உபயோகம் வரவரக் குறைய நிலக்கடலை யெண்ணெயின் உபயோகம் அதிகரித்தது. ஒலிவை எண்ணெயைக்காட்டிலும் கடலையெண்ணெய் மேலானது.

வேர்க்கடலையானது அரை அங்குலம்முதல் ஒன்றரை அங்குலம்வரையில் நீண்டிருக்கிறது. அதன் மேலேயுள்ள மெல்லிய ஓட்டை எடுத்துவிட்டால் உள்ளே பருப்புகள் இருக்கும். ஓட்டில் பல புள்ளிகள் உள்ளன. கடலைப் பருப்பானது பார்வைக்கு வேப்பம்பருப்பைப்போல் இருக்கும். பருப்புக்குமேல் சிவப்பு நிறமான தோல் உண்டு. தேய்த்து அதை நீக்கிவிட்டால் பருப்பு வெண்மைநிறமாக இருக்கும். அந்த வெண்மையான பருப்பே கடலையின் சாரமான பாகம். அதைக் கையினால் நசுக்கிப்பார்த்தால் உள்ளே எண்ணெய் இருப்பது தெரியும்.

நிலக்கடலை பூமிக்குள் வேரில் காய்ப்பதால் அதை ஒரு கிழங்கின் வகையென்று சொல்லலாம். கடலைச்செடியொன்றை வெட்டிப் பார்த்தால் அதன் வேரில் கடலைக்காய்கள் கொத்துக்கொத்தாய் இருக்கும். கடலைக் கொட்டை முற்றின பிறகு அதன் பருப்பை எடுத்து அப்படியே சிலர் தின்பதுண்டு. அது மிகவும் ருசியாக இருக்கும். சர்க்கரை, வெல்லம் இவற்றோடு அதைக் கலந்தும் சிலர் தின்பார்கள்.

ஈரமுள்ள நிலமே கடலைப்பயிருக்கு ஏற்றது. மணல் பாங்காயுள்ள பிறதேசங்களில் உண்டாகும் கடலை அதிக எண்ணெயைக் கொடுக்கும். செம்மண் பூமியில் கடலை நன்றாக விளையும். மழைதொடங்கும் காலத்தில் குடியானவர்கள் கடலையைப் பயிரிட ஆரம்பிப்பார்கள். மழைத்தூறல் ஆரம்பித்தவுடனே அவர்கள் நிலத்தை இரண்டு மூன்றுதடவை நன்றாகவும் ஆழமாகவும் உழுவார்கள். எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக உழுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு ஆழமாக வேர்கள் பலபக்கங்களிலும் பாவி அதிகமான காய்களைக் கொடுக்கும். நன்றாக நிலத்தை உழுதுவிட்டு மாட்டுச்சாணம், ஆட்டுப்புழுக்கை முதலிய எருக்களைப்போட்டு நிலத்தைச் சமனாக்கி அப்பால் விதைகளை விதைப்பார்கள். நன்றாக உலர்ந்த சாணத்தையே எருவாக உபயோகிக்க வேண்டும். சாணம் ஈரமாக இருந்தால் அதிலிருந்து புழுக்கள் கிளம்பி, கடலையின் முளைகளை அழித்துவிடும். அமெரிகா கண்டத்தில் மீன், எலும்புத்தூள், செத்தமிருகங்கள், பறவைகள் முதலியவற்றையும் எருவாக உபயோகிக்கிறார்கள்.

கடலைவிதைகள் நன்றாக இராவிட்டால், அவற்றில் புழு விழுந்து கெடுத்துவிடும். ஆதலால், மிக்க அனுபவமுள்ள குடியானவர்கள் உயர்ந்த விதைகளைப் பொறுக்கி அவற்றைச் சாம்பலோடு கலந்து ஒரு பானையில் போட்டு அழுத்தமாக மூடி வைப்பார்கள். இரண்டு மூன்று தினங்களுக்குப்பிறகு அவற்றை வெளியே எடுத்து மேல் ஓட்டை நீக்கி நிலத்தில் ஊன்றுவார்கள். இவ்வாறு விதைத்த விதையிலிருந்து இரண்டு தினங்களுக்குள் முளை நன்றாகக் கிளம்பிவிடும். விதையின் மேலேயுள்ள சிவப்புத்தோலை எடுத்துவிட்டால் விதை ஒருபோதும் முளைக்காது.

பூமி சாரமாக இல்லாவிட்டால் விதைகளை அதிகமாக விதைக்கவேண்டும். வளமான நிலங்களில் நெருக்கமாக இராமல் விசாலமாகச் சில விதைகளைமட்டும் ஊன்றினால் போதுமானது. விதைகள் நெருக்கமாயிருந்தால் வேர் நன்றாகப் பாவாது.

நிலக்கடலையைப் பயிரிடுவது விநோதமாக இருக்கும். ஒருவன் கலப்பையால் நிலத்தை உழுதுகொண்டு போகும்

பொழுது வேறு இரண்டு மூன்றுபேர்கள் அவனுக்குப் பின்னே படைச்சாலில் விதைகளைப் போட்டுக்கொண்டே போவார்கள். நிலம் முழுவதும் அவ்வாறு விதைத்தபிறகு மறுபடியும் இரண்டுமுறை உழுவார்கள். அப்போது விதைகளின்மேல் மண் நன்ருக மூடிக்கொள்ளும். அப்பால் ஆடுகளை ஓட்டி நிலத்தைச் சமனுக்குவார்கள். மழை பெய்யாவிட்டால் நிலத்தில் பாத்திகள் கட்டி ஜலத்தைப் பாய்ச்சுவதுண்டு. விதைகள் ஜலத்தில் அதிகமாக ஊறினலும் நிலத்தில் ஈரம் அதிகம் இருந்தாலும் முளைகள் கிளம்பமாட்டா. ஆதலால் போதுமான ஈரம் உள்ளபோதே விதைகளை நிலத்தில் ஊன்றவேண்டும். இவ்விஷயங்களெல்லாம் பயிர்த்தொழிலில் அனுபவம் உள்ளவர்களுக்கு நன்ருகத் தெரியும்.

விதைத்தபிறகு கடலைக் கொல்லைகளில் காவல் காப்பது மிகவும் அவசியம். பகல் வேளைகளில் பறவைகளும் இராக்காலத்தில் நரிகளும் பயிர்களை அழித்துவிடும். குடியானவர்கள் அதற்காக ஒரு காக்கையைக் கொன்று எல்லாப்பட்சிகளும் பார்க்கும்படியான இடத்தில் அதைத் தொங்கவிட்டு வைப்பார்கள். அதைக்கண்டு மற்றப் பட்சிகள் பயந்து அந்த இடத்துக்கு வாாமல் போய்விடும். வைக்கோல், புல் இவற்ருல் மனிதனைப்போல் ஓர் உருவம் செய்து கொல்லையின் மத்தியில் வைப்பதுமுண்டு. இராத்திரிவேளையில் நரிகளை ஓட்டுவதற்குக் காவற்காரன் விழித்துக்கொண்டு கூச்சல் போடுவான். விதை விதைத்த இரண்டு மூன்று வாரங்களுக்குப் பிறகு முளைகள் நன்ருகக் கிளம்ப நிலம் மிகவும் பசுமையாக இருக்கும். அந்தக்காலத்தில் நிலத்தைப் பார்த்தால் மனத்துக்கு மிகுந்த ஆனந்தம் உண்டாகும். சில இடங்களில் செடிகள் நெருக்கமாயிருந்தால் அவற்றிற் சிலவற்றைப் பிடுங்கிச் செடிகள் இல்லாத இடத்தில் நடுவார்கள். விதை விதைத்தபிறகு ஒருமாதம்வரையில் தண்ணீர் விடவேண்டியதில்லை. அதற்குப்பிறகு மழை பெய்யாவிட்டால் வாரத்திற்கு ஒருமுறை ஜலம் இறைத்தாற் போதும். அதிகமான தண்ணீர் பூமியில் தங்கிஞல் செடிகள் வெளுத்துப்போம்; காய்களும் சிறுத்துவிடும். ஆறு மாதங்களுக்குப் பிறகு கொட்டைகள் முற்றும்; அப்பால் இலைகளும் பழுத்து உதிர்ந்துபோம்.

செடிகளெல்லாம் உலர்ந்தபிறகு ஒருநாள் நிலம் முழுதும் தண்ணீர் இறைத்து ஊறவைத்து மறுநாள் செடிகளை யெல்லாம் பிடுங்கிப் பல கட்டுகளாகக் கட்டி அவற்றை உலர்த்துவார்கள். பிறகு காயை வேறாகவும் செத்தையை வேறாகவும் பிரித்து ஏடுப்பார்கள். பசுக்கள் இந்தச் செத்தையைத் தின்றால் நல்ல பால்கொடுக்கும். காய்களினின்றும் ஓட்டை நீக்கிப் பருப்பைச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுப்பார்கள். கடலையெண்ணெயானது விளக்கெரிக்கவும், பணியாரங்கள் சுடவும், சவுக்காரங்கள் செய்யவும் உபயோகப் படுகிறது. கடலைப் பிண்ணாக்கை மாடுகளுக்குத் தீனியாக வைப்பார்கள். சிலர் அதை எருவாகவும் உபயோகிப்பதுண்டு. கடலைப்பருப்பின் மேலேயுள்ள தோலும் நல்ல எருவாகும்.

மற்ற எண்ணெய்களோடு கலக்கும் இயற்கை கடலையெண்ணெய்க்கு உண்டு. அதனால் வியாபாரிகள் அநேக இடங்களில் நல்லெண்ணெயோடு கடலையெண்ணெயையும் கலந்தே விற்பார்கள். கடலையெண்ணெய் தேகத்துக்கு மிகுந்த பித்தத்தை உண்டுபண்ணும். இந்தியாவில் பல இடங்களில் கடலை பயிரிடப்பட்டு அயலிடங்களுக்கு அனுப்பப்படுகிறது. அதனால் மற்றப் பயிர்களைக்காட்டிலும் அதிலிருந்து ஜனங்களுக்கு அதிகலாபம் கிடைத்துவருகிறது.

**இலக்கணம்.**—நிலக்கடலை ஒருவகையான விதை: இவ்வாக்கியத்தில் எழுவாய் பயனிலைகள் யாவை? பயனிலை என்னவகையானது? பெயரெச்சத்துக்கும் வினையெச்சத்துக்கும் என்ன வித்தியாசம்? ஓட்டில் பல புள்ளிகள் இருக்கிறது; காவற்காரன் கூச்சலிடுவார்: இவ்வாக்கியங்களில் என்ன தவறு? எப்படி யிருக்கவேண்டும்?

**குறிப்பு.**—விதை-விரை; ஏற்றது-தகுதியானது; விநோதமாக-வேடிக்கையாக; படைச்சால்-கலப்பை செல்லும் வழி; உருவம்-வடிவம்.

## 16. தேயிலையும் காபியும்.

இந்தியாவில் அநேகர் தேயிலைக் கஷாயத்தையும் காபியையும் மிகவும் பிரியமாக அருந்திவருகிறார்கள். இவை இரண்டும் இந்தியாவுக்குப் புதியவை. வட இந்துஸ்தானத்

தில் உள்ள ஜனங்கள் தேயிலைக் கஷாயத்தைமட்டும் சாப்பிடுகிறார்கள்; தென்னிந்தியாவிலோ இரண்டும் உபயோகப்பட்டு வருகின்றன.

நானூறு வருஷங்களுக்கு முன்பு சைனாவிலிருந்து தேயிலையை இங்கிலாந்துக்கு முதல் முதல் கொண்டுபோனார்கள். அப்போது அதன் விலை ராத்தலுக்கு இருநூறு ரூபாயாக இருந்தது. ஒருமுறை ஒருவியாபாரி ஆங்கிலேய அரசருக்கு இரண்டு ராத்தல் தேயிலையைக் காணிக்கையாகக்



கொடுத்து அவருடைய நன்மதிப்பை அடைந்தான் என்று சரித்திரத்தால் தெரிகிறது. இக்காலத்தில் மிகவும் சிறந்த தேயிலையின் விலை ராத்தலுக்கு ஒரு ரூபாய்க்கு மேலில்லை. சாதாரணமான தேயிலையின் விலை இன்னும் குறைவாக இருக்கும். இங்கிலாந்தில் தரித்திரர்களும் தேயிலைக்கஷாயம் பருகாமல் இருக்கமாட்டார்கள்.

இந்தியாவில் இப்பொழுது தேயிலை அகப்படாத இடம் இல்லை. அது கடிதப் பெட்டிகளிலும் தகர டப்பிகளிலும் அடைக்கப்பட்டுக் கடைகளில் விற்கப்படுகிறது. தேயிலைத் தூள் கறுப்பு நிறமானது. முதல் முதல் தேயிலைச்செடி சைனாவிலேதான் உற்பத்தியாயிற்று. சீனர்கள் பல நூற்றாண்டுகளாகத் தேயிலையை உபயோகித்து வருகிறார்கள். உலகத்திலுள்ள எல்லா இடங்களுக்கும் சைனாவிலிருந்துதான் அது போய்க் காண்டிருந்தது. நூறு வருஷங்களுக்கு முன்புதான் இலங்கைத்தீவிலும் இந்தியாவிலும் அதைப் பயிரிட ஆரம்

பித்தார்கள். இப்பொழுது இந்தியாவிலுள்ள எல்லா மலைகளிலும் தேயிலைத்தோட்டங்கள் அதிகமாய் உள்ளன. தென்னிந்தியாவில் நீலகிரியிலும் திருவாங்கூர் மலைகளிலும் அது விசேஷமாய் உண்டு.

தேயிலைச்செடியானது சாதாரணமாக எட்டு அல்லது ஒன்பது அடி உயரம் வரையில் வளரும். ஆனால் தோட்டக்காரர்கள் மூன்றடி உயரத்துக்குமேல் வளராமல் அதை



வெட்டி ஒரு புதர்போல் தழைக்கும்படி செய்வார்கள். அதன் மலர் மல்லிகைப் பூவைப்போல் சிறுத்து வெண்மையாயிருக்கும். ஆனால் மல்லிகையின் மணம் அதற்கு இல்லை.

மலைப்பக்கங்களிலேதான் தேயிலைச்செடி செழிப்பாக வளரும். அச்செடிகளை ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் நாலடி இடைவெளி இருக்கும்படி வரிசையாக நடுவார்கள். மேலேயுள்ள கிளைகளைக்கழித்த சில வாரங்களுக்குப் பிறகு அது செவ்வையாகத் தளிர்த்து நன்றாக அரும்புவிடும். வருஷத்துக்கு மூன்று முறை செடிகளைக் கழிப்பார்கள். செடிகளும் மூன்றுதரம் பலன் கொடுக்கும். இளந்தளிர்களை ஜாக்கிரதையாகப் பறித்துக் கூடைகளில் எடுத்துக்கொண்டு போவார்கள். குணத்தில் அரும்புகள் முதன்மையானவை. தளிர் இரண்டாவது. பெரிய இலை மூன்றாவது. எல்லாம் ஒரே செடியில் உண்டானாலும் ஒவ்வொன்றின் குணம் வெவ்வேறாக இருக்கிறது. அந்த மூன்று இனங்களையும் கலக்கா

மல் அரும்புகளை வேருகவும் சிறிய தளிர்களை வேருகவும் பெரிய இலைகளை வேருகவும் பிரித்துவைத்து எப்போதும் தீ எரிந்துகொண்டிருக்கும் இடத்தில் அவற்றை உலர்த்து வார்கள். சிலவேளைகளில் அவற்றை நெருப்பின்மேல் வாட்டுவதும் உண்டு. முதலில் தேயிலை மஞ்சள் நிறமாகிப் பிறகு பழுத்துக் கடைசியில் கறுப்பாக மாறும். நன்ருக உலர்ந்த பிறகு இலைகள் சுருட்டிக்கொள்ளும். தேயிலையில் சிறிது ஒடிந்துபோனாலும் அந்தத் தூளையும் வீணுக்காமல் எடுத்து வைத்து விற்றுவிடுவதுண்டு. நன்ருக உலர்ந்துபோன பிறகு தேயிலைக்குச் செய்யவேண்டிய பக்குவம் ஒன்றுமில்லை; பானத்துக்கு அதை உபயோகப்படுத்தலாம். அயலிடங்களுக்குத் தேயிலையை அனுப்பி வருவதோடு இந்தியாவிலும் பல இடங்களில் விற்கிருர்கள்.

சிறிது அளவு தேயிலையை ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் வேண்டியஅளவு வெந்நீரை ஊற்றி ஐந்து நிமிஷம் வரையில் ஊறவைத்திருந்து பிறகு ஒரு துணியால் வடிக்கட்டிஞல் அதுவே தேயிலைக் கஷாயமாகும். அது பழுப்பு நிறமாகவும் மணமுள்ளதாகவும் இருக்கும். கொஞ்சம் பாலும் சர்க்கரையும் கலந்து சாப்பிட்டால் மதுரமாக இருக்கும். துணியில் தங்கிய சக்கை ஒன்றுக்கும் பயன்படாது. அதஞல் அதை எறிந்துவிடுவார்கள். சிலர் தேயிலையைத் தண்ணீரில் போட்டே காய்ச்சுவதுண்டு. அவ்வாறு செய்தால் கஷாயம் கெட்டுப்போம். வெந்நீரில் தேயிலை அதிகநேரம் இருந்தாலும் கஷாயத்தின் குணம் கெட்டுப்போம்.

தேயிலைக் கஷாயம் உடம்புக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். தேகத்தைக் குளிரச்செய்து ஊக்கத்தை உண்டு பண்ணும். களைப்படைந்த ஒருவனுக்கு தேகவன்மையும் புத்தித்தெளிவும் அதஞல் உண்டாகின்றன. வெறியும் மதிமயக்கமும் தேயிலைக்கஷாயத்திஞல் ஒருபொழுதும் ஏற்படமாட்டா.

தேயிலைக் கஷாயத்துக்கு இலையும் காபிக் கஷாயத்துக்குக் கொட்டையும் ஏற்றவை. காபிச்செடியின் இலைகளை எறிந்துவிட்டு அதன் கொட்டைகளைமட்டும் உபயோகிக்கிருேம். காபிச்செடியிலுள்ள பழங்களில் கொட்டைகள் உள்

ளன. ஒவ்வொரு பழத்திலும் இரண்டு கொட்டைகள் இருக்கும். காபிப்பழம் பார்வைக்கு ஆலம்பழத்தைப்போல் இருப்பதன்றி அதைப்போலவே கிளைகளிலேயே உண்டாகிறது.



காபிக்கஷாயம் எல்லாராலும் விரும்பப்படுகிறது. அதை வேண்டாமென்று சொல்லுபவர்கள் இக்காலத்தில் மிகச் சிலர். சில ஜனங்கள் ஒருநாளில் மூன்று நான்குமுறை கூட அக்கஷாயத்தை அருந்திவருகிறார்கள். ஐரோப்பியர்களுக்கு அது மிகவும் முக்கியமான ஆகாரம். அது நல்ல வாசனையும் ருசியுமுள்ளது; களைப்பைத் தீர்த்து அயர்ச்சியைப் போக்கி ஊக்கத்தைக் கொடுக்கும். இராத்திரி முழுவதும் தூங்காமலிருக்கவேண்டுமானால் சிலர் காபிப்பொடியை அதிகமாய்ச் சேர்த்துக் கஷாயஞ்செய்து சாப்பிடுவார்கள்.

காபிக்கொட்டையானது பசுமைநிறமுள்ள சிறுவித்து. எல்லாக் கடைகளிலும் அது கிடைக்கும். கொட்டையைப் பொன்போல் வறுத்து நல்லவாசனை வந்ததும் பொடியாக்கி வைத்துக்கொண்டு அதிற் சிறிதளவு எடுத்து ஒரு பாத்திரத்திற் போட்டு வெந்நீரை அதில் ஊற்றுவார்கள். ஐந்து நிமிஷமானபிறகு மெல்லிய வஸ்திரத்தினால் வடிகட்டினால் அது

நல்ல கஷாயமாகும். சிலர் கஷாயத்தோடு வேறொன்றையும் கலவாமல் அப்படியே சாப்பிடுகின்றனர்; அநேகர் பாலும் சர்க்கரையும் கலந்துதான் சாப்பிடுவார்கள். காபிக்கஷாயத்தை வடிக்கட்டுவதற்கு, சிறு துவாரங்களுள்ள ஒரு பாத்திரம் கடையில் விற்கப்படுகிறது. அதனாலும் வடிக்கட்டலாம்.

காபிச்செடியானது அரேபியாவிலிருந்து பல வருஷங்களுக்குமுன் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டு மைசூரிலுள்ள சில மலைகளில் முதலில் பயிராக்கப்பட்டது. இப்போது குடகு, நீலகிரி, சேர்வராயமலை, பழனிமலை முதலிய இடங்களில் காபித்தோட்டங்கள் அதிகமாக உள்ளன. ஒவ்வொரு தோட்டத்திலும் ஆயிரக்கணக்கான செடிகள் உண்டு.

நுனியை வெட்டிவிடாமல் காபிச்செடியை வளரவிட்டால் இருபதடி உயரம்வரையில் அது வளரும்; ஆனால் நன்றாகக் காய்க்காது; அதனால் அதனை உயரமாக வளரவொட்டாமல் மூன்று அல்லது நான்கடி உயரம் வளர்ந்தவுடனே அதன் நுனியைத் தறித்துவிடுவார்கள்; பிறகு அந்தச் செடி நாலுபக்கங்களிலும் கிளைகள்விட்டுத் தழைத்துக் குலைகுலையாகக் காய்க்கும்.

நிலத்தில் பாத்திகள்கட்டி விதைவிதைத்து அதன்மேல் வெயில் படாதபடி ஒரு பாயினால் மூடி வேண்டியஅளவு தண்ணீர் இறைத்துவருவார்கள். பிறகு முளைகள் கிளம்பி ஓரடி உயரம்வரையில் வளர்ந்தவுடன் அந்த நாற்றுக்களையெல்லாம் பெயர்த்தெடுத்து அவ்வாறு அடிக்கு ஒவ்வொன்றாக நடுவார்கள். நட்டபிறகு வேண்டிய எருக்களைப் போடுவது வழக்கம். முதல் இரண்டு வருஷங்கள்வரையில் செடியில் நல்ல காய்ப்பு இராது. மூன்றாவது வருஷம்முதல் அதிகமாகக் காய்க்க ஆரம்பித்து முப்பது வருஷம்வரையில் அப்படியே காய்த்துக்கொண்டிருக்கும். வருஷந்தோறும் செடிகளின் நுனிகளைத் தறித்தும் களைகள் பிடுங்கியும் ஜாக்கிரதையாகப் பார்த்துவரவேண்டும். செடிகளுக்கு நிழல் தரும்படி காபித்தோட்டங்களில் அத்தி, பலாமுதலிய மரங்களையும் பயிராக்குவதுண்டு. அவைகளைச் சுற்றிலும் நிலம் கெட்டியாக இராதபடி புழுதியாக்கி வேர்களுக்குள் காற்று

எளிதில் புகும்படி செய்வார்கள். சாணம், எலும்புத்தூள் முதலியவை காபிச்செடிக்கு நல்ல எருவாகும்.

முதலில் ஒரு மழை பெய்தவுடன் சித்திரை வைகாசி மாதங்களில் காபிச்செடிகள் அரும்புவிட்டுப் பூக்க ஆரம்பிக்கின்றன. காபிப்பூ மல்லிகை மலர்போல் வெண்மையாகவும் ஒருவகையான மணமுள்ளதாகவும் இருக்கும். மலர்ந்த மூன்று தினங்களுக்குப் பிறகு பூக்கள் உதிர்ந்து பிஞ்சுகள் விடுகின்றன; பிஞ்சுகள் வரவர முற்றிக் கார்த்திகை மார்கழி மாதங்களில் பழுத்துப் பறிப்பதற்கு ஏற்றபடியாகின்றன. நன்றாகப் பக்குவமானவுடனே பழங்களைப் பறித்து ஒருவகையான யந்திரத்தினால் தோலைப்போக்கி, கொட்டைகளை வேறாக எடுப்பார்கள். பிறகு அவைகளை உலர்த்திக் கோணிகளில் போட்டுத் தைத்து அயலிடங்களுக்கு அனுப்புவார்கள்; இந்தியாவிலும் பிறதேசங்களிலும் காபிக்கொட்டை நன்றாகச் செலவாகிறது. செவ்வையாகப் பயிரிட்டால் காபித்தோட்டம் வைப்பதால் ஒருவனுக்கு விசேஷமான லாபங்கிடைக்கும்.

ஏழைகளும் பணக்காரர்களும், அவசியமுள்ளவர்களும் அவசியமில்லாதவர்களும், குழந்தைகளும் வயோதிகர்களும், ஒருவர் பாக்கியில்லாமல் இப்போது காபிக்கஷாயத்தை அருந்த ஆரம்பித்துவிட்டபடியால் நல்ல பாலும், தயிரும், நெய்யும் கிடைப்பது அருமையாய்விட்டது.

**இலக்கணம்.**—அகப்படாத இடம் இல்லை: அகப்படாத என்பது என்ன சொல்? கழிப்பார்கள்: இது என்ன வினைமுற்று? எப்படி அறியலாம்? உலர்ந்த, ஒடிந்து, செய்ய, அனுப்பி, விற்கிறார்கள், ஊற்றி: இவை என்னகாலத்தைக் காட்டுகின்றன? தேகவன்மையும் புத்தித்தெளிவும் அதனால் உண்டாகின்றன: இவ்வாக்கியத்தில் எழுவாய் பயனிலைகள் யாவை?

**குறிப்பு.**—அருந்தி-சாப்பிட்டு; பருகாமல்-குடிக்காமல், உற்பத்தியாயிற்று-உண்டாயிற்று; மணம்-வாசனை; கழிப்பார்கள் - வெட்டுவார்கள்; இனம்-வகை; ஆரோக்கியம்-சௌக்கியம்; ஊக்கம்-சுறுசுறுப்பு; தறித்து-வெட்டி.

# 17. வித்தையாடிகள்.

நமது தேசத்தில் சில வருஷங்களுக்கு முன்வரையில் மிகவும் அபூர்வமான வித்தைகளில் பயின்றவர்கள் இருந்தார்கள். இளமை முதலாகச் செய்துவந்த பழக்கத்தினாலோ அல்லது ஏதேனும் ஒரு தேவதையை உபாசித்து வந்தமையாலோ அவர்கள் செய்யும் வித்தை மிகவும் ஆச்சரியமாகவும் விநோதமாகவும் இருக்கும். செப்பிடுவித்தைக் காரர்களென்றும் கம்பங் கூத்தாடிகளென்றும் கண்கட்டு வித்தைக் காரர்களென்றும் அவர்களில் பலவகையார் உண்டு. அவர்கள் செய்யும் காரியத்தைப் பார்த்தால் ஏதோ தெய்வபலத்தால் அது முடியவேண்டுமேயன்றி மனிதர்களுடைய சக்தியால் சிறிதும் சாத்தியமாகாதென்று தோற்றும். சிலர் கயிற்றின்மேல் நடப்பார்கள். சிலர் மணலைச் சர்க்கரையாகவும் கயிற்றைப் பாம்பாகவும் செய்வார்கள். சிலர் கத்திகளை வைத்துக்கொண்டு பார்ப்பவர்கள் பயப்படும்படி விளையாடுவார்கள். சிலர் சரீரத்தைப் பலவிதமாகவும் வளைத்து விநோதமாக விளையாடுவார்கள். பலரும் பார்த்துக்கொண்டிருக்கிற வஸ்துக்கள் இன்ன இடம் போயினவென்று தெரியாமல் சிலர் செய்துவிடுவார்கள். இல்லாதவற்றைச் சிலர் உண்டுபண்ணுவார்கள். அவர்கள் ஒரே இடத்தில் நிலைத்திராமல் ஊரூராய்த் திரிந்து பணம் சம்பாதித்து ஜீவனம் செய்வார்கள். வரவர இப்பேர்ப்பட்ட வித்தைகள் குறைந்துகொண்டே வருகின்றன. ஆனாலும் சிற்சில இடங்களில் சில அருமையான வித்தையாடிகள் இருந்துவருகிறார்கள்.

செங்கற்பட்டு ஜில்லாவில் குன்றத்தூர் என்ற ஒரு கிராமம் உண்டு. அங்கே ஒருநாள் சாயங்காலம் ஒருவன் மகுடி என்னும் வாத்தியத்தை ஊதிக்கொண்டும் அவனுக்குப் பின்னே ஒரு சிறுவன் ஒரு முரசையடித்துக்கொண்டும் இருவர்களுக்கும் பின்னால் ஒரு ஸ்திரீயும் வேறொரு சிறுவனும் பல சாமான்களைத் தூக்கிக்கொண்டும் வந்தார்கள். அவர்கள் வித்தையாடிகள். வாத்தியத்தின் சப்தம் காதில் விழுந்தவுடனே அங்கங்கே வெவ்வேறு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த ஜனங்கள் தங்கள் தங்கள் வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு வித்தையாடிகளிருந்த இடத்துக்கு வந்து கூடி-

ஞர்கள். எப்போதும் வேடிக்கை பார்ப்பதில் பிரியமுள்ள சிறுவர்கள் எல்லாருக்கும் முன்னேவந்து உட்கார்ந்தார்கள். தெருவில் ஏதோ வேடிக்கை நடக்கப்போகிறதென்று தெரிந்து கொண்டு ஸ்திரீகளும் ஒருபக்கத்தில் வந்து ஒதுங்கி நின்றார் கள். நிற்க இடமில்லாமல் சிலர் கூரைகளின்மேலும் சுவர் களின்மேலும் உட்கார்ந்துகொண்டனர்.

பிறகு முக்கியமான வித்தையாடி அங்கேயுள்ள எல்லாரை யும் பார்த்து மிகவும் வணக்கமாக நின்று முதலில் கும்பிடு போட்டான். பிறகு தான் சில வித்தைகள் செய்யப்போகிறதா கவும் அவற்றைப் பார்த்துச் சந்தோஷமடைந்து தனக்குத் தக்க வெகுமதி அளிக்கவேண்டுமென்றும் எல்லோரையும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டு சில வித்தைகள் செய்யத் தொடங்கினன்.

முதலில் ஜனங்கள் எல்லாரையும் ஒதுங்கி நிற்கும்படி செய்து தான் கொண்டுவந்திருந்த சாமான்களையெல்லாம் ஒவ் வொன்றாகப் பரப்பிவைத்தான். அவைகளை அவன் எடுத்து வைத்த மாதிரியே பார்ப்பதற்கு ஒரு விநோதமாயிருந்தது. அவன் பின்னல் வந்த ஸ்திரீ அவன் மனைவி; சிறுவர்கள் இருவரும் அவன் குமாரர்கள். முரச வாத்தியத்தை ஸ்திரீ அடித்துக்கொண்டிருந்தாள்; வித்தையாடி தன் பிள்ளைகள் இரு வரையும் தன்னிடம் அழைத்து அவர்களிடம் ஏதோ சொன் ஞன். உடனே அவர்கள் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு பார்ப்பவர்கள் அதிசயிக்கும்படி பல அபூர்வமான வேடிக்கை கள் செய்தார்கள். ஒருவன் கையைப் பூமியில் ஊன்றிக் காலை உயர்த்திக்கொண்டு நடந்துசென்றான். பிறகு அவன் தோளின்மேல் மற்றவன் ஏறிநின்றான். அப்பால் ஒருவன் தன் கையையும் காலையும் சேர்த்துவைத்துக்கொண்டு வில் லைப்போல் வளைந்து நின்றான். அப்போது மற்றவன் அவன் மார்பில் ஏறி நின்றுகொண்டு சில வேடிக்கைகள் செய்தான். அங்கே இருந்தவர்களெல்லாரும் கண்ணைக் கொட்டாமலும் திறந்தவாயை மூடாமலும் மிகுந்த ஆச்சரியத்தோடு பார்த் துக்கொண்டிருந்தார்கள்.

பிறகு அந்த வித்தையாடி மிகவும் அசாத்தியமான ஒரு வித்தை செய்யப்போவதாக எல்லாரையும் நோக்கிச் சொல்லி



விட்டுக் கீழே இருந்த கத்தியை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தான். அந்தக் கத்தி ஒன்றரைமுழ நீளம் இருக்கும். பிறகு அவன் மேலே நிமிர்ந்து பார்த்துக்கொண்டு கத்தியின் முனையை வாய்க்குள் விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக முழுவதையும் உள்ளே செலுத்திவிட்டான். ஐந்து நிமிஷம்வரையில் அப்படியே வைத்துக்கொண்டிருந்து பிறகு கத்தியை வெளியே எடுத்தான். அதைப்பார்த்த சிலர் பயந்துபோய்க் கண்ணை மூடிக்கொண்டார்கள்.

உடனே வேடிக்கை பார்க்கவந்த சிறுவர்களில் ஒருவனை அழைத்து ஒரு பந்தை அவன் கையில் கொடுத்து ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டிருக்கும்படி வித்தையாடி சொன்னான். சிறுவன் பந்தை வாங்கினவுடன் அது இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது; வித்தையாடி பையன் கையில் பந்தைக் கொடுத்தபோது எல்லாரும் கவனித்துக்கொண்டுதான் இருந்தார்கள். ஏதோ வேறு வேலையாயிருப்பதுபோலிருந்துவிட்டுப் பையனை 'பந்து எங்கே?' என்று வித்தை

யாடி கேட்டான். அவன் கையை விரித்துக்கொண்டு அழ ஆரம்பித்தான். 'அழாதே, சும்மா இரு. நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன். நான் கொடுத்த பந்தை ஒரு வேளை நீ விழுங்கியிருப்பாய். உன் வாயிலிருந்தே அந்தப் பந்தை நான் வரவழைக்கிறேன் பார்' என்று சொல்லி எல்லோருக்கும் வித்தைபாடி தன் கையை விரித்துக் காட்டினான். அப்போது அவன் கையில் ஒன்றுமில்லை. பிறகு சிறுவனுடைய வாயில் கையைவைத்து எடுத்தான். அப்போது அவன் கையில் பந்து இருந்தது. எல்லோரும் 'என்ன ஆச்சரியம் என்ன ஆச்சரியம்!' என்று சொன்னார்கள்.


பிறகு அவன் ஒரு சிறு கூடையில் தெருவிலிருந்த மணலைப்போட்டு ஒரு வஸ்திரத்தை மூடினான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் அதை எடுத்தபோது கூடையில் சர்க்கரையும், புஷ்பமும், கடலையும் நிறைந்திருந்தன. சர்க்கரையையும், கடலையையும் சிறுவர்களுக்கெல்லாம் கொடுத்தான். அவர்கள் தின்றுவிட்டு மிகவும் களிகூர்ந்தார்கள்.



அந்த வித்தை முடிந்தவுடன் தன் பையிலிருந்து அவன் ஒரு மாங்கொட்டையை எடுத்து எல்லோருக்கும் காட்டி

னான். பிறகு அதை நிலத்தில் புதைத்துக் கொஞ்சம் தண்ணீர்விட்டு அதன்மேல் ஒருகூடையை மூடினான். இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் கூடையைத் திறந்தான். மாங்கொட்டையிலிருந்து முளைகிளம்பி ஒரு சிறிய மாஞ்செடி இலைகளுடன் வளர்ந்திருந்ததை எல்லாரும் கண்டு வியப்படைந்தார்கள். மறுபடியும் அந்தச் செடிக்குத் தண்ணீர் வார்த்துக் கூடையால் மூடிவிட்டுச் சிறிதுநேரம் சென்றபிறகு திறந்தான். அப்போது செடி கொஞ்சம் உயரமாக வளர்ந்திருந்தது. அந்தமாதிரியே அவன் பிறகு இரண்டு மூன்றுதடவை ஜலம்விட்டுக் கூடையை மூடிமூடித் திறந்தான். அப்போது ஜனங்களெல்லாரும் அந்தச் செடியில் பூவையும் ஒரு மாங்காயையும் கண்டு அதிசயப்பட்டார்கள்.

கடைசியில் மிகவும் ஆச்சரியமான ஒரு வித்தைசெய்து காட்டினான். தன் பெண்சாதியை அவன் அழைத்து அவளுடைய கையையும் காலையும் கயிற்றால் பலமாகக் கட்டினான். அவளால் நகர முடியவில்லை. பிறகு அவளை ஒரு பெரிய




மூங்கில் பெட்டிக்குள் தூக்கிப்போட்டு ஒரு வஸ்திரத்தால் பெட்டியை மூடினான். சில நிமிஷங்களுக்குப் பிறகு அவளைப் பெயர்சொல்லி அழைத்தான். அவள் பதில் ஒன்றும்

சொல்லவில்லை. பெட்டியைப் பிறகு காலால் உதைத்தான்; தடியால் அடித்தான்; ஒன்றுக்கும் பதில் இல்லை; மறுபடி ஒரு பெரிய கத்தியால் பெட்டியின் பல இடங்களிலும் குத்தினான்; அப்போதும் அவளிடமிருந்து பதில் வரவில்லை. எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கையில் அவள் தெருக்கோடியிலிருந்து ஒருவிதமான வருத்தமும் இல்லாமல் வந்து கொண்டிருந்தாள். அதைப்பார்த்த எல்லாரும் "எல்லா வித்தைகளிலும் இதுதான் சிறந்தது" என்று வித்தையாடியை மிகவும் கொண்டாடினார்கள்.

அங்கிருந்தவர்கள் தலைக்கு அரை அணா முதல் இரண்டணா வரையில் தங்கள் தங்களுக்குத் தோன்றியபடி அவனுக்குக் கொடுத்தார்கள்; சிலர் அரிசி கொடுத்தார்கள். ஒருவன் ஒரு பழைய சரிகை வேஷ்டியையும் ஒரு பழம்புடைவையையும் கொண்டுவந்து அவனிடம் சேர்ப்பித்தான். மொத்தத்தில் அவனுக்கு அன்றைத்தினம் பத்து ரூபா கிடைத்திருக்கும். பிறகு அவன் தன் சாமான்களையெல்லாம் கட்டி எடுத்துக்கொண்டு எல்லாருக்கும் வந்தனம் செய்துவிட்டுத் தன் ஜனங்களுடன் வேறோர் ஊருக்குப் போனான். சிறுவர்கள் "அவன் மறுபடியும் எப்போது வந்து வேடிக்கை காட்டுவானோ?" என்று எண்ணிக்கொண்டு தங்கள் தங்கள் வீடு போய்ச் சேர்ந்தார்கள். ஊரார் எல்லாரும் சில தினங்கள் வரையில் அவன் ஞாபகமாகவே இருந்தார்கள்.

**இலக்கணம்.**—ஒருவாக்கியத்தில் எழுவாய் செய்யும் தொழிலை ஏற்கும் பொருள் செயப்படு பொருள். அவர்கள் வேடிக்கை செய்தார்கள். இவ்வாக்கியத்தில் அவர்கள் என்பது எழுவாய். எழுவாயின் தொழில் செய்தல். எதைச் செய்தார்கள் என்றால் வேடிக்கை செய்தார்கள் என்கிறோம். தொழிலை வேடிக்கை ஏற்றுக்கொள்ளுகிறது. எதை, யாரை, எவற்றை என்று வினைமுற்றுக்கு வைத்துக்கேட்டால் மறுமொழியே செயப்படுபொருளாம். ஒரு வாக்கியத்தில் செயப்படுபொருளும் ஓர் உறுப்பாகிறது.

**குறிப்பு.**—பயின்றவர்கள் - பழகியவர்கள்; வித்தையாடி - வித்தையாடுபவன்; முரசம்—தோலினாற்செய்த ஒருவகை வாத்தியம்; களிகூர்ந்தார்கள்-சந்தோஷமடைந்தார்கள்; வியப்பு-ஆச்சரியம்; அதிசயப்பட்டார்கள் - ஆச்சரியப்பட்டார்கள்; கொண்டாடினார்கள்-புகழ்ந்தார்கள்.



## 18. சர்க்கரை.

சர்க்கரையானது எல்லா ஜனங்களுக்கும் தெரிந்த வஸ்து. குழந்தைகளுக்கு அது மிகவும் பிரியமானது. பார்வைக்கு அது பொடியாக இருக்கும். அதில், நாட்டுச் சர்க்கரை யென்றும், பழுப்புச் சர்க்கரை யென்றும், மணல் சர்க்கரை யென்றும், குழைவு சீனியென்றும், வெள்ளைச் சர்க்கரை யென்றும் பலவகையுண்டு. எல்லா வகைகளும் கண்ணுக்கு அழகாகவும், நாவுக்கு இனிமையாகவும் உள்ளன.

உஷ்ண தேசங்களில் பயிராகிற கரும்பின் சாற்றிலிருந்தும், ஐரோப்பாவில் உண்டாகிற (Beet) பீட் என்னும் ஒரு வகைக் கிழங்கிலிருந்தும் சர்க்கரை செய்யப்படுகிறது. தண்ணீரில் சர்க்கரையைக் கலந்தால் எப்படி அது கண்ணுக்குப் புலப்படுவதில்லையோ அப்படியே கரும்பஞ்சாற்றில் உள்ள சர்க்கரையும் நம் பார்வைக்குத் தெரிவதில்லை. அமெரிகாவிலும் இந்தியாவிலும் கரும்பஞ்சாற்றிலிருந்தே சர்க்கரை செய்கிறார்கள். மேலே படத்திற் காட்டியிருப்பது அமெரிகா கண்டத்திலுள்ள ஒரு கரும்புத்தோட்டம். அதில் பல ஜனங்கள் கரும்புகளை வெட்டிச்சேர்ப்பது தெரியும்.

MAHAMAHOPADHYAYA

கரும்புகளில் செங்கரும்பென்றும், வெண்கரும்பென்றும், ரஸ்தாளிக்கரும்பென்றும், நாணற்கரும்பென்றும் பல வகைகள் உண்டு. சில கருப்பங் கழிகள் பருமனாகவும், சில மென்மையாகவும், சில நீளமாகவும், சில குட்டையாக



வும் இருக்கும். இந்தியாவிலும் சைனாவிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே கரும்பு இருந்ததாகத் தெரிகிறது. முதன் முதலில் இந்தியாவிலிருந்தே அது பிற தேசங்களுக்குக் கொண்டுபோகப்பட்டது.

மற்றச் செடிகளைப்போல் கரும்பு விதையிலிருந்து உண்டாவதில்லை. கருப்பங்கழியைத் துண்டுதுண்டாக நறுக்கி, அத்துண்டுகளைப் பூமியில் நட்டுப் பயிராக்குவார்கள். கரும்பு பூக்கிறவரையில் அதை வெட்டாமல் விட்டுவைப்பதில்லை. நட்ட ஒருவருஷத்திற்கெல்லாம் அது எட்டடிமுதல் பத்தடிவரையில் வளரும்; சில கரும்புகள் இருபதடிவரையில் வளருவதும் உண்டு. கரும்பின் நுனியில் இருப்பது கொழுந்தாடை. அதன் தழை பச்சை நிறமானது. ஒவ்வொரு கரும்பிலும் இடையிடையே கணுக்கள் உண்டு. கரும்பின் நுனியைக்காட்டிலும் அடிப்பக்கம் அதிக ருசி

புள்ளது. கனுப்பக்கம் சிறிது உப்பு சம்பந்தமாய் இருக்கும். பலர் கரும்பைப் பாக்குவெட்டியினாலாவது கத்தியினாலாவது வெட்டி, சிறுசிறு துண்டங்களாக்கி அவற்றை நன்றாக மென்று சாற்றை விழுங்கி, சக்கையை உமிழ்ந்து விடுவார்கள். பூக்கும் காலமே கரும்பை வெட்டுவதற்கு ஏற்ற சமயம்.

கொல்லைகளிலிருந்து கரும்பை வெட்டியபிறகு பல துண்டங்களாக அவற்றை நறுக்குவார்கள்; பிறகு அத்துண்டுகளையெல்லாம் கரும்பாலைக்குக் கொண்டுபோய் அதிலுள்ள பெரிய உருளைகளுக்கு இடையே கொடுப்பார்கள். அப்போது அதன் சாறு கீழே உள்ள ஒரு பாத்திரத்தில் வந்து விழும். அப்பால் அந்தச் சாற்றை வடிக்கட்டி, பெரிய கொப்பரைகளில் போட்டுக் காய்ச்சுவார்கள். காய்ச்சும்போது கொஞ்சம் சுண்ணாம்புநீற்றைத் தெளிக்க அழுக்குகளெல்லாம் நுரையாக மேலே வரும். அப்பொழுதப்பொழுது அவ்வழுக்குகளை வெளியே எடுத்துப்போடுவார்கள். கொப்பரையிலுள்ள பாகை நன்றாகச் சுண்டக் காய்ச்சிப் பெரிய மரத்தொட்டிகளில் ஆறவைப்பார்கள்; ஆறினபிறகு அதுவே வெல்லக்கட்டியாகும். அந்த வெல்லப்பாகை ஆறவிடாமல் பின்னும் செவ்வையாகக் காய்ச்சி ஆறச்செய்தால் அதுவே பழுப்புச்சர்க்கரையாக ஆகும். அதையும் மறுபடி காய்ச்சினால் வெள்ளைச் சர்க்கரையாக மாறும்; பழுப்புச்சர்க்கரையைக்காட்டிலும் வெள்ளைச் சர்க்கரை அதிக விலையுள்ளது. சர்க்கரையிலிருந்தே கற்கண்டு செய்யப்படுகிறது.

வட அமெரிகாவில் சர்க்கரை மரம் என்ற ஒருவகை மரம் எண்பது அடிமுதல் நூறு அடிவரையில் வளருகிறது; அதன் சாறு மிகவும் தித்திப்புள்ளது. அதைக் காய்ச்சி அதிலிருந்து சர்க்கரை எடுக்கிறார்கள். அந்தச் சர்க்கரையும் கருப்பஞ்சர்க்கரையைப்போலவே இருக்கும். சர்க்கரை மரங்களின் அடிப்பாகத்தில் பல இடங்களில் பால் பெருகும்படி வெட்டி அந்த இடங்களில் சிறுசிறு பாத்திரங்களை வைப்பார்கள். அவற்றில் பால் வடிந்துகொண்டிருக்கும். தினம் இரண்டு மூன்று தடவை சிறு பாத்திரங்களிலுள்ள பாலை



யெல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒரு பெரிய பாத்திரத்தில் ஊற்றிப் பிறகு நன்றாகக் காய்ச்சி அதிலிருந்து சர்க்கரையை எடுப்பார்கள். சில வேலைக்காரர்கள் சர்க்கரை காய்ச்சும் விதத்தை மேலே உள்ள படம் தெரிவிக்கிறது. ஒரு மாதகாலத்தில் ஒருவன் ஒரு பாரம் சர்க்கரை காய்ச்சி எடுப்பான்.

இந்தியாவிலே பனஞ்சாற்றிலிருந்தும் வெல்லமும் கற்கண்டும் செய்கிறார்கள்; அவற்றிற்கு முறையே பனைவெல்லமென்றும், பனங்கற்கண்டென்றும் பெயர். அவை சரீரத்திற்கு நல்லவையென்று பலர் உபயோகிப்பதுண்டு; சில இடங்களில் பனைவெல்லம் மருந்தாகவும் உபயோகிக்கப்படுகிறது.

ஐரோப்பாவிலுள்ள பீட் கிழங்குகளை ஆலையிலிட்டுச் சாறு பிழிவதில்லை; அவற்றை, சிறுசிறு துண்டுகளாக நறுக்கி ஜலத்தில் ஊறப்போட்டு நன்றாக ஊறினபிறகு ஜலத்தைக் காய்ச்சி அதிலிருந்து சர்க்கரை எடுக்கிறார்கள்.

அளவுடன் உபயோகித்துவந்தால் சர்க்கரை மிகவும் ஆரோக்கியமானதுதான். அதிகமாக உட்கொண்டால் பிணியை விளைவிக்கும். சர்க்கரையினால் தேகம் புஷ்டியாகும்.

இந்தியாவில் பலர் சர்க்கரை கலந்த பண்டங்களை அதிகமாகத் தின்பார்கள். சர்க்கரையை அதிகமாகத் தின்னும்படி குழந்தைகளை விடலாகாது.

இலக்கணம்.—ஒருவன் சர்க்கரை காய்ச்சி எடுப்பான்: இதில் செயப்படுபொருள் யாது? சர்க்கரை பிணியை விளைவிக்கும்: இதிலுள்ள எழுவாய் பயனிலை செயப்படுபொருள்கள் யாவை? அவை சரீரத்துக்கு நல்லது: இதில் என்ன பிழை? ஊறினபிறகு: ஊறினபிறகு என்று சொன்னால் என்ன?

குறிப்பு.—வஸ்து-பொருள்; நா-நாக்கு; இனிமை-ருசி; சாறு-ரஸம்; ஆண்டு-வருஷம்; கொப்பரை-பெரியபாத்திரம்.

## 19. நவதானியக்கடை.

திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் அரியலூர் என்ற சிறு நகரமொன்றுண்டு; அங்கே இருக்கும் பள்ளிக்கூடத்தில் முத்துசாமி என்ற பெயருள்ள மாணாக்கன் நான்காவது வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தான். அவனுக்குப் புஸ்தகத்தை எடுத்துப் படிப்பதென்றால் மனம் வராது; மற்றச் சிறுவர்கள் பாடங்களை வாசிக்கும்போது அவன்மட்டும் வயல் வெளிகளுக்கும் தோட்டங்களுக்கும் சென்று பட்சிகள் பாடுவதைக் கேட்பதிலும், அவற்றின் கூடுகளை ஆராய்வதிலும், புஷ்பங்களைப் பறித்து அவற்றின் வர்ணங்களையும் அழகையும் பார்த்து ஆனந்திப்பதிலும் பொழுது போக்குவான்.

வெள்ளிக்கிழமை மாலையில் பள்ளிக்கூடத்தில் ஐந்து மணியடித்ததும், அடுத்த இரண்டு தினங்களும் விடுமுறையென்று மாணாக்கர்களெல்லாரும் மிகுந்த குதூகலத்துடன் தங்கள் தங்கள் புஸ்தகங்களைக் கட்டி எடுத்துக்கொண்டு வீட்டுக்குப்போக ஆரம்பித்தார்கள். சிலர் பந்தடிக்கவும், வேறு விளையாட்டுக்கள் ஆடவும் பள்ளிக்கூடத் தோட்டத்துக்கு ஓடினார்கள். சிலர் வீடுகளுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள்.

முத்துசாமிமட்டும் வீட்டுக்குப்போகாமல் பள்ளிக்கூடத்துத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். உபாத்தியா

யர் அவ்விடம் வருவதைக்கண்டு அவன் எழுந்து, "ஐயா, போனவாரத்து விடுமுறைநாட்களில் எங்களை வயல்களுக்கெல்லாம் அழைத்துக்கொண்டுபோய்ப் பயிர்களைக் காண்பித்தீர்கள். நாங்கள் எல்லாவற்றையும் பார்த்து ஆனந்தமடைந்தோம். சமயம் நேரும்போது எங்களைக் கடைவீதிக்கு அழைத்துக்கொண்டுபோய்த் தானியங்களைப்பற்றிப் போதிப்பதாகச் சொன்னீர்களே. நாளைத்தினம் விடுமுறையாதலால் அவ்வாறு செய்யலாமே" என்று மிக்க மரியாதையோடு சொன்னான்.

உபாத்தியாயர் மிகவும் சந்தோஷமடைந்து "அப்படியே ஆகட்டும். நாளைத்தினம் காலையில் 7 மணிக்கு இவ்விடம் வந்திருக்கும்படி எல்லாப்பிள்ளைகளுக்கும் சொல்லிவிடு. நீயும் இவ்விடத்திற்கு வந்திரு; எல்லாரையும் நான் கடைக்கு அழைத்துக்கொண்டு போகிறேன்" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குப்போனார். முத்துசாமி மற்ற மாணாக்கர்களிடம் அந்த விஷயத்தைத் தெரிவித்து வீட்டுக்குப்போய் எப்போது பொழுது விடியப்போகிறது என்ற ஞாபகமாகவேயிருந்தான்.

மறுநாட் காலையில் எல்லாப் பிள்ளைகளும் குறிப்பிட்டபடியே பள்ளிக்கூடத்துக்கு வந்திருந்தார்கள். சரியாய் ஏழு மணிக்கு உபாத்தியாயரும் வந்து மாணாக்கர்களைக் கடைத்தெருவுக்கு அழைத்துப்போனார். அப்போது வியாபாரிகள் கடைகளைத்திறந்து சாமான்களையெல்லாம் கூடைகளிலும் தட்டுக்களிலும் வெளியே எடுத்துவைத்துத் தூசிகளைப் போக்கிக் கொண்டிருந்தார்கள். சுற்றுப் பக்கத்திலுள்ள கிராமங்களிலிருந்து குடியானவர்கள் தானிய மூட்டைகளைத் தூக்கிவந்து பூமியில் அவிழ்த்துக் கொட்டினார்கள்.


ஆசிரியர் ஒரு கூடையிலிருந்து கைநிறைய ஏதோ ஒரு வித தானியத்தை எடுத்து மாணாக்கர்களுக்குக் காட்டி "இதன் பெயர் என்ன?" என்று வினவினார். உடனே முத்துசாமி சோளமென்று சொன்னான்.

உபாத்தியாயர் "தானியங்களில் இரண்டு வகைகள் உண்டு: சில புன்செய் நிலங்களிலும் மற்றவை நன்செய்களிலும் விளையும். சோளம் புன்செய் தானியம். நம் தேசத்தில் ஜனங்கள்



அரிசியை ஆகாரத்துக்கு உபயோகிப்பதுபோல் சிலர் சோளத்தைச் சமைத்துச் சாப்பிடுகிறார்கள். நெல்லில் எத்தனையோ வகைகள் இருப்பதுபோல், சோளத்திலும் பலவகைகள் உண்டு. இது வெள்ளைச் சோளம். இது செழிப்பான நிலங்களில் நன்றாகப் பயிராகும். நெல்லைப்போல் இதற்கு அதிக ஜலம் வேண்டியதில்லை. நெல் நன்செயில் விளையும் தானியம். புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் மழை நன்றாகவும், கார்த்திகை மாதத்தில் உபாயமாகவும் பெய்தால் சோளம் நன்றாக உண்டாகும். குடியானவர்கள் கேணிகளை நிலங்களில் வெட்டி அவற்றிலிருந்து சோளப் பயிருக்கு ஜலம் பாய்ச்சுவதுமுண்டு. நிலத்தை இரண்டு மூன்றங்குலம் வரையில் ஆழமாக உழுதே சோளத்தை விதைப்பார்கள். சோளக் கொண்டைகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அங்கேயுள்ள தோட்டத்திற்குப் போய்ப் பாருங்கள். சோளக்கொண்டை பிஞ்சாக இருக்கும்போது மிகவும் ருசியாக இருக்கும்; ஆதலால் சிலர் அப்படியே தின்பார்கள்; வேறு சிலர் அடுப்புத் தணலில் சுட்டுத் தின்பார்கள். சோளத்தின் மணி நன்றாக முற்றினபிறகு, சோளத்தட்டைகளை ஐந்தாறு அங்குலம்வரையில் நிலத்தில் விட்டுவிட்டு வெட்டி விடுவார்கள். பிறகு தட்டைகளையெல்லாம் கட்டிக் களங்க

ளில் கொண்டுபோய் நாலைந்து தினங்கள் காயவைத்து அப்பால் அவற்றின்மேல் மாடுகளை ஓட்டியும், தடிகளால் அடித்தும், தானியத்தை வேறாகவும் வைக்கோலை வேறாகவும் பிரித்தெடுப்பார்கள். காற்றடிக்கும் சமயங்களில் குப்பைகளைப் புடைத்தெடுத்துச் சுத்தமாக்கிச் சோளத்தை வீட்டுக்குக் கொண்டுபோய்க் குதிர்களில் போட்டுவைப்பார்கள். உடனே உபயோகிக்காமல் சில மாதங்களுக்குப் பிறகு சோளத்தை உபயோகித்தால் அது தேகத்துக்கு மிக்க நன்மையைக் கொடுக்கும். நீர் வறண்ட இடங்களில் வசிக்கும் ஜனங்கள் சோளத்தையே ஆகாரத்துக்கு உபயோகிக்கிறார்கள். ஆடுமாடுகளும் சோளத்தைத் தின்னும்; சாரம் இல்லாத இடங்களில் கறுப்புச் சோளத்தைப் பயிரிடுகிறார்கள். ஆடுமாடுகளுக்கு மட்டுமே அது பிரயோசனமுள்ளது. சோளத்தட்டைகளை வைக்கோலைப்போல் மாடுகள் தின்னும். அநேக இடங்களில் சோளமே முக்கியமான பயிராக இருக்கிறது'' என்று சொன்னார்.



மக்காச்சோளம்.

ஒரு பையன்:—''இந்தக் கூடையில் இருப்பது என்ன? மக்காச்சோளமோ?'' என்று கேட்டான்.

உபாத்தியாயர்:—''ஆமாம்; இதற்கும் சோளத்துக்கும் வித்தியாசமுண்டு; இதன் கதிர்களைக் கடைகளில் கரும்பு போல் விற்பதை நீ பார்த்ததில்லையா?''

முத்துசாமி:—''நான் பார்த்திருக்கிறேன்; இதன் மணி சோளத்தைக்காட்டிலும் பெரிதாக இருக்கும்.''

**உபாத்தியாயர்:**—"மக்காச்சோளத்தில் எத்தனையோ வகைகள் உண்டு; இந்தியாவுக்கு வெகு தூரத்துக்கப்பால் அமெரிகா என்ற ஒரு கண்டமிருக்கிறது. அங்கேயுள்ளவர்கள் மக்காச்சோளத்தை ஏராளமாகப் பயிரிடுகிறார்கள். இந்தியாவில் இது பத்தடிக்குமேல் உயராது; அமெரிகாவிலோ பதினைந்து பதினாறடி உயரம்வரையில் வளரும். சோளக்கதிரிலுள்ள முத்துக்களில் சில பொன்னிறமாக உள்ளன. மக்காச்சோளத் தட்டைகள் அமெரிகாவில் ஆடுமாடுகளுக்குத் தீனியாக உதவுகின்றன. சோளத்தை அமெரிகாவிலுள்ளவர்கள் நன்றாகப் பொடிசெய்து தகரடப்பிகளில் அடைத்து அயலிடங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். நாம் அதை வாங்கி நோயாளிகளுக்கு ஆகாரமாகக் கொடுக்கிறோம். சில இடங்களில் சோளமாவினால் பணியாரங்கள் செய்து தின்பதுமுண்டு. அந்தக் கூடையில் இருப்பதுதான் கம்பு. கம்புக்கும் தினைக்கும் என்ன வித்தியாசம்? சோளத்தைப்போலவே கம்பும் புன்செய் தானியந்தான். உபாய மழை பெய்யுமிடங்களிலெல்லாம் கம்பு நன்றாகப் பயிராகும். பூமி செழிப்பாக இருக்கவேண்டுமென்ற அவசியமும் இதற்கில்லை. கம்புப்பயிர் நன்றாக வளர்ந்திருக்கும்போது அதிக மழை பெய்தால் விளைவு குறைவாகவே இருக்கும். தினைக் கதிர்களை எப்படி ஜனங்கள் அறுத்து உலர்த்தித் தானியத்தைப் பிரித்து எடுப்பார்களோ அப்படியேதான் கம்பையும் செய்வார்கள். கம்பஞ் சோறு உடம்புக்கு மிகவும் நல்லது. பயிர் நன்றாக முற்றுகிறவரையில் கதிர்களை அறுக்கமாட்டார்கள். கம்பந்தாளை ஆடுமாடுகள் தின்பதில்லை. அதைக் கடித்து மெல்லுவதும் மிகவும் கஷ்டமானது. வீடுகளில் கூரை போடுவதற்குக் கம்பந்தட்டைகள் பிரயோசனமுள்ளவை; ஆனால் ஒருவருஷத்துக்குமேல் அவை இருக்கமாட்டா. இந்தக் கூடையில் இருப்பது இன்னதென்று தெரியுமா? இதுதான் கேழ்வரகு. இது மிகவும் சிறிய தானியம்; பார்வைக்குக் கடுகைப்போல் இருக்கும். இதுவும் புன்செய்களிலேயே உண்டாகிறது. பனி பெய்யும் குளிர்தேசங்களில் இது அதிகமாக விளையும். சில இடங்களில் நெல் அறுத்தபிறகு வயல்களை உழுது கேழ்வரகைப் பயிரிடுவதுமுண்டு. புலர் கேழ்வரகை மாவாக்கிக் கூழ்செய்து உண்

யார்கள். கேழ்வரகு சத்துள்ளது; தேகத்துக்குப் புஷ்டியைக் கொடுக்கும். கேழ்வரகின் தாள்களை ஆடுமாடுகள் பிரியமாகத் தின்னும். இங்கே கூடையில் இருப்பது வரகு. வேறோ ஒருவிதமான சாகுபடிக்கும் உபயோகமில்லாத நிலங்களில் வரகு பயிராகும். ஜலம் இல்லாவிட்டாலும் இது கெட்டுப்போகாது.

"வரகில் உமியும் தவிடும் அதிகமாக இருக்கும். அதற்காகச் சாம்பலையும் களிமண்ணையும் கலந்து வரகின்மேல் பூசி எந்திரத்தில் உடைத்தால், பொட்டு வேறாகவும் அரிசி வேறாகவும் வந்துவிடும். வரகினால் சமைத்த சோறு தேகத்துக்கு உஷ்ணம்செய்யும்; முதலில் அதைச் சாப்பிடுபவர்கள் வயிற்று வலியால் வருந்துவதுமுண்டு. வரகின் தாளும் ஆடுமாடுகளுக்கு அதிக உபயோகமுள்ளதன்று. அங்கே ஒருவன் வாங்கிக்கொண்டிருக்கிறானே அதுதான் தினை. கம்பு, கேழ்வரகு இவற்றைக்காட்டிலும் தினை உயர்ந்த தானியம். மலைவெளிகளில் தினை அதிகமாக உண்டாகிறது. சில ஜில்லாவாசிகள் தினையையே உணவுப்பொருளாக உபயோகித்து வருகிறார்கள். தினையை அதிக ருசியுள்ளது. தினை மிகவும் மென்மையான தானியம். சிலர் செழிப்பு நிலங்களிலும் அதைப் பயிரிடுவதுண்டு. குதிர்களில் இரண்டு மூன்று வருஷம் வைத்திருந்தாலும் தினை கெட்டுப்போவதில்லை. தினைத்தாள் ஆடுமாடுகளுக்கு நல்ல தீனியாகும்; கோழிகளும் தினையைத் தின்னும்; எருமைமாடுகளுக்கு அதைத் தீனியில் கலந்து வைத்தால் நல்ல பால் கொடுக்கும். பத்துமணிக்கு மேலாய் விட்டது. நாமெல்லாரும் வீட்டுக்குப் போவோம். மறுபடியும் ஒருநாள் உங்களை அழைத்துவந்து வேறு சில தானியங்களைப்பற்றிச் சொல்லுகிறேன்" என்று உரைத்தார்.

உடனே முத்துசாமியும் மற்ற மாணாக்கர்களும், தங்கள் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். உபாத்தியாயரும் அவர்களுக்குப் பின்னால் சென்று தமது வீட்டை யடைந்தார்.

**இலக்கணம்.**—பயனிலையானது திணை, பால், இடம் இவற்றில் எழுவாயோடு ஒத்திருக்கவேண்டும். மாணாக்கன் படித்துக்கொண்டிருந்தான்; மாணாக்கன்: உயர்திணை, ஆண்பால், படர்க்கையிடப்பெயர்; படித்துக்கொண்டிருந்தான்: உயர்திணை, ஆண்பால்,


படர்க்கையிடத்து வினைமுற்று. நான் உங்களைக் கடைக்கு அழைக்கிறேன்: இதிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைத் தெரிவிக்க.

**குறிப்பு.**—நகரம் பட்டணம்; ஆராய்வதிலும் பரிசோதித்துப் பார்ப்பதிலும்; குதூகலம் — சந்தோஷம்; நேரும்போது — கிடைக்கும்போது; கேணி—கிணறு.

# 20. நல்ல பாம்பு.

பாம்புகளில் எத்தனையோ வகையுண்டு; அவற்றுள், நல்ல பாம்பு, விரியன், சாரை, வெண்ணந்தை, வழலை, பச்சைப்பாம்பு முதலியன முக்கியமானவை. எல்லாவற்றிலும் அதிக விஷமுள்ளது நல்ல பாம்புதான். அதற்கு நாகப் பாம்பு என்றும், ஸர்ப்பம் என்றும் வேறுபெயர்கள் உண்டு. இந்தியாவிலே சமநிலமான இடங்களில் பாம்புகள் விசேஷமாக உண்டு. மலைகளில் குளிர் அதிகமாதலால் நல்ல பாம்பு அங்கே வசிக்காமல் உஷ்ணமான இடங்களிலேதான் இருக்கும்.


பாம்புக்குக் கால்கள் இல்லை; ஆனாலும் மார்பினால் வெகு வேகமாக நகர்ந்து செல்லும்; மரங்களின்மேலும் விரைவாக ஏறிச் செல்லும்; மார்பினாலேயே நகர்ந்து செல்லுவதால்



அதற்கு உரகமென்று ஒரு பெயர் வழங்கி வருகிறது. நடப்பதற்கேற்ற கால்கள் அதற்கு இராவிட்டாலும் விரைவாக நகர்ந்து செல்லும்படி அதன் உடல் அமைந்திருக்கிறது.

கண்ணாடியைப்போல் மிகவும் வழுவழுப்பாயுள்ள இடங்களில் அது நகர்ந்து செல்லாது.

நல்ல பாம்புக்குப் படம் உண்டு. மற்றப்பாம்புகளுக்குப் படம் இல்லை. கோபம் வரும்போது நாகம் தலையை இரண்டடி உயரம் தூக்கிக்கொண்டு படத்தை விரிக்கும். படத்தின் பின்புறத்தில் இரண்டு கரிய புள்ளிகள் உண்டு. அந்த இரண்டு புள்ளிகளையும் ஒரு வளைவான கீற்று ஒன்றாகச் சேர்க்கிறது.



மேல்வாயில் நல்ல பாம்புக்கு இரண்டு பெரிய பற்கள் உள்ளன. அவை குழல் (குழாய்) போன்றவை. பற்களின் பின்னால் வாயின் மேற்புறத்தில் விஷப்பை ஒன்று உண்டு. பாம்பு பல்லினால் கடிக்கும்போது பையிலுள்ள விஷம் பல்லின் வழியாக அது கடித்த இடத்திற் பாயும்.

நல்ல பாம்பைக் கண்டு ஜனங்கள் பயப்படுவார்கள். ஜனங்களைக் கண்டு அதுவும் பயந்தோடும். நல்ல காற்றுள்ள இடங்களில் காற்றை உட்கொண்டு அது திரிந்துகொண்டிருக்கும். அங்கங்கேயுள்ள வளைகளில் அது நுழைந்து கொள்ளும். மாதம் ஒருமுறை நாகம் சட்டையுரிக்கும்.

நல்ல பாம்பு கடித்தால் அதற்கு விசேஷமாக மருந்தில்லை; ஆனால் சில இடங்களில் மூலிகைகளைக் கொடுத்து விஷத்தையெடுத்துவிடுவார்கள். நாகம் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டது; அதனால் அது ஒருவனைக் கடித்தால் சில மாந்திரிகர்கள் மந்திரசக்தியினால் அவனைப் பிழைக்கச் செய்வதுமுண்டு. கடித்த இடத்தில் ஒரு கூர்மையான கத்தியால் சிறிது சதையைக் கீறிவிடுவதும், கடித்த இடத்தை நெருப்பினாற் சுட்டுவிடுவதும் தக்க பரிகாரமென்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள்.

ஸர்ப்பத்துக்குச் செவியில்லை. அதன் கண்களே அதற்குக் காதுகள். அதனால் அதற்கு 'கட்செவி' என்ற ஒரு

பெயர் வழங்கிவருகிறது. அதன் நாக்கு இரண்டாகப் பிளந்திருக்கும்; இடியோசையைக் கண்டு நாகம் நடுநடுங்கிப் போய்விடும்.

சங்கீதத்தில் நல்ல பாம்புகளுக்கு மிக்க பிரியமுண்டு. நல்ல சங்கீதக் கச்சேரிகள் நடக்கும் இடங்களிலும், புல்லாங்குழல் வாசிக்கும் இடங்களிலும், வெகுதூரத்தில் இருந்துகொண்டு பாம்புகள் கேட்டுக்கொண்டிருக்கும்.



பாம்பைப்பிடித்து ஆட்டுகிறவனுக்கு 'பிடாரன்' என்று பெயர். அவன் காடுகளில் சென்று மகுடி என்னும் வாத்தியத்தை ஊதிப் பாம்புகளை வசப்படுத்தி அவற்றைப் பிடித்துக் கொண்டுவந்து வேடிக்கை காட்டிப் பணம் சம்பாதிப்பான். அவன் ஊதும்போது பாம்பு படத்தை விரித்து ஆடும்; ஊதாமல் நிற்கும் சமயங்களில் சீறிச்சீறிப் பூமியைப் படத்தால் அறையும்; சில பாம்பாட்டிகள் மந்திரபலத்தினாலும் நாகங்களை அடக்கிவிடுவார்கள். பிடாரன் பாம்பின் விஷப்பையையும், பல்லையும் பிடுங்கிவிடுவான். பிறகு அதனால் ஒரு தீங்கும் ஏற்படாது. சில வித்தையாடிகள் பாம்புகளைப் பிடித்துச் சிறு கூடைகளிலும், குடங்களிலும் அடைத்து ஊரூராய்த் திரிந்து வேடிக்கைகாட்டிப் பணம் சம்பாதிப்பார்கள்.

பாம்புகள் மரப்பொந்துகளிலும், குகைகளிலும், செடிகள் அடர்ந்த இடங்களிலும், புற்றுக்களிலும் வசிக்கும். தவளை, எலி முதலியவைகளைப் பாம்பு தின்னும்; அவைகளை அது கடித்துக் கொஞ்சங் கொஞ்சமாக மென்று தின்னாமல் அப்படியே விழுங்கிவிடும். பாம்புக்குப் பாலில் அதிக விருப்பமுண்டு. ஒரு பாம்பு பல முட்டைகள் இடும்; அம்முட்டைகளிலிருந்து சிறு பாம்புக்குட்டிகள் உண்டாகின்றன. சில பாம்புகள் பல வருஷங்கள் வரையில் ஜீவித்திருக்கின்றன.



கீரிப்பிள்ளையும் கருடனும் பாம்புக்குப் பகையானவைகள். ஸர்ப்பங்களைக் கீரிப்பிள்ளை பார்த்துவிட்டால் சிறிதும் அஞ்சாமல் அவற்றைத் துண்டந் துண்டமாகக் கடித்தெறிந்துவிடும். கருடன் மூக்கினால் கொத்திக் கொன்றுவிடும். பாம்பைக் கொல்வதற்காகவே சிலர் வீடுகளில் கீரிப்பிள்ளைகளை வளர்ப்பதுண்டு.

இந்துக்களில் பலர் நல்ல பாம்பை ஒரு தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள்.

**இலக்கணம்.**—பெயரைப்போல் வினைமுற்றுக்கும், ஒருமை பன்மையுண்டு. வருகிறது: இது ஒருமை; பன்மை வருகின்றன. செல்லாது: இதன் பன்மை என்ன? உள்ளன: இதன் ஒருமை யென்ன? வினைச்சொல்லுக்குப் பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய இவை முக்கிய உறுப்புகள். பாய்கிறது: இதன் பகுதி-பாய்; விகுதி-து; கிறு-நிகழ்கால இடைநிலை. நகர்ந்து வினையெச்சம்: நகர்-பகுதி; உ-வினையெச்ச விகுதி; ந்-இறந்தகால இடைநிலை. புதைந்த பெயரெச்சம்: புதை-பகுதி; அ-பெயரெச்ச விகுதி; ந்-இறந்தகால இடைநிலை.

**குறிப்பு.**—கரிய-கறுப்பான; கீற்று-கோடு; சட்டை-மேல்தோல்; மூலிகை-பச்சிலை; செவி-காது.

# 21. தண்ணீர்.

இவ்வுலகத்திலுள்ள பொருள்களெல்லாம் பொதுவாக மூன்று வகையில் அடங்கும். சில கல்லைப்போலவும் சில ஜலத்தைப்போலவும் சில காற்றைப்போலவும் இருக்கின்றன. அவற்றிற்கு முறையே, திடபதார்த்தம், திரவபதார்த்தம், வாயுபதார்த்தம் என்று பெயர்.

ஜலம் ஒரு திரவபதார்த்தம்; ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு அது ஓடும். ஆறுகள் இருப்பதற்குக் காரணம் இதுவே. உயரமான இடத்திலிருந்து தாழ்வான இடத்துக்குச் செல்வது தண்ணீரின் இயற்கை. இவ்விஷயத்தை நாம் எளிதில் தெரிந்துகொள்ளலாம். ஒரு பாத்திரத்தில் ஜலத்தை எடுத்துக்கொண்டு வீட்டுமுற்றத்தின் ஒரு மூலையில் ஊற்றினுல் அது சாக்கடைப்பக்கம் ஓடுவது எல்லாருக்கும் தெரிந்ததே. மழை பெய்தால் வாய்க்கால்களில் ஜலம் அதிகமாக ஓடுவதையும், குளங்குட்டைகளிலும் ஏரிகளிலும் தண்ணீர் நிரம்புவதையும் நீங்கள் பார்த்திருக்கக் கூடும்.

சுத்த ஜலம் சுவையற்றது; நாம் சாப்பிடும் ஜலந்தான் சுவையுள்ளதாகவும் சிறிது உப்பாகவும் இருக்கிறது. அதற்கு என்னகாரணம்? மழை ஜலத்தைக் கொஞ்சம் பருகிப் பார்த்தால் அதில் ஒருவிதமான ருசியும் இல்லை என்பது நன்ருகத் தெரியும். அதே மழைஜலமானது பலவிதமான நிலங்களின் வழியாக ஒரு குளத்திற்போய் விழுகிறது. அது பானம் செய்வதற்கு ருசியாக உள்ளது. இதனுல் நாம் தெரிந்துகொள்வதென்ன? இயற்கையில் ஜலத்திற்கு ருசி இல்லையென்றும் அதற்கு ஏற்படும் ருசியானது அது பாய்ந்து செல்லும் நிலத்துக்குத் தக்கபடி இருக்கிறதென்றும் நாம் அறிந்துகொள்ளுகிருேம்; சாரமான பூமிவழியாக ஓடும் ஜலம் ருசியாகவும் உவர் நிலத்தின் வழியாகப் பாயும் ஜலம் உவர்ப்பாகவும் உள்ளன. உதாரணமாகக் காவேரி ஆற்றின் ஜலம் மிகவும் ருசியாகவும், சென்னைக்குச் சமீபத்திலுள்ள அடையாற்றிலுள்ள ஜலம் உப்பாகவும் இருக்கின்றன.

கடலிலுள்ள ஜலம் முழுவதும் உப்புநீர். அது பானத்திற்கு உபயோகமற்றது. சூரியனுடைய கிரணங்களின்

உஷ்ணத்தால் கடல் நீர் ஆவியாகி மேலே எழும்பி மேகமாகிறது. கடல் நீரிலுள்ள உப்பு, ஜலத்தைக்காட்டிலும் கனமுள்ள பொருளானதால் அது ஜலத்துடன் மேலே எழாமல் கீழே தங்கிவிடுகின்றது. மேகமாக மாறின நீராவி வாயுவின் வேகத்தால் பூமிக்கு அருகில் கொண்டுவரப்பட்டு இறங்கி, பூமியின்மேல் மழையாகப் பொழிகிறது. மழைநீர் மாசற்றது. இயற்கையில் அதற்கு நிறம், ருசி, மணம் இவற்றுள் ஒன்றுமில்லை.

பூமியில் விழும் மழைஜலத்தில் ஒருபாகம் நிலத்தில் ஊறி அடியில் கற்பாறையாவது களிமண்தரையாவது இருக்கும் இடம்வரையில் செல்லுகிறது. பல பக்கங்களிலிருந்தும் வரும் ஜலமெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து பூமியின் கீழே ஒரு நீரோட்டம்போல் ஆகின்றன. கற்பாறை வழியாகவும், களிமண்தரை வழியாகவும் ஜலம் ஊறிச்செல்லாது. சில இடங்களில் கிணறுகள் வெட்டும்போது அடியில் இந்தமாதிரியான நீரூற்று அகப்படுவதால் ஜலம் கிணற்றில் ஒருபோதும் வற்றுவதில்லை; மழை ஜலத்தில் வேறு சில பாகம் நிலத்தில் ஊறாமல் பூமியின்மேல் ஓடிச் செல்லுகிறது. அவ்வகையான நீரோட்டங்களில் சிறியவைகளுக்கு அருவிகளென்றும், பெரியவைகளுக்கு ஆறுகளென்றும் பெயர். பல சிறிய அருவிகள் சேருவதால் ஒரு நதி உண்டாகிறது. ஒரு நதி ஓடும்போது இடையிடையே பல உபநதிகள் அதில் வந்து கலக்கும்; அதனால் அந்நதி வரவரப் பெரிதாகித் தாழ்ந்த நிலம் நோக்கிப்பாய்ந்து கடைசியில் கடலில் விழுகிறது. மழை நீரில் மற்றும் சிலபாகம் பூமியில் பள்ளமான இடங்களை நிரப்புகின்றன. அந்த நீர் நிலைகளுக்குக் குளங்களென்றும், ஏரிகளென்றும் பெயர். ஆதலால் ஜனங்கள் சாப்பிடுவதற்கு உபயோகமான ஜலம் முழுவதும் நதிகள், கிணறுகள், குளங்கள்; ஏரிகள் ஆகிய இவற்றிலிருந்து கிடைக்கிறது.

மிகவும் ஆழமான கிணற்றிலிருந்து எடுக்கப்படும் ஜலமே தாகத்துக்குச் சிறந்தது. அவ்வகையான கிணறுகளை மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். சில மூடஜனங்கள் கிணற்றின் அருகே அழுக்கு ஜலத்தை ஊற்றியும் மரம் செடிகளைப் பயிராக்கி அவற்றின் இலைகள் கிணற்றுக்குள்

விழும்படி செய்தும், அழுக்கு ஜலம் கிணற்றுக்குள் தெறிக்கும்படி அசுத்தமான வஸ்திரங்களைத் தோய்த்தும் பல விதத்தில் அசுத்தமாக்கி விடுகிறார்கள். அதனால் அக்கிணற்று ஜலம் சில கடுமையான நோய்களுக்கு ஆதாரமாகின்றது. சில கிணறுகளுக்குத் தலையீடு இல்லாமையால் பூமியில் விழும் மழைஜலம் பக்கத்திலுள்ள அசுத்தமான மண்ணோடு கலந்து கிணற்றுக்குள் விழுவதுண்டு. சிலர் குப்பை, சாம்பல், அசுத்தங்கள் முதலியவைகளை ஆறுகளில் கொட்டுகிறார்கள்; வேறு சிலர் ஆடுமாடுகளைக் குளங்களில் குளிப்பாட்டி அங்குள்ள நீரையே தாங்களும் சாப்பிடுகிறார்கள். இவ்வாறு இருந்தால் நோய்கள் உண்டாவதற்கு யாதுதடை?

நோயின்மைக்குச் சுத்தஜலம் மிகவும் அவசியமானது; ஆகலால் கிணறுகளையும், குளங்களையும், நதிகளையும் மிகவும் பரிசுத்தமாக வைத்திருக்கவேண்டும். ஜலம் வைத்துக் கொள்ள உபயோகிக்கும் பாத்திரமும் சுத்தமாகவே இருக்கவேண்டும். கிணறுகளில் வருஷத்திற்கு ஒருமுறை தூரு எடுக்கவேண்டும். கிணற்றை எவ்வளவுக் கெவ்வளவு நாம் சுத்தமாக வைத்துக்கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு அதன் நீர் பரிசுத்தமாக இருக்கும்.

சில நகரங்களில் ஸ்நானம் பண்ணுவதற்கும், ஆடுமாடுகளைக் குளிப்பாட்டுவதற்கும், வஸ்திரங்கள் தோய்ப்பதற்கும், பாத்திரங்கள் கழுவுவதற்கும், பானத்திற்கு உபயோகமான தண்ணீர் எடுத்துக்கொள்ளுவதற்கும் வெவ்வேறான குளங்களை ஏற்படுத்திக் காவல் போட்டிருக்கிறார்கள். சில இடங்களில் மேலே சொன்ன எல்லாக் காரியங்களுக்கும் ஒரே குளத்தை உபயோகப்படுத்தி அநேகவிதமான வியாதிகளை விளைவித்துக் கொள்ளுகிறார்கள்.

ஜீவாதாரத்திற்கு முக்கியமான பொருள் தண்ணீரென்பதை அநேகர் நினைப்பதில்லை. விஷபேதி, விஷஜுரம் முதலிய நோய்கள் அசுத்தமான ஜலத்தினாலேயே ஊர்முழுவதும் பரவுகின்றன என்று வைத்திய நிபுணர்கள் ஆராய்ச்சியால் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆதலால் எப்படிப்பட்ட காலத்திலும் சுத்தமான ஜலத்தையே எந்தக்காரியத்திற்கும் உபயோகித்துவரவேண்டும். அசுத்தமான ஜலத்தில் நம் கண்

னுக்குத் தெரியாமல் கோடிக்கணக்கான கிருமிகள் வசிக்கின்றன; வியாதிகளை அவைகளே பரவச்செய்கின்றன. ஆகலால் ஜலத்தை எப்பொழுதும் நன்றாகக் காய்ச்சி வடிக்கட்டி ஆறவைத்து உபயோகிப்பதே மிகவும் உத்தமமானது. நன்றாகக் காய்ச்சுவதனால் கிருமிகள் இறந்துபோகின்றன. வடிக்கட்டுவதால் அசுத்தமெல்லாம் துணியில் தங்கிவிடும்.

**இலக்கணம்.**—இருக்கின்றன; தெரிந்து; சாப்பிடும்; பருகி; போய்; செல்லும்; எழும்பி; விடுகின்றது; ஊறி: இவை என்ன சொற்கள்? இவற்றின் பகுதி விகுதிகளைக் கூறுக.

**குறிப்பு.**—இயற்கை-சுபாவம்; பருகி-குடித்து; உவர்நிலம்-உப்புநிலம்; இறுகி-கெட்டியாகி; மாசு-களங்கம்; ஆதாரம்-காரணம்; கிருமி-சிறுபுழு; உத்தமமானது-சிறந்தது.

## 22. நட்பின் பெருமை.

புராதனகாலத்தில் ஸிஸிலி என்னும் தீவுக்கு, சிரகேசி (ஸைரக்யூஸ்) என்னும் நகரம் ராஜதானியாக இருந்தது. ஒரு காலத்தில் தியோதனன் (தியோனிஸ்) என்னும் மன்னன் அதனை ஆண்டுகொண்டிருந்தான். அவன் கொடுங்கோல் அரசன்; பிரஜைகளை மிகவும் வருத்திவந்தான்; நியாயாதிகளைத் தண்டித்துக் கடுங்குற்றம் செய்தவர்களை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுவான். அவன் இயற்கைக்கு மாறான குணமுள்ளவன.

அவன்காலத்தில் தாமன் என்ற ஒரு மந்திரவாதி இருந்தான். அவன் எல்லாராலும் நன்கு மதிக்கப்பட்டவன். ஒருமுறை அவன் தியோதனனுடைய கோபத்துக்குப் பாத்திரனானான். அப்போது அரசன் அவனுக்கு மரணதண்டனை விதித்து அவனை ராஜதானியிலேயே தூக்கிடும்படி கட்டளையிட்டான். தாமனுக்குச் சொந்தவூர் ராஜதானிக்கு நெடுந்தூரத்துக்கு அப்பால் இருந்தது. அவன் அரசனை நோக்கி "எனக்கோ மரணதண்டனை ஏற்பட்டுவிட்டது! நான் இறப்பதற்கு முன்பு என்னுடைய சொந்த ஊருக்குப்போய் என் மனைவிமக்களைப் பார்த்துவரும்படி எனக்கு அநுமதியளிக்கவேண்டும். எந்தத்தினத்தில் என்னைத் தூக்குப்போடவேண்

டுபோ அன்றைத்தினம் தவருமல் இங்கு வந்துவிடுவேன். தயைசெய்து என் விருப்பத்தை நிறைவேற்றி அருள்புரிய வேண்டும்” என்று விநயமாக விண்ணப்பஞ் செய்துகொண்டான்.

அப்போது வேந்தன், தாமனைப்பார்த்து “உன் வார்த்தையை நான் எப்படி நம்பலாம்? நீ உன் சொந்ததேசம் போய் விட்டுக் குறித்ததினத்தில் வருவதாகச் சொல்லுகிருய்; நீ வாராமற்போனல் என்னசெய்கிறது? குறிப்பிட்ட தினத்தில் நீ இங்கே வந்து சேராவிட்டால் உனக்கு ஏற்பட்டுள்ள மரண தண்டனையை ஏற்றுக்கொள்ள இங்கே யாராவது உடன்படுவார்களானல் உனக்கு அனுமதி கொடுப்பேன்” என்று சொன்னன்.

மன்னன் அவ்வாறு கூறியவுடனே அது சாத்தியமாகாத காரியமென்று தாமன் ஊருக்குப்போய் மனைவிமக்களைப் பார்க்கும் ஆசையையே விட்டொழித்தான்.

தாமனுக்கு விதூரன் (பிதியஸ்) என்ற அருமை நண்பன் ஒருவன் உண்டு. அவன் எல்லா விஷயங்களையும் கேள்வியுற்று, தாமனுக்குத் தெரியாமல் அரசனிடம் சென்று தன் நண்பன் ஊர்போய்த் திரும்பி வருமளவும் தான் அவனுக்குப் பிணை இருப்பதாக ஒப்புக்கொண்டான். அரசன் அதற்கிணைந்து தாமனை ஊருக்குப் போய்வரும்படி செய்து அவன் திரும்பி வரும்வரையில் விதூரனைச் சிறையில் அடைத்து வைக்கும்படி கட்டளையிட்டான்.

தாமன் தன் அருமை நண்பனுடைய பேருதவியால் தன் மனைவி மக்களைப் பார்க்கச் சென்றான். சிலவாரங்களுக்குப் பின் அவனைத் தூக்கிலிடவேண்டிய தினம் வந்துவிட்டது. அவன் வந்து சேரவில்லை. அரசன் சிறைச்சாலைக்குச் சென்று விதூரனை நோக்கி “தாமனைக் கொலை செய்ய ஏற்படுத்தியது இன்றைத்தினந்தான்; அவனே சொன்னபடி வந்து சேரவில்லை. இப்போது நீ என்ன சொல்லுகிருய்?” என்று கேட்டான். அப்போது குணசீலனான விதூரன் சிறிதும் மனங் கலங்காமல், “பிரபுவே, அவன் வாராமலிருப்பது நல்லது. வாராமலிருக்கவேண்டுமென்பதே என் பிரார்த்தனை. அவன் வந்தால் அவனுக்கு மரணதண்டனை ஏற்படும்; அதைப்

பார்க்க என் மனம் சிறிதும் சகியாது. ஆதலால் என் பிராணநண்பனுக்காக என் உயிரைக் கொடுக்கும்படியான பாக்கியம் எனக்கு ஏற்பட்டதே என்று மிகுந்த சந்தோஷத்துடன் இருக்கிறேன்" என்று பதிலுரைத்தான்.

மாலைநேரமும் வந்துவிட்டது. தாமன் வரவில்லை. உடனே விதுரனைக் கொலைக்களத்துக்கு அழைத்துவரும்படி அரசன் கட்டளையிட்டான். ஊரிலுள்ளவர்கள் எல்லாரும் மிக்க வருத்தத்துடன் அங்கேவந்து பார்த்துக்கொண்டு நின்றார்கள். விதுரனும் கொலைக்களத்துக்குக் கொண்டுவரப்பட்டான்.

அப்போது விதுரன் சுற்றி நின்ற கொலையாளிகளைப் பார்த்து, "தாமதிக்கவேண்டாம்; தாமன் வருவதற்கு முன் என்னைத் தூக்குமரத்தி லேற்றிக் கொன்றுவிடுங்கள்; என்னுடைய பிராண நண்பனுக்காக என் உயிரைக் கொடுத்த புண்ணியம் எனக்கு இருக்கட்டும்" என்று சிறிதும் வருத்தமில்லாமல் சந்தோஷத்துடன் கூறினான். எல்லாரும் அவனுடைய மன நிலைமையைக்கண்டு ஆச்சரியமடைந்தார்கள்.

உடனே கொலைஞர்கள் விதுரனைத் தூக்குமரத்தில் ஏற்றி அவன் கழுத்தில் ஒரு கயிற்றைமாட்டி அதை இழுக்க ஆரம்பித்தார்கள். அப்போது திடீரென்று, "நிறுத்துங்கள், நிறுத்துங்கள்; தூக்குப்போடுவதை நிறுத்துங்கள்" என்ற ஒரு சத்தம் ஜனங்கள் காதில் பலமாக விழுந்தது. எங்கிருந்து சத்தம் வருகிறதென்று எல்லாரும் சுற்றிப்பார்த்தார்கள். அப்போது தாமன் வெகு வேகமாக ஒரு குதிரையின்மேல் ஏறிவந்து நின்றான். அவன் தேகம் முழுவதும் நனைந்திருந்தது. அவன் குதிரையின் வாயிலிருந்து நுரை வழிந்துகொண்டிருந்தது. பிறகு தாமன் விதுரனிடம் வேகமாயோடி அவனைக் கட்டிக்கொண்டு "அன்பனே, எனக்காக நீ உயிரை விட இருந்தாயே; நான் இன்னும் ஒரு நிமிஷம் தாமதித்து வந்திருந்தால் உன்னைக் கொன்றிருப்பார்களே; பெரும்பாவம் என்மேல் சுமந்திருக்குமே; கடவுளே இந்தத் துன்பத்திலிருந்தும் காப்பாற்றி யருளினார்" என்று கண்களில் நீர் ததும்ப உரைத்தான்.

எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த தியோதனன் அவர்களுடைய ஒப்பற்ற நட்பைக்கண்டு ஆச்சரியமடைந்து

மனமிரங்கி அவர்களில் ஒருவனைவிட்டு ஒருவனைப் பிரிக்க மனமில்லாமல் தாமனுக்கு விதித்த தண்டனையை மன்னித்து விட்டான். பிறகு அவன் தாமனையும் விநாசனையும் தன்னுடன் சிநேகமாக இருக்கும்படி வேண்டிக்கொண்டான்.

**இலக்கணம்.**—ஒரு வினைமுற்றின் விகுதியைக்கொண்டே நாம், அது இன்னதிணை, இன்னபால், இன்னஇடம், என்று அறிந்து கொள்ளலாம். இருந்தான்: இங்கே ஆன் என்னும் விகுதி, உயர்திணை, ஆண்பால், படர்க்கையிடத்தைக் காட்டுகிறது. செய்கிறது, கொடுப்பேன், சொன்னான்: இவற்றின் விகுதிகளையும் அவை காட்டும் திணைபாலிடங்களையும் விளக்குக.

**குறிப்பு.**—புராதனகாலம்—பழையகாலம்; ராஜதானி—அரசன் வசிக்கும் இடம்; பிரஜைகள்—குடிகள்; நிரபராதி—குற்றஞ்செய்யாதவன்; மாறான—விரோதமான; அனுமதி—உத்தரவு; விண்ணப்பம்—மனு; வேந்தன்—அரசன்; நண்பன்—சிநேகிதன்; பிணை—ஜாமீன்; இயைந்து—சம்மதித்து.

## 23. திருவள்ளுவர்.

தமிழில் சிறந்த நீதிகளை விளக்கிக்காட்டும் நூல்கள் பல உண்டு. அவற்றுள் முதன்மையானது திருக்குறள். ஆங்கிலம் முதலிய அன்னிய பாஷைகளில் அது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதிலுள்ள விஷயங்களை எல்லா மதத்தார்களும் அங்கீகரித்துக்கொண்டு பாராட்டிவருகிறார்கள். நான்குவிதமான புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு (மோக்ஷம்) என்னும் இவற்றுள் முதல் மூன்றும் அதில் கூறப்பெற்றுள்ளன.

தமிழ்ச் செய்யுட்களில் வெண்பா என்று ஒருவகையுண்டு. அதில் இரண்டு அடிகளையுடைய செய்யுளுக்கு, குறள் வெண்பா என்று பெயர். இம்மாதிரியான 1330—வெண்பாக்கள் அப்புஸ்தகத்தில் அடங்கியுள்ளன. அதனால் அது 'திருக்குறள்' என்று பெயர் பெற்றது.

திருக்குறளை இயற்றியவருக்கு, திருவள்ளுவ நாயனார் என்று பெயர். அவர் தொண்டைமண்டலத்தில் மயிலாப்பூர் என்னும் சிறந்த நகரத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்

அவதரித்தார். அவருடைய தாய்தந்தையர்கள் அவரைக் காப்பாற்றாமல் விட்டுவிட்டமையால் அவர், குழந்தை இல்லாத ஒரு வேளாளர் மனையில் வளர்ந்துவந்தார். இந்துவயதானபிறகு அவர் சித்தர்கள் வசிக்கும் மலைக்குச்சென்று தவம் செய்தார். அதன் பயனாக அவர் பல சாஸ்திரங்களிலும் பண்டிதரானார்.

சிலகாலம் சென்றபிறகு அவர் வாசுகியென்னும் ஒரு பெண்ணை விவாகம் செய்துகொண்டார். அவள் கற்பில் சிறந்தவள். அவரைத்தவிர வேறுதெய்வம் இருப்பதாக அவள் நினைக்கவேயில்லை. அவருடைய குறிப்பை அறிந்து எதையும் செய்வாள். அவர் இடும் கட்டளை எதுவானாலும் அதை மறுக்காமல் செய்து முடிப்பாள். ஒருநாள் அவர் சாப்பிட உட்கார்ந்தபொழுது பழையமுதை இலையில் படைத்தாள். அவர் "இது என்ன இவ்வளவு சூடாக இருக்கிறதே?" என்று சொல்ல அவள் வேகமாக ஒரு விசிறியை எடுத்து வந்து விசிறினாள். வேறொருநாள் அவள் கிணற்றில் ஜலந்தூக்கிக் கொண்டிருக்கும்பொழுது திருவள்ளுவர் திடீரென்று அவளையழைத்தார். அவள் பாதியளவில் கிணற்றில் குடத்தை விட்டுவிட்டு ஓடிவந்தாள்.

திருவள்ளுவர் 'ஏலேலசிங்கன்' என்னும் வியாபாரியிடம் நூல் வாங்கி, வஸ்திரங்கள் நெய்து ஜீவனம் செய்துவந்தார். அவர் கோபமே இல்லாதவர். பொறுமை என்னும் குணம் அவரிடம் குடிகொண்டிருந்தது. ஒருநாள் அவர் கடைத்தெருவில் ஒரு வஸ்திரத்தை விற்பதற்காக நின்றுகொண்டிருந்தார். அப்போது அதனை ஒரு துஷ்டப்பையன் கையில் வாங்கி, 'இதன் விலை என்ன?' என்று கேட்டான். அவர் ஒருபணம் என்றார். சிறுவன் அதைப் பாதியாகக் கிழித்து, 'இதன் விலை யென்ன?' என்று கேட்டபோது அவர் அரைப்பணம் என்று கூறினார். மறுபடி அவன் அதையும் பாதியாகக் கிழித்து, 'இப்போது இதன் விலை என்ன?' என்று வினவினான். அவர் கொஞ்சமும் கோபங் கொள்ளாமல், 'கால்பணம்' என்று பதில் சொன்னார். அவருடைய பொறுமையை அச்சிறுவன் கண்டு ஆச்சரியமடைந்து போனான்.

மதுரை என்னும் பட்டணத்தில் வெகுகாலத்துக்கு முன்னே ஒரு தமிழ்ச்சங்கம் இருந்தது. அதில் பல சிறந்த

வித்துவான்கள் இருந்தார்கள். திருவள்ளுவர் தம்முடைய திருக்குறளை அவர்களுக்குக் காட்ட எண்ணி மதுரைக்குப் போனார். அவர்கள் எல்லாரும் அதைப்பார்த்து அதில் உள்ள அருமைகளை மிகவும் புகழ்ந்து பாடினார்கள். அவர்கள் பாடிய பாடல்கள் அடங்கிய புஸ்தகத்துக்கு, 'திருவள்ளுவமாலை' என்று பெயர்.

பிறகு திருவள்ளுவர் மயிலாப்பூருக்கு வந்து பழையபடி துணி நெய்து காலங்கழித்தனர். அவருக்கு நாயனாரென்றும், தெய்வப்புலவரென்றும், பொய்யில் புலவரென்றும் சில பட்டப் பெயர்கள் உண்டு.

**இலக்கணம்.**—வினைச்சொல்லில் காலங்காட்டும் உறுப்புக்கு இடைநிலைகள் என்று பெயர். சில வினைச்சொற்களில் விகுதிகளை காலங்காட்டும். விளக்கி, வருகிறார்கள், அவதரித்தார், வளர்ந்து, செய்தார், சென்ற, செய்து, சாப்பிட, கூறினார், கேட்ட: இவற்றில் காலத்தைக் காட்டும் உறுப்பை எடுத்துக்காட்டுக.

**குறிப்பு.**—நூல்-புஸ்தகம்; அவதரித்தார் பிறந்தார்; மனை வீடு; சித்தர்கள்-முனிவர்கள்.

## 24. ஹம்பி—விஜயநகரம்.

**ஹ**ம்பி என்பது புகழ்பெற்ற ஒரு சிறந்த ஸ்தலம். துங்கபத்திரை நதியின் தென்கரையில் அந்த கிராமம் அமைந்திருக்கிறது. முற்காலத்தில் அது விஜயநகர ராஜ்யத்தின் பிரதான பட்டணமாக இருந்தது. பார்க்கத்தகுந்த பல பழைய ஆலயங்கள் அவ்விடத்தில் உள்ளன. அவற்றுள் விரூபாக்ஷருடைய கோயில் முக்கியமானது. அதன் கிழக்குவாயிலில் மிகவும் உன்னதமான கோபுரம் இருக்கிறது. அதற்கு ஏழு உப்பரிகைகள் உண்டு. அக்கோபுரம் முற்காலத்தில் மதங்க முனிவர் தவம் செய்துகொண்டிருந்த ருசியமூக பர்வதத்தின் கொடுமுடிக்குச் சமானமான உயரமுள்ளதென்று சொல்லுகிறார்கள். கோவிலுக்குள்ளே போவதற்குக் கிழக்குப்பக்கத்தில் இரண்டு வாயில்கள் உண்டு. இரண்டாவது பிராகாரத்தின் மத்தியில்தான் விரூபாக்ஷருடைய ஆலயம் இருக்கிறது. மிகவும் ஆச்சரியமான சிற்பவேலைகளமைந்த கருங்கற்களால் அது கட்டப்பட்டிருக்கிறது.

விரூபாக்ஷருடைய கோவிலுக்குப் பின்னே ஒரு மண்டபம் உண்டு. அதிலேதான் வித்தியாரண்ணியசுவாமி இருந்து வந்தார் என்று சொல்லுகிறார்கள். துங்கபத்திரை நதியிலிருந்து ஒரு கால்வாயானது கோவிலுக்குள்ளே ஒரு பக்கமாக வந்து மற்றொரு பக்கமாக நதியில்போய்ச் சேருகிறது. ஜனங்களுக்கு வேண்டிய ஜலம் முழுவதையும் அக்கால்வாயே கொடுத்துவந்தது. சித்திரைமாதத்தில் பௌர்ணிமையில் அங்கே வருஷந்தோறும் திருவிழா நடக்கிறது. அக்காலத்தில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் வந்து கூடுவார்கள்.

முற்காலத்திலிருந்த சிற்பிகள், இந்த ஆலயத்தில் மாத்திரமேயன்றி உத்தண்ட வீரபத்திரர் கோயில், ஸீதையின் ஆலயம் முதலிய வேறுபல ஆலயங்களிலும் ஆச்சரியமான பல சிற்பவேலைகளைச் செய்து தங்கள் திறமையைக் காட்டியிருக்கிறார்கள்; அவைகள் பார்க்கத் தகுந்தவை.

விரூபாக்ஷாலயத்திற்குத் தெற்கே விநாயகக் கடவுளின் ஆலயங்கள் இரண்டுள்ளன. அவற்றில் உள்ள விக்கிரகங்கள் இரண்டும் பார்வைக்குச் சிறிய குன்றுகள்போல் இருக்கும். ஒரு விநாயகமூர்த்திக்கு 'சாசு கணேசர்' என்றும், மற்றொரு மூர்த்திக்கு 'சேனகால கணேசர்' என்றும் பெயர். மேற்கூறிய கால்வாயின் மத்தியில் வசிஷ்டாச்சிரமம் என்ற பெயருள்ள ஒருமண்டபமிருக்கிறது. பார்ப்பதற்கு அதைப் போலவே அழகாகவும் ஆச்சரியமாகவும் உள்ள வேறு மண்டபங்களும் கட்டிடங்களும் உள்ளன. துங்கபத்திரையின் ஒருபாகத்துக்கு அவ்விடத்தில் சக்கரதீர்த்தமென்று பெயர். ஹம்பிக்கு ஈசான்னியத்தில் மூன்றுமைல் தூரத்தில் பாழாய்ப் போன விஜயநகரம் இருக்கிறது. அவ்விடத்திலும் துங்கபத்திரை நதி ஓடுகிறது. இப்போது அவ்விடத்தில் ஜனங்கள் வசிக்கவில்லை; ஆனாலும் புராதன ராஜ்யமான விஜயநகர சமஸ்தானத்திற்கு அது முற்காலத்தில் ராஜதானியாக இருந்தது. ஐந்நூறு வருஷங்களுக்குமுன்பு அவ்விடத்தில் பாராக்கிரமமுள்ள அரசர்கள் ஆண்டுவந்தார்கள். அவர்களுடைய காலத்திலேதான் ஹம்பியில் பல ஆலயங்கள் கட்டப்பட்டன. அவற்றுள் விட்டலருடைய கோயில் மிகவும் பெரியதாகவும் அழகாகவும் இருக்கிறது.

விஜயநகரத்திலிருந்த மன்னர்கள் தென் இந்தியாவில் இருந்த மகம்மதிய அரசர்களை அடக்கிவந்தார்கள். பல மா காணங்களையும் ஜயித்து அவர்கள் இந்துமதத்தைப் பரிபா லித்துவந்ததோடு அதைப் பலவிடத்தும் பரவச்செய்தார் கள். அவர்களுள் மிகவும் புகழ்பெற்றவர் கிருஷ்ணதேவ ராயர். அவர்காலத்தில் விஜயநகர ராஜ்யம் அதிக விஸ்தா ரத்தை அடைந்தது. கிருஷ்ணதேவராயர் சிறந்த கல்வி மான்; பிரபல வித்துவான்கள் பலரும், சாஸ்திர விற்பன்னர் களும் அவரால் மிகவும் ஆதரிக்கப்பட்டார்கள். அவரு டைய சமஸ்தான வித்வான்களான அல்லசாநி பெத்தனர் முதலியவர்களுக்கு அஷ்டதிக்கஜங்கள் என்று பெயர். அவர் காலஞ்சென்ற இருநூறு வருஷங்களுக்குப் பிறகு ராமராஜர் என்பவர் அந்த ராஜ்யத்தை ஆண்டுகொண்டிருந் தார். அப்போது தென்னிந்தியாவில் இருந்த மகம்மதிய சுல்தான்கள் ஒன்றுகூடி விஜயநகரத்தின்மேல் படையெடுத்து வந்து அவரை வென்று ராஜ்யத்தையும் பாழாக்கினார்கள். அந்த ராஜ்யம் முதலில் அடைந்திருந்த பெருமையையும் பிறகு அதற்கேற்பட்ட தாழ்வையும் கவனிக்கும்போது மிக்க வருத்தமுண்டாகும். இப்பொழுது அங்குபோய்ப்பார்த் தால் இரண்டுவரிசையாக ஒருமைல் நீளம்வரையில் இரண்டு உப்பரிகைகள் உள்ள மண்டபங்களும், யானைக்கூடங்களும், சத்திரங்களும், பெரிய பெரிய அரண்மனைகளும், கடைத் தெருக்களும், கோட்டைகளும், விசாலமான வீதிகளும், அற்புதமான சிற்பவேலைகளமைந்த பல கட்டிடங்களும், ஜல வசதிக்குரிய சாதனங்களும் முற்காலத்தில் மிகவும் செவ் வையாக அமைந்திருந்தன என்பது தெரியும்.

மிகவும் அழிந்துபோன நிலைமையிலும் அவை பார்ப் பவர்களுக்கு மிக்க ஆனந்தத்தையும் வியப்பையும் தரு கின்றன. சரியான நிலைமையில் அவை ஜனங்களுக்கு இன்ன விதமான ஆனந்தத்தை விளைவித்திருக்குமென்பதை நாம் ஊகித்தே அறியவேண்டும். இவையெல்லாம் பழையகாலத்து இந்தியர்களுடைய நாகரிகத்தின் சிறப்பை ஒருவாறு தெரி விக்கின்றன.

**இலக்கணம்.**—த், ட், ற், இன்—இவை இறந்தகால இடைநிலைகள்; கின்று, கிறு, இவை நிகழ்கால இடைநிலைகள்; ப், வ், இரண்டும்

எதிர்கால இடைநிலைகள். இவைகளுக்கு மேலேயுள்ள பாடத்திலிருந்து உதாரணங் கொடுக்க.

**குறிப்பு.**—ஆலயம்-கோயில்; உன்னதமான-உயரமான; கொடுமுடி-சிகரம்; திருவிழா-உற்சவம்; திறமை-சக்தி; ஈசான்னியம்-வடகிழக்கு; அஷ்டதிக்கஜங்கள்-எட்டுத்திக்குக்களையும் காக்கும் யானைகள்; வியப்பு-ஆச்சரியம்.



## 25. தவளை.

**த**வளையானது நிலம் நீர் இரண்டிலும் வாழும் ஒருவகை விசித்திரமான ஜந்து. வாத்துக்கு இருப்பதுபோல் அதன் காலில் மெல்லிய தோல் இருப்பதால் ஜலத்தில் அது நன்றாக நீந்தும். நிலத்தில் ஓடாமல் வேகமாகத் தத்தித் தத்திச் செல்லும். அதன் பின்கால்கள் நீளமாகவும் முன்கால்கள் குட்டையாகவும் இருப்பதால் அவ்வாறு குதித்துக் குதித்துச் செல்லுகிறது.


பார்ப்பதற்குத் தவளை அழகாயிராது. ஒருவருக்கும் ஒருவிதமான தீங்கையும் அது செய்யாது. தோட்டக்காரர்களுக்குத் தவளையினால் மிக்க உதவியுண்டு; தோட்டங்களில் உள்ள பயிர்களையழிக்கும் பூச்சிகளையும், புழுக்களையும் தவளை தின்று பயிரைப் பாதுகாக்கும்.

தவளையின் மேல்தோல் மிகவும் குளிர்ச்சியானது; கடற்பாசியைப்போல் ஜலத்தை இழுத்துக்கொள்ளும் சக்தி

அதற்கு உண்டு; ஈரமாயுள்ள இடங்களிலேயே தவளை பெரும்பாலும் வசிக்கும்; காய்ந்த பூமியில் அதை அதிககாலம் விட்டுவைத்தால் இறந்துபோம்.

தவளைக்கு நாக்கு நீளமானது; பசைபோன்ற ஒருவிதமான நீர் அதில் ஊறும்; ஏதேனும் ஒரு பூச்சி அருகில் வந்தால் தவளை நாவை நீட்டும்; அப்போது அதன் நாவில் ஊறும் பசைநீரில் பூச்சியானது ஒட்டிக்கொள்ளும்; உடனே தவளை அதை உள்ளே இழுத்துக்கொண்டு தின்றுவிடும்.

ஆறுகளில் புது வெள்ளம் வந்து வயல்களிலெல்லாம் பாய்ந்தவுடன் தவளைகள் கத்தும்; முட்டையிலிருந்து தவளையுண்டாகிறது. கீழேயுள்ள படத்தில் பல தவளைமுட்டைகள் இலையொன்றில் தொங்குவதைக் காட்டியிருக்கிறோம்.



முட்டையிலிருந்து வெளிப்படும்போது தவளையானது கால் இல்லாமல், தலையையும் வாலையும் மட்டும் பெற்று ஒரு மாதிரியான புழுவைப்போலிருக்கிறது. அப்போது அது தண்ணீரில் மாத்திரமே மீனைப்போல் நீந்திக்கொண்டிருக்கும். படத்திற் காட்டியுள்ளபடி ஒரு மாதத்துக்குப்பிறகு பின்னங்கால்கள் இரண்டும் அதற்கு முளைக்கின்றன. அப்போதும் அது ஜலத்தில் நீந்திக்கொண்டுதானிருக்கும். இலைகளும்,

நீர்ப்பூண்டுகளுமே அந்நிலையில் அதற்கு உணவாக உள்ளன. மறுபடி ஒரு மாதத்துக்குப் பிறகு முன்னங்கால்களிரண்டும் உண்டாகின்றன. அப்போதும் தவளை ஜலத்தில் நீந்திச் செல்லுமேயல்லாமல் நிலத்தில் தத்திச் செல்லாது. கொஞ்ச காலத்தில் அதன் வால் வரவரக் குறைந்து நாளடைவில் முற்றிலும் போய்விடுகிறது. அதற்குப் பிறகுதான் தவளைக்குச் சரியான வடிவம் ஏற்படுகிறது. அப்போது நிலத்தில் அது நன்றாகக் குதித்துச் செல்லும். அதன் ரூபபேதங்கள் யாவும் படத்தில் விளக்கப்பட்டுள்ளன. கிணறுகளிலும் தவளைகள் வாழுகின்றன.

**இலக்கணம்.**—அ, உம் இரண்டும் பெயரெச்ச விகுதிகள். அ, காலங்காட்டும். உம் என்பது இடைநிலையில்லாமல் தானே எதிர்காலத்தைக் காட்டும் காய்ந்த: இதில் அ, பெயரெச்சவிகுதி. இறந்தகாலத்தை த் என்னும் இடைநிலை தெரிவிக்கிறது. வளரும்: இங்கே உம் என்னும் பெயரெச்ச விகுதி எதிர்காலத்தைக் காட்டுகிறது. இ, ய், அ, உ, இன், ஆல் இவை வினையெச்ச விகுதிகள். இ, ய், இரண்டும் இறந்தகாலத்தைக் காட்டுகின்றன; உ, இடைநிலையோடே கூடி இறந்தகாலத்துக்கு வரும்: உதாரணம்: தத்தி, போய், தின்று. அ, என்பது முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்ச விகுதி; உதாரணம்: வர. இன், ஆல் இரண்டும் எதிர்காலத்தைக் காட்டும்; உதாரணம்: வரின், வைத்தால்.

**குறிப்பு.**—விசித்திரமான-வேடிக்கையான; முளைக்கின்றன-உண்டாகின்றன; உணவு-ஆகாரம்; ரூபம்-வடிவம்.

## 26. துருவன் என்னும் பாலபக்தன்.

இந்தியாவின் வடபாகத்தில் மதுராபுரி என்ற ஒரு நகரம் உண்டு. அதில் வெகுகாலத்துக்கு முன் ஓர் அரசன் செங்கோல் செலுத்திவந்தான். அவன் இரண்டு ஸ்திரீகளை மணஞ் செய்துகொண்டான். மூத்தவளிடம் ஒரு புத்திரனும் இளையவளிடம் ஒரு புத்திரனும் அவனுக்குப் பிறந்தார்கள். அவர்களுக்கு முறையே துருவன் என்றும், உத்தமன் என்றும் பெயர்.

அந்த இரண்டு புத்திரர்களும் நன்றாக வளர்ந்துவந்து ஐந்தாம் பிராயத்தில் கல்வி கற்க ஆரம்பித்தார்கள்.

ஒருநாள் அரசன் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கையில் உத்தமன் அவன் மடியில் உட்கார்ந்தான்; அதைக்கண்ட துருவன் தானும் உட்கார விரும்பி அரசனுக்கு அருகில் போய் அவன் மடியில் உட்கார யத்தனித்தான். அப்போது அரசன் பக்கத்தில் அவனுடைய இளைய மனைவி இருந்தனள். தன் மகனோடு துருவனும் உட்காருவதில் அவள் வெறுப்பை அடைந்து அதை முகக்குறிப்பால் அரசனுக்கு அறிவித்தாள்.

மன்னவன் அவளுடைய மனம் கோணுமல் இருக்க வேண்டுமென்று நினைத்து, துருவனுக்கு உட்கார இடங் கொடுக்கவில்லை. அப்போது துருவன் வருத்தத்தோடு சிறிதுநேரம் நின்று அப்பால் அழுதுகொண்டே தன் தாயிடம் சென்றான்.

அழுதுகொண்டுவரும் குழந்தையைக் கண்ட அவள், அவனை என்னவென்று விசாரித்தாள். அவன் நடந்த விஷயங்களை அவளிடம் சொன்னான். அவள் அவனை நோக்கி, "பிதா மடியின்மீது உட்காரும் பாக்கியத்தை நீ செய்யவில்லை. பூர்வ ஜன்மத்தில் உத்தமன் புண்ணியம் செய்தான். அதனால், ராஜாவின் மடியில் உட்காரும் சிறப்பை அடைந்தான்; நீயும் நல்ல காரியங்களைச் செய்தால் நல்ல பதவியை அடைவாய்" என்று சொல்லி அவனுடைய வருத்தத்தை ஒருவாறு தேற்றினள்.

பிறகு துருவன் தாயைப்பார்த்து, "நான் மேலான பதவியை அடைய முயற்சி செய்யப்போகிறேன். கடவுளிடத்தில் என் மனத்தை நிலைநிறுத்தி அவருடைய அருளினால் நல்ல பயனை அடைந்து திரும்பி வருவேன்; நான் வெளியே காட்டுக்குப்போய்த் தவம் செய்ய உத்தரவு கொடுக்கவேண்டும்" என்று வேண்டினான்.

அவனுடைய அபிப்பிராயத்தை மாற்ற முடியாமல் அவனுடைய அன்னை அவனுக்கு உத்தரவு கொடுத்து அனுப்பினாள்.

ஐந்து வயதுகூட பூர்த்தியாகாத அச்சிறுவன் அரண்மனையை விட்டு வெளிக்கிளம்பினான். பல மலைகளைத் தாண்டி ஒரு காட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே சில முனிவர்கள் தவம் செய்துகொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டு அவன் வணங்கி நின்றான்; அப்போது அவர்கள் அவனுடைய வயதையும் அடக்க ஒடுக்கத்தையும் கண்டு ஆச்சரியம் அடைந்து, 'நீ யார்? இக்காட்டிற்கு நீ தனியாக வருவதற்கு என்ன காரணம்?' என்று அவனைக் கேட்டார்கள். உடனே அவன் அரண்மனையில் நடந்த விஷயத்தைச் சொல்லி "இதுவரையில் ஒருவரும் அடையாத மேலான பதவியை நான் அடைவதற்கு ஏற்ற உபாயத்தை நீங்கள் எனக்குச் சொல்லவேண்டும்; அதற்காகவே நான் உங்களை நாடி வந்தேன்" என்று வணக்கமாக உரைத்தான். அப்போது அவர்கள், "பகவானை நீ ஆராதித்து வந்தால் உன் எண்ணம் கைகூடும்; அவரையே நீ அடைக்கலமாகக் கொள்ளவேண்டும்" என்று கூறினார்கள்.

முனிவர்களுடைய உபதேசத்தைக் கேட்ட துருவன் யமுனாதீரம் போய் மனவுறுதியுடன் பகவானைக் குறித்துத் தவம் செய்தான். அவனுடைய தவத்தைக் கெடுக்க அநேகர் பலவிதமாக முயற்சி செய்தார்கள்; ஆனால் அவன் சிறிதும் கலங்காமல் தவத்திலேயே காலத்தைச் செலுத்தி வந்தான்.

அவனுடைய பிடிவாதமான பக்தியைக் கண்டு திருமால் மகிழ்ந்தார். பிறகு அவர் அவனுக்கு முன்னே தோன்றி, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். அப்போது அவன் 'என்னைக் கேட்கவேண்டுமா? என்னுடைய எண்ணம் அவ்விடத்துக்குத் தெரியாதா?' என்று சொன்னான்.

பின்பு திருமால், அதுவரையில் ஒருவரும் அடைந்திராத மிகவும் மேலான பதவியை அவனுக்கு அளித்தனர்.

**இலக்கணம்.**—ஒரு வாக்கியத்தில் பெரும்பாலும் எழுவாய் முதலிலும், பயனிலை கடைசியிலும், செயப்படுபொருள் வினைக்கு முதலிலும் வரும். அவன் இரண்டு ஸ்திரீகளை மணஞ் செய்து கொண்டான்: அவன்—எழுவாய்; கொண்டான்—பயனிலை; ஸ்திரீகளை—செயப்படுபொருள். சில சமயங்களில் இந்த முறை

மாறி வருவதும் உண்டு. உதாரணம்: நடந்த விஷயங்களை அவன் சொன்னான். செயப்படுபொருள் முதலிலும், எழுவாய் பின்னும் வந்துள்ளன.

குறிப்பு.—மணம்-விவாகம்; பிராயம்-வயது; பதவி-நிலைமை; தேற்றினள்-ஆறுதல் செய்தாள்; அன்னை-தாய்; நாடி-தேடி; திருமால்-மகாவிஷ்ணு.

## 27. இடியும் மின்னலும்.

மழைக்காலத்தில் சில சமயங்களில் ஆகாயம் முழுவதும் மேகத்தால் மூடப்பட்டிருப்பதையும், எல்லாத் திசைகளும் இருளடைந்திருப்பதையும் நீங்கள் பார்த்திருக்கலாம். அப்படிப்பட்ட வேளைகளில், கண்கூசும்படியான வெளிச்சத்தைக் கொடுத்துக்கொண்டு உடல் நடுங்கும்படியும், காது செவிடாகும்படியும் பலமான ஓசை உண்டாவதையும் நீங்கள் கேட்டிருக்கலாம். அந்த வெளிச்சத்திற்கு மின்னலென்றும் சத்தத்திற்கு இடியென்றும் பெயர். மழை பலமாகப் பெய்யும்போது ஒரு பிராணியும் வெளியே வராது; பட்சிகள் யாவும் கூடுகளில் அடைந்திருக்கும்; காற்றின் பலமான ஓசையினால் வேறோர் ஒலியும் காதில் விழுவதில்லை. எங்கே பார்த்தாலும் பளீர் பளீரென்ற காந்தியோடுகூடிய மின்னலும், உலகமே அழிந்துவிடுமோ என்று நினைக்கும்படி மிகவும் பயங்கரமான சத்தத்துடன் இடியும் திடீரென்று உண்டானால் யார்தான் பயப்படமாட்டார்கள்?

சில சமயங்களில் ஆகாயத்தில் ஏதேனும் ஒருபக்கத்தில் மட்டும் வெகுதூரத்திற்கு அப்பால் மின்னலின் வெளிச்சம் தெரியும்; அப்போது ஜனங்கள் அதைக் கண்டு பயப்படாமல் மிகவும் ஆனந்தமாக அதை நோக்கிக்கொண்டிருப்பார்கள். சில சமயங்களில் வட்டமாகவும், வேறு சில சமயங்களில் வளைந்து வளைந்தும், மற்றும் சில வேளைகளில், கம்பிபோல் நீண்டும், பின்னும் சில காலங்களில் பாயைப்போல் சுருண்டும் பலவாறு ஆகாயத்தில் வெளிச்சம் காணப்படும்.

பூனைத்தோலின்மேல் நாம் ஊசிக்காந்தத்தைத் தேய்த்தால் அதிலிருந்து மின்சாரம் உண்டாகி அருகிலுள்ள சருகுகளை

யும், கடிதத் துண்டுகளையும் இழுத்துக்கொள்ளும்; சில சமயங்களில் நெருப்புப்பொறியும் பறக்கும். மேகத்திலிருந்து மின்னல் உண்டாவது மின்சார சக்தியினாலேதான். அதன் உண்மையைத் தெரிந்துகொள்வதற்கு, பெஞ்சமின் பிராங்க்ளின் என்பவர் ஓர் உபாயம் செய்தார். அவர் மிகவும் பெரிய காற்றாடி ஒன்று செய்து அதில் பட்டுக்கயிற்றைக் கட்டி எடுத்துக்கொண்டு ஒரு மலை மீதேறி அங்கே சஞ்சரித்துக்கொண்டிருந்த மேகத்துக்குள்ளே காற்றாடியை விட்டார். அப்போது பலமான இடியும் மின்னலும் உண்டாயின. மேகத்திலுள்ள சக்தியை அவர் பரீக்ஷித்துப் பார்த்து அதுவே மின்சாரம் என்று நிச்சயித்தார்.

மின்சாரம் நேர்தாது என்றும் எதிர்தாது என்றும் இரண்டு வகைப்படும்; இரண்டும் ஒன்றாகச் சேரும்போது ஒலியும், ஒளியும் உண்டாகின்றன. ஒரேவிதமான மின்சார சக்தியுள்ள இரண்டு பொருள்கள் ஒன்றுசேர்ந்தால் ஒருவிதமான ஓசையும், வெளிச்சமும் உண்டாவதில்லை.

வித்தியாசமான மின்சார சக்தியையுடைய இரண்டு மேகங்கள் சேரும்போதுதான் மின்னலும் இடியும் ஏற்படுகின்றன.

இரண்டுவிதமான மின்சார சக்திகளில் ஒன்று பூமியிலும், மற்றொன்று மேகத்திலும் கலந்திருப்பதுண்டு. மின்சார சக்தி மேகத்தில் அதிகமாக இருந்தால் மிகவும் பெரிய வெளிச்சம் உண்டாகிறது. பிறகு இடியும் பூமியின்மேல் விழுகிறது.

இடி விழும் இடத்தில் பூமியில் செடி, மரம் ஏதேனும் இருந்தால், இருந்த இடம் தெரியாமல் உடனே எரிந்து போம்; அங்கே மனிதனாவது, வேறு ஜந்துவாவது இருந்தால் உடனே இறந்துபோவது நிச்சயம்.

பெரும்பாலும் இடி உயரமான இடங்களிலேயே விழும். இடி விழும்போது பெரிய கட்டிடங்கள் இடிந்து கீழே விழுவதும் உண்டு. மின்னலும், இடியும் உள்ள சமயங்களில் மெத்தை வீடுகளில் இருப்பது அபாயகரமானது. அதற்காக, பெரிய கோபுரங்களிலிருந்தும், உயரமான கட்டிடங்

களிலிருந்தும் நீளமான இரும்புக் கம்பியையாவது செப்புக் கம்பியையாவது கொண்டுபோய் ஒரு கிணறு வரையில் சேர்த்துவைப்பார்கள். இடி விழுமானால் அதை அந்தக் கம்பி இழுத்துக்கொண்டு கிணற்று ஜலத்துக்குள் செலுத்திவிடும். அதற்கு 'இடிதாங்கி' என்று பெயர். இடிதாங்கி ஓரிடத்தில் இருந்தால் இடிவிழும்போது சுற்றுப் பக்கங்களிலுள்ள கட்டிடங்களுக்கெல்லாம் ஒருவிதமான அபாயமும் ஏற்படாது.

இடியும், மின்னலும் ஒரேகாலத்திலேதான் உற்பத்தியாகின்றன; ஆனால் முதலில் மின்னலின் வெளிச்சம் கண்ணுக்குத் தெரிகிறது; பிறகு இடியோசை காதில் விழுகிறது. அதற்குக் காரணம் ஒலியைக்காட்டிலும் ஒளி வேகமாகச் செல்வதுதான். ஒரு விநாடிக்கு வெளிச்சம் 18,000-மைல் வீதமும், சத்தம், 1100-அடி வீதமும் ஓடுகின்றன. சில விசேஷகாலங்களில் வாணவேடிக்கை நடக்கும்போது வெடிகளின் வெளிச்சத்தை நாம் முதலில் பார்க்கிறோம்; சிறிது நேரத்துக்குப் பிறகுதான் வெடிகளின் ஓசை நம் காதில் விழுகிறது. ஆகையினால், எப்போதாவது மின்னலைக் கண்டால் சிறிது நேரத்தில் இடியும் தவறாமல் உண்டாகுமென்பதை நாம் நிச்சயமாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

**இலக்கணம்.**—எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இம்மூன்றுக்கும் ஒரு வாக்கியத்தில் அடைமொழிகள் வரும். பலமான வெளிச்சத்தை அங்கேயிருக்கும் நாம் முதலில் பார்க்கிறோம்: இருக்கும் என்பது நாம் என்னும் எழுவாய்க்கும் முதலில் என்பது பார்க்கிறோம் என்னும் பயனிலைக்கும் பலமான என்பது வெளிச்சம் என்னும் செயப்படுபொருளுக்கும் அடைமொழிகளாக வந்துள்ளன.

**குறிப்பு.**—ஓசை-சத்தம்; ஒலி-சத்தம்; காந்தி-பிரகாசம்; சருகு-காய்ந்த இலை; உபாயம்-தந்திரம்; ஒளி-வெளிச்சம்.

# 28. செய்யுட் பாடம்.

## வெற்றிவேற்கை.

1. தேம்படு பனையின் றிரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவற் கிருக்க நிழலா காதே.

2. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினு மண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.

3. தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.

## மூதுரை.

4. நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

5. தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது.

6. நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கு நீர்ப்பாம்பு—நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

7. மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல
உருவு முயர்குலமு மெல்லாம் திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகுமவள் பிரிந்து
போம்போ தவளோடும் போம்.

8. சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

## நல்வழி.

9. தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்றாற் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே யறி.

10. செய்தீவினை யிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ விருநிதியம்—வையத்
தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்.

11. நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தருஞ்சிவந்த தாமரையாள் தான்.

12. மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.

13. தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே—வேந்தே
ஒறுத்தாரை யென்செயலா மூரெல்லா மொன்று
வெறுத்தாலும் போமோ விதி.

14. கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய்வேண்
செல்லா தவன்வாயிற் சொல். [டாள்

15. பூவாதே காய்க்கு மாமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலு நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு.

---

## நன்னெறி.

16. இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா தழற்கதிரால் தண்ணன்
கதிர்வரவாற் பொங்குங் கடல்.

17. பெரியவர்தம் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியி னிழுதாவ ரென்க—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

18. உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்—மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றன்றோ விளம்பு.

19. தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்.

20. நல்லார் செயுங்கேண்மை நாடோறு நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை யாகாதே--நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம்.

## நான்மணிக்கடிகை.

21. கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்
றொள்ளரி தாரம் பிறக்கும்—பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லார் பிறக்குங் குடி.

22. இன்னாமை வேண்டி னிரவெழுக இந்நிலத்தில்
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

23. திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையின் இன்னாத தில்லை இலமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

24. மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழி யில்லை—தவமும்
அரசிலா ரில்வழி யில்லை அரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்.

25. கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டானில்
துன்னிய கேளிர் பிறரில்லை—மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை ஈன்றாளின்
என்ன கடவுளு மில்.